வெளியீடு 27-7-2005 Issued 27-7-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 11, 2005—தொகுதி 71—எண் 2**

**Friday the 11th March, 2005—Volume 71—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

lative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211, 31'P05
P05.71.2
221636.

328
2005

11-03-2005

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வரவு-செலவுத் திட்டம், 2005-2006, பொது விவாதம்—தொடர்ச்சி | |
| | * திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 131-149, 153-159, 216,218,219 |
| | திரு. மு.க. ஸ்டாலின் | 159-161, 163-165,167-168, 173-174, 178, 180-187, 190, 191, 193-194 |
| | *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 133, 134, 135-136, 142-143, 144, 147, 149-152,153, 158,159,160, 161-163,164,165 174-178, 185, 186, 195-207, 208, 209-229, 231 |
| 2. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 232 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 27, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036**
**2005 மார்ச் 11, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
> சொல்லலும் வல்லது அமைச்சு"

*ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து கடைப்பிடித்தலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும், அமைச்சருக்குரிய திறனாகும்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம் — *தொடர்ச்சி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை தொகுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

226631
சென்னை-600 009



என்ற வள்ளுவனின் வாசகத்தை இந்த மாமன்றத்தில் பலரும் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஓர் அரசுக்கு இருக்கும் வல்லமை என்ன என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காகத்தான் வள்ளுவன் இக்குறளை எழுதியிருக்கிறார். எதிர் தரப்பில் இருக்கிற நாங்கள் அத்தகைய வல்லமை எதுவும் இல்லாதவர்களாகத்தான் இருக்கிறோம். ஆயினும், அரசின் செயல்பாடுகளையும் செலவுகளையும் உன்னிப்பாகக் கவனித்த செயல்படுவதையும், மிகுதிக்கண் மேற்சென்று இடித்து உரைக்கும் பொறுப்பையும் பெற்றிருக்கிறோம். நாங்கள் இல்லாமல் இருந்தால் ஆட்சி பொறுப்பில் இருப்பவர்களுக்கு என்ன நேரிடும் என்பதையும் வள்ளுவனே எடுத்துக் கூறியிருக்கிறார்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

எனும் அந்த எச்சரிக்கையை எங்கள் தரப்பில் உள்ளவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதலமைச்சரும், நிதியமைச்சரும் சொல்லாற்றல் மிக்கவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனினும், அவர்களுடைய அந்தச் சொல்லாற்றல் உண்மையை மறைப்பதற்கு உதவுவதாக அமைந்துவிடக் கூடாது. அதனால்தான்

"பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே
மெய்யுடை ஒருவன் சொலமாட்டானால்
பொய்போலும்மே பொய்போலும்மே"

என்று கூறி வைத்தார்கள். இலக்கியத் துறையில் வல்லவராகவும் நாவன்மை மிக்கவராகவும் விளங்குகிற பேரவைத் தலைவரைப் போன்றவர்களும் இந்த அரசுக்கு அரவணைப்பாகக் கிடைத்திருப்பதால் எல்லையற்ற வல்லமையை இந்த அரசு பெற்றிருக்கிறது. ஆயினும் எங்களுடைய கடமையைச் செய்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் பேரவைத் தலைவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நடப்பு நிதியாண்டுக்கான வருவாய்க் கணக்கில் 30,251.53 கோடி ரூபாய் வரவாகவும், பற்றாக்குறை ரூபாய் 1,404 கோடி ஆகவும், இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 260.41 கோடி ரூபாயாகவும் காட்டப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூபாய் 5,000 கோடி அளவிற்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. விற்பனை வரி, மாநில ஆயத் தீர்வை உள்ளிட்ட வரிகளில் மட்டும் ரூபாய் 4,500 கோடி கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. முதன்மைத் துறை என்று கருதப்படும்



வேளாண்மைத் துறைக்கு 2004–2005 ஆம் ஆண்டில் 882.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நடப்பு நிதியாண்டிற்கு அந்த முதன்மைத் துறைக்கு 854.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டை விட குறைவாகத்தான் இருக்கிறது.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பள்ளிக் கல்விக்கு ரூபாய் 4,348.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. உயர் கல்விக்கு 741.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற நிதியாண்டில் பள்ளிக் கல்விக்கு ரூபாய் 3,937.29 கோடி ஆகவும், உயர் கல்விக்கு ரூபாய் 741.77 கோடியாகவும் இருந்திருக்கிறது. புதிய வரியே இல்லாத பட்ஜெட் என்று பெருமையாகக் குறிப்பிடும் பட்ஜெட் இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதேபோன்று (குறுக்கீடு) என்ன நீங்கள் சொல்வதைத்தான் சொன்னேன். நான் ஒரு வார்த்தைக்கூட சேர்த்துச் சொல்லவில்லை. 854 தான் சொல்லியிருக்கிறீர்கள். போன தடவை 882 என்று கொடுத்திருக்கிறீர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** போன தடவை 825. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறைக்குப் படிப்படியாக ஆண்டிற்காண்டு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது Revenue Expenditure என்ற தலைப்பிலே ஒரு பகுதியிலே வருகிறது. Capital Expenditure என்று இன்னொரு பகுதியிலே வருகிறது. இரண்டையும் பார்க்க வேண்டும். இதனுடைய விளக்கம் Demand, அந்த மானியக் கோரிக்கையினுடைய விளக்கத்தில் இருக்கும். 2003–2004 ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் ரூபாய் 65271 கோடி ஒதுக்கப்பட்டது, ஒட்டுமொத்தமாக Revised Estimate–ல் ரூபாய் 825.49 கோடியாக உயர்த்தப்பட்டது. தற்போது 854.41 அதிகப்படியாகத்தான் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு இரண்டையும் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கையில் கொஞ்சம் மாறுதல் இருக்கும். ஆனால், நீங்கள் இரண்டையும் ஒன்றாகவே போட்டுத்தான் எல்லா இடங்களிலும், ஆரம்பிக்கும்போதே வருவாய்க் கணக்கில் வரவு என்றுதான் ஆரம்பிக்கிறீர்கள். வருவாய்க் கணக்கில் வரவு தனியாகவும், மூலதனக் கணக்கில் வரவு தனியாகவும் சொல்லியிருந்தால் பிரச்சினையே இல்லை. பட்ஜெட்டையே முழுமையாக நீங்கள் பார்த்தீர்களேயானால் 30,000 கோடி என்பதும், 31,000 கோடி என்பதும் மொத்தமாகத்தான் சொல்லியிருக்கிறீர்கள். வருவாய்க் கணக்கில் தனியாக எவ்வளவு, மூலதனக் கணக்கில் தனியாக எவ்வளவு என்று நீங்கள் சொல்லவில்லை. அதைத் தனியாகச் சொல்லியிருக்க வேண்டும்....



D.
VOL. 3 ... 2

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். தனித்தனியாக கூறப்பட்டிருக்கிறது. தனித்தனிப் பகுதிகளில் வருகிறது. தனித்தனியாக கூறப்பட்டிருக்கிறது. தனித்தனிப் பகுதிகளில் வருகிறது. மானியக் கோரிக்கையிலும் வருகிறது. எடுத்துப் பாருங்கள். ஏற்கெனவே அவை உறுப்பினர்களுக்கு—documents are already given to the House.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இரண்டும் சேர்த்து Gross amoun என்பதுதான் கணக்கு. என்றாலும்கூட புதிய வரியே இல்லாத பட்ஜெட் என்று பெருமையாக கூறப்படும் பட்ஜெட் இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது, முதலமைச்சரின் உத்தரவின்பேரில். இதேபோன்று சென்ற முறை தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் இப்படித்தான் வர்ணிக்கப்பட்டிருந்தது. முதலமைச்சரின் உத்தரவின்பேரில் இந்த அரசால் பல வரிச் சலுகைகளை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு அத்தகைய உத்தேசம் எதுவுப் இருப்பதாகக் கூறப்படவில்லை. எனவே, வரியே இல்லாமல் எந்த நிதி ஆண்டிலும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதில்லை. நாப் பயன்படுத்துகின்ற பொருள்கள் அனைத்திலும் வரிகள் பொதிந்து கிடக்கின்றன. உள்ளாட்சி மன்றங்களில் இருந்து, நாடாளுமன்றங்கள் வரை வரிகளோடுதான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு புதிய வரி விதிப்பதற்கான அறிவிப்புகள் இல்லை என்றாலும் மதிப்புக்கூட்டு வரி அமலுக்கு வரும்போது வரிச் சீரமைப்பு இருக்குட என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எப்படியிருந்தாலும், ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வரும் வரிகளை விலக்கிக்கொள்ளப்போவதில்லை அதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. உண்மையில் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் விற்பனை வரி, கலால் வரி போன்ற மறைமுக வரிகள் அளவும் வசூலும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேதான் வருகின்றன. எனவே, வரியே இல்லை என்று யாராலும் கூறமுடியாது. ஆனால் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் அந்த வரிப்பணம் எந்தெந்த வழிகளில் செலவழிக்கப்படுகின்றது என்பதை கண்டறிவதும், கண்காணிப்பதுமே சட்டமன்றங்களின் முக்கியமான கடமையாகவும், பொறுப்பாகவும் இருந்து வருகிறது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் திட்டங்களைத் தீட்டுவதும், நிதிகளை ஒதுக்குவதும் மக்கள் பிரதிநிதிகளின் பணியாக இருந்து வருகிறது. காந்தியடிகள் கனவு கண்ட கிராம இராஜ்ய உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திட்டங்கள் தீட்டப்பட்ட அந்நியர் ஆட்சிக் காலத்தில் மக்களை ஒடுக்குவதற்கும், சுரண்டுவதற்கு



உருவாக்கப்பட்ட துறைகளாகத்தான் காவல் துறையும், வருவாய்த் துறையும் விளங்கி வந்தன. ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு மக்களுக்குப் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தர வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு துறைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்காகவே தனித்தனி துறைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கல்வி, சுகாதாரம், சாலை வசதிகள், மின் வசதி, குடிநீர் வசதி, குடியிருப்பு வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டுதான் ஊரக வளர்ச்சித் துறை, நகர வளர்ச்சித் துறை, மின் துறை, கிராமத் தொழில் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கியோர் நலத் துறை போன்றவை செயல்பட்டு வருகின்றன. ஆனால் இந்தத் துறைகளுக்கான முக்கியத்துவமும், நிதி ஒதுக்கீடும் தேவையான அளவுக்கு இல்லை என்பதைத்தான் இந்த அரசின் நிதிநிலை அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை. கிராமப் பகுதிகள் பொலிவும், வலுவும் இழந்து, வறுமைச்சூழலுக்குத் தள்ளப்பட்டு வருவதால் அங்கு வாழும் மக்கள் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பு போன்றவற்றையும் கைவிட்டுவிட்டு, கூலி வேலை செய்வதற்காக நகரப் பகுதிகளை நாடி ஓடி வரும் அவல நிலை பெருகி வருகிறது. அதன் விளைவாக நகரங்களில் மக்கள் தொகை பெருக்கமும், குடிசைப் பகுதிகள் பெருக்கமும் அதிகரித்து வருகின்றன. திருப்பூர் போன்ற நகரங்களிலும், சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகரங்களிலும் மக்கள்தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. சென்னை மாநகரில் மட்டும் 40 சதவீதம் மக்கள் குடிசைவாசிகளாக மாறி இருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி போன்றவைகளை செய்து கொடுப்பதே பெரும் பிரச்சினையாக மாறியிருக்கிறது. எனவே, நகரங்களில் கிடைக்கும் அனைத்து வசதிகளையும் கிராமப்புறங்களில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் மத்திய அரசு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. 2–1/2 கோடி ஏக்கர் நிலத்திற்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது ஆதிதிராவிடர் நலத் துறைக்கும், கல்வித் துறைக்கும் போதிய நிதி ஒதுக்கவில்லை என்பதாகச் சொன்னார். அதுவும் தவறான தகவல். ஆதிதிராவிடர் நலத் துறைக்குத்தான், அதுதான் நான் ஏற்கெனவே

சொன்னது. நிதி ஒதுக்கீடு Capital Expenditure, Revenue Expenditure இரண்டு பகுதியிலே காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டு பகுதிகளையும் எடுத்துக் கூட்டிப் பார்த்தால்தான் உங்களுக்குச் சரியான தகவல் தெரியும். மூலதனச் செலவிலே Capital Expentiture–லே நிதி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. Revenue Expenditure–ல் வளர்ச்சி, நாங்கள் சிக்கன நடவடிக்கை எடுத்த காரணத்தால் குறைக்கப்பட்டிருக்கும். அதை மட்டும் வைத்துக்கொண்டு குறைந்து விட்டது என்று கூறக்கூடாது.

ஆதிதிராவிடர் நலத் துறையைப் பொறுத்தவரைக்கும் 2003–2004–ல் ரூ.407.10 கோடி ஒதுக்கப்பட்டது. Revised Estimate–ல் ரூ.439.26 கோடியாக உயர்த்தப்பட்டது. அதேபோல் 2005–2006–க்கு ரூ.453.91 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைபோலத்தான் கல்வித் துறையைப் பொறுத்தவரைக்கும் Higher Education Department–க்கு 2003–2004–ல் ரூ.577.40 கோடி, 2004–2005 Revised Estimate–ல் ரூ.645.64 கோடி. அது தற்போதைய பட்ஜெட்டில் ரூ.741.77 கோடியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மத்திய பட்ஜெட்டிலே கிராமப்புறங்களுக்கு நிறைய நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்; 11,000 கோடி ரூபாய் மத்திய பட்ஜெட்டிலே கிராமப்புற வேலை மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். 2–1/2 கோடி ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்கப்படும் என்றும், ஒரு கோடி பேருக்கு அதில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், 11 கோடியே 20 இலட்சம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில்கூட 70 இலட்சம் பேர்களுக்குமேல் புதிய வேலைவாய்ப்புகள் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜவுளித் துறையில் மேம்பாட்டு நிதி Textile Upgradation Fund என்று 3000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வேலைக்கு உணவுத் திட்டத்தில் 11,000 கோடி ரூபாய் ஒதுக்கி வேலைக்கு உணவுத் திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டம், பாரத் நிர்மாண் உணவுப் பதப்படுத்தும் திட்டத்திலே மட்டும் 25 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள், ஜவுளித் தொழிலில் ஒரு கோடியே 30 இலட்சம் வேலைவாய்ப்புகள், கட்டுமானத் தொழிலில் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் என்று நிறைய அவர்கள் அங்கே சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று, கிராமப்புறங்களில்



வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கென்றே திட்டங்கள் வகுக்கப்பட்டு, சட்டம் இயற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதால்தான் குற்றச் செயல்களும் பெருகி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்வோரின் எண்ணிக்கை பெருகி வந்த நிலை மாறி, வேலை கிடைக்காது என்ற விரக்தியில் பதிவுகளைப் புதுப்பிப்பதற்குக்கூட முன்வராத நிலை தோன்றியிருக்கிறது. வேலை தேடிச் செல்பவர்களுக்கு இரயில்வே துறையில் சலுகைகள் வழங்குவதைப்போல, தமிழக அரசும் சலுகைகளை வழங்க முன்வர வேண்டும். வேலையில்லாதவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையையும் உயர்த்திக் கொடுக்க முன்வர வேண்டும். தொழிலாளர் துறையைப் பொறுத்தவரை சீர்திருத்தங்கள் குறித்த செயல் திட்டங்கள் வகுக்கப்படும் என்றும் தொழிலாளர்களின் நியாயமான நலனைப் பாதுகாக்கும் அதேசமயத்தில் மாநிலத்தில் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் சென்ற நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டின் பட்ஜெட் உரையில் அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை. வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதை விட்டுவிட்டு, குற்றங்களைத் தடுப்பதற்காக நிதியைச் செலவிடுகிறோம் என்று கூறுவது தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாக இருக்கிறது. காவல் துறைக்கு முன்னுரிமைக் கொடுத்து அதிக நிதியைச் செலவிட்டு வருவதைப்போலவே, சிறைத் துறைக்கும் செலவிடப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் 91.47 கோடி ஒதுக்கிய அரசு நடப்பு நிதியாண்டிற்கு 96.08 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தக் கணக்கைத்தான் நான் சொல்கிறேன்.

அத்துடன் சிறைத் துறை நிருவாகத்தை நவீனப்படுத்துவதற்கு என்று மேற்கொள்ளப்பட்ட திட்டம் தொடரும் என்றும் அதற்காக 11.76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்யும் வகையில் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. இதில் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களிடமிருந்து பெற்றக் கடன் மட்டுமல்லாமல் வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்கள் நடப்பாண்டில் ரூ. 1037.68 கோடி அளவிற்கு பயிர்க் கடனை வழங்க

முடிந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நிறுவனங்களுக்கு விவசாயிகள் வட்டியுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி 31–3–2004 ஆம் நாள் நிலவரப்படி, ரூ. 2,598 கோடி என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டுவிட்டன. மக்கள் வைப்புத் தொகை திரும்பக் கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். அரசு இதில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். 31–3–2005 ஆம் நாள் நிலவரப்படி மத்திய அரசுக்கு மாநில அரசு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்கள் அனைத்தும் ஒரு புதியக் கடனாகத் தொகுக்கப்பட்டு, வருடத்திற்கு 7.5 சதவீத வட்டியுடன் 20 வருடங்களில் திருப்பிச் செலுத்த வகை செய்யப்பட்டு இருக்கிறது. நெசவாளர் நலனைப் பொறுத்தவரை இலவச வேட்டி சேலைக்காக சென்ற நிதியாண்டில் 173 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த ஆண்டில் 175 கோடியாக மாறியிருக்கிறது. பயன் பெறுவோர் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் மாறாமலே இருக்கிறது. சென்ற நிதிநிலை அறிக்கையில் நாடா இல்லாத தறிப் பூங்காக்கள் ரூபாய் 73 கோடி செலவில் பல்லடம், திருச்செங்கோடு, ஈரோடு ஆகிய ஊர்களில் நிறுவப்படும் என்றும், அதற்கு மத்திய அரசே நிதியுதவி அளிக்கிறது என்றும் கூறப்பட்டிருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் திரும்பவும் அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பேரவையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தைய நாளில் தலைமைச் செயலகத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 9,173 மாணவ, மாணவியர்களுக்கு தலா 900 ரூபாய் வீதம் 85.25 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் வழங்கிய நிகழ்ச்சிதான் அது. Bunkar Bima Yojana காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த சுயக் காப்பீட்டுத் திட்டத்தை மாற்றியமைத்து Bunkar Bima Yojana என்ற புதிய பெயரில் இது செயல்படுத்தப்படுகிறது. அதற்காக, சுய காப்பீட்டுத் திட்டம், புதிய அவதாரம் எடுத்திருக்கிறது என்று நான் கூற மாட்டேன். இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், நெசவாளர் ஒருவருக்கு மத்திய அரசின் பங்காக ரூ. 150 வழங்கப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பங்காக ரூ. 100 வழங்கப்படுகிறது. நெசவாளர்கள் பங்காக ரூ. 130 வழங்கப்பட வேண்டும். அதன்மூலம் மொத்தம் பிரீமியம் 380 ரூபாயாக இருக்கும்.



இதில் நெசவாளர் செலுத்த வேண்டிய தொகையை. மாநில அரசே செலுத்திவிடும் என்று அறிவித்து, முதலமைச்சர் இந்தத் திட்டத்தையே சுவீகாரமாக எடுத்துக் கொண்டிருக்கிறார். இதற்காக, ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாகத்தான் இந்த அரசு செலவிடுகிறது. அந்த நிகழ்ச்சியைக்கூட, தலைமைச் செயலகத்தில் வைத்துதான் நடத்தியிருக்கிறார்கள். புதிய திட்டமாக இருப்பதால், அதைச் சட்டமன்றத்தில்தான் முதலில் அறிவித்திருக்க வேண்டும். எனினும், சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முதல் நாளிலேயே அந்தத் தகவலை வெளியில் தெரிவித்திருக்கிறார்கள். அதன்மூலம், அவை உறுப்பினர்கள் மட்டுமே முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய உரிமை இல்லாமல் போய்விட்டது. 60 வயது நிறைவடைந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம், கடந்த ஆட்சிக் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

*முற்பகல் 10–15*

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டம், 1999 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்தே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இடையில் நிறுத்தப்பட்டாலும், இப்போது மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், உயர்த்தப்படவில்லை. ஆலைகள் மூடப்பட்டு வேலையிழந்து நிற்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும், இந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் சட்டவிரோதமாகக் கதவடைப்பு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்த அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். அந்த உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்காக, கோலப்பன் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட வேண்டும். சமூக நீதியுடன்கூடிய வளர்ச்சியே எங்களுடைய நோக்கம் என்று அறிவித்திருக்கும் இந்த அரசு, தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் போன்ற அடித்தளத்து மக்களின் அல்லலை நீக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

வேளாண் துறைக்கும், ஊரக வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிக அளவிலான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தைக் கூட்டி உரையாற்றும் உரிமைப் படைத்த குடியரசுத் தலைவரும், அனைத்துத் துறைகளையும்

உள்ளடக்கி நிதியொதுக்கீடு செய்யும் அதிகாரம் படைத்தவரும், நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றும் உரிமைப் படைத்தவருமான மத்திய நிதியமைச்சரும், இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் வாயிலாகவே, நம்முடைய அன்னை மொழியாம் தமிழ் மொழியின் கவிதைகளையும், திருக்குறளையும், இந்திய மக்கள் எல்லோரும் செவிமடுக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்திய நாட்டையே இயக்கும் பொறுப்பிலுள்ள இந்த இருவரும், இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதால், அவர்களுடைய முதல்வராகவும் இந்த மாநிலத்தின் முதல்வரே விளங்குகிறார் என்பதாலும் தமிழகத்தையும், தமிழ் மக்களையும் முன்னேற்றுவதற்கு வாய்த்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை, இந்த அரசு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன். நம்முடைய பிரதமரே குறிப்பிட்டு இருப்பதைப்போல, கருத்து மாறுபடுவதற்கும், விவாதித்து முடிவெடுப்பதற்கும் வாய்ப்பளிக்கின்ற உயர்ந்த ஜனநாயக முறையை நாம் கொண்டிருக்கிறோம். விவாதமே கூடாது என்று கருதுவதும், கருத்து வேறுபாடே இருக்கக் கூடாது என்று எண்ணுவதும் நம்முடைய அரசியல் நெறிமுறைக்கே அப்பாற்பட்டதாகும்.

சுனாமி நிவாரணத்திற்காக, ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து 4,800 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டதாகவும், 7–1–2005 அன்று, சென்னையில் பிரதமரைச் சந்தித்தபோது, முதலமைச்சர் இந்தக் கோரிக்கையை அவரிடம் முன்வைத்ததாகவும், ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இதற்காக ரூபாய் 10 ஆயிரம் கோடிக்குமேல் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, மத்திய நிதியிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் நிதியாதாரத்தின் அளவு, 29.5 சதவிகிதத்திலிருந்து 30.5 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையின் முதலாவது இடத்தைப் பெற்றிருப்பது, காவல் துறையாகவே இருக்கிறது. இந்த அரசின் அதிகமான கவனத்தை அந்தத் துறையே ஈர்த்திருக்கிறது. தேசிய அளவிலும், உலக அளவிலும், நம்முடைய காவல் துறை சிறப்பு பெற்றிருப்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

உலகப் பெரும் பணக்காரர்களாக இருந்தாலும், முன்னாள் அமெரிக்க அதிபர்களாக இருந்தாலும் இங்கிலாந்து நாட்டு மகாராணியிடமிருந்து விருதுகளைப் பெறுவதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். 'Bill Gates'கூட, 'Sir' பட்டத்தை, அண்மையில் பெற்றிருக்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த



காவல் துறை அதிகாரிகள், அத்தகைய பாராட்டுகளையும், விருதுகளையும், அதிகமாகவே பெற்றிருக்கிறார்கள். தற்போது, காவல் துறையின் செயல்பாடுகளில் பல குறைகள் கூறப்பட்டாலும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், நடவடிக்கை எடுப்பதிலும் முன்னணியில்தான் இருந்து வருகிறார்கள். இந்த நிதியாண்டில் மட்டும், 1339.33 கோடி ரூபாய் காவல் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற துறைகளில், புதிய நியமனத்திற்குத் தடை இருந்தாலும், காவல் துறைக்கு மட்டும், தங்குதடை இல்லாமல் நியமனங்கள் நடைபெற்று வருகின்றன. சென்ற நிதியாண்டில் மட்டும், 961 பெண் உதவி ஆய்வாளர்களும், 10,737 காவல் பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். காலியாக உள்ள 2,219 பணியிடங்களும் இவ்வாண்டு நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. காவலர் பயிற்சிக் கழகம் ஏற்படுத்த 48 கோடி ரூபாயும், தரமணியில் புதிய அலுவலக வளாகம் கட்டுவதற்கு 30 கோடி ரூபாயும் செலவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விபத்து போன்றவற்றில் மரணமடைய நேரிடும் காவலர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் பெரும் தொகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. காவல் துறையின் உளவுப் பிரிவு வழங்கும் ஆலோசனைகளும், தகவல்களும் இந்த அரசை மட்டுமல்லாமல், ஆளும் கட்சியை இயக்குவதற்கும் பெரிய அளவில் பயன்பட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. எனவே, மற்ற எல்லாத் துறைகளையும்விட காவல் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; அதிக கவனம் செலுத்தப்படுகிறது. காவல் துறை மேற்கொள்ளும் பல நடவடிக்கைகள் தமக்குப் பெருமை அளிப்பதாக இந்த அரசால் நெஞ்சை நிமிர்த்திக் கூற முடிகிறது. எனவே, அந்தத் துறையைப் பெரிதும் சார்ந்திருக்கும் இந்த அரசு மற்ற துறைகளையும் மறந்து விடக்கூடாது என்பதை மட்டும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக காவல் துறையின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டக்கூடாது என்று கூறுவதும், காவல் துறையைக் குறை கூறினால் பொதுமக்கள் மத்தியில் அவர்களுக்கு உள்ள மரியாதையே போய்விடும் என்று கூறுவதும் ஏற்புடையதாக இல்லை.

முற்பகல் 10–20

பொதுவாக முதலமைச்சருக்கு இணையாக வைத்து கருதப்படும் நிலையில் இருப்பவர்கள், அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பவர்கள் மட்டும்தான். சமமானவர்களுக்கு மத்தியில் முதலாவது இடத்தில் இருப்பவர் என்ற பெருமைக்குரியவராகவே முதலமைச்சர் விளங்குகிறார்.

எனினும், அரசின் எந்த முடிவாக இருந்தாலும் அமைச்சரவையின் ஒருமித்த முடிவுதான் அரசாணையாகப் பிறப்பிக்கப்படுகிறது. சென்னையில் நடைபெற்ற காவலர்களுக்கு விருது வழங்கும் விழாவில் முதலமைச்சருடன் உயரமான மேடையில் எந்த அமைச்சருக்கும் இடம் அளிக்கப்படவில்லை. முதலமைச்சரின் இடப்புறம் தலைமைச் செயலாளரும் மற்றொரு அதிகாரியும் அமர்ந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இருங்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற விழாக்களில் அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்கள் அனைவரையும் மேடையில் அமர வைக்கும வழக்கம் இல்லை. எந்த அரசுத் துறையின் சார்பில் அந்த அரசு விழா நடத்தப்படுகின்றதோ, தவறாமல் அந்தத் துறையின் அமைச்சர் மேடையில் அமர வைக்கப்படுகிறார். அன்றையதினம் காவல் துறையினருக்கு விருதுகள் வழங்கும் விழா உள் துறையின் சார்பில் நடத்தப்பட்ட விழா. நான் முதலமைச்சர் மட்டுமல்ல, உள் துறைக்கும் நான்தான் அமைச்சர். ஆகவே, வேறு அமைச்சருக்கு அந்த மேடையில் இடம் அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே பேசுகின்றபோது திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஆளும் கட்சியை இயக்குவதற்கும் காவல் துறையைப் பயன்படுத்துவதாக இங்கே தெரிவித்தார். அது உண்மையல்ல. தவறான செய்தி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது, நாட்டில் அமைதியை, ஒழுங்கை நிலைநாட்டுகிற, பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டுக்கு என்று முதலீடு அதிகமாக வருவதற்குரிய தொழில் அமைதி அதிகமாக இருப்பதற்குக் காரணமான காவல் துறைக்கு அதிக நிதி ஒதுக்குவதாகவும், மற்ற துறைகளைப் புறக்கணிப்பதாகவும், குறைப்பதாகவும் கூறினார்கள். அது தவறு.

காவல் துறைக்கு 1,339.33 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மைதான். அதேபோலவே கூட்டுறவுத் துறைக்கு அதைவிட அதிகமாக 1,378.18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. Record break என்று சொல்லக்கூடிய அளவிற்கு, வரலாற்றில் இல்லாத அளவிற்கு மருத்துவத் துறைக்கு, சுகாதாரத் துறைக்கு 1,652.24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே Municipal Administration and Water Supply – குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 1,490.14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



அதேபோல சாலைப் பணிகள் மிக நன்றாக நடக்க வேண்டும் என்ற நோக்கோடு நெடுஞ்சாலைத் துறைக்கு, Public Works Department –ஐப் பொறுத்தவரைக்கும், Public Works Department–க்கு 1,372.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல கிராமப்புற மேம்பாட்டில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, எப்போதும் இல்லாத அளவிற்கு 2,416.07 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கல்வித் துறைக்கு வரலாறு காணாத அளவிற்கு 4,348.01 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட முக்கியமாக இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மீனவர்களுக்கும், வறட்சிப் பணிகள், natural calamities பாதிப்பு போன்றவற்றுக்கு எல்லாம், 2,010.76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நிதி நிர்வாகத்தின் காரணமாக சேமிப்பைப் பெற்றிருக்கிறோம். இடர்பாடுகளையெல்லாம் தாண்டி, நிதிநிலை நெருக்கடியைத் தாண்டி, வளர்ச்சிப் பணிகளுக்கு இப்படி அதிகப்படியான நிதியை ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கவே இல்லை என்று நான் சொல்லவில்லை. வளர்ச்சிப் பணிகளுக்கும் கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இந்தத் துறையில் எப்படி அக்கறை செலுத்துகிறீர்களோ, அதேபோல் செலுத்தவேண்டும் என்றுதான் நான் சொன்னேன்.

அதுமட்டுமல்ல. முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் ஒன்றைச் சொன்னார்கள். அமைச்சர்களை மட்டும்தான் 'மாண்புமிகு' என்று குறிப்பிட முடியும். வேண்டுமென்றால் சட்டப் பேரவை உறுப்பினர்களைச் சொல்லலாம். ஆனால், தலைமைச் செயலாளர் உட்பட எந்த அதிகாரியையும் 'மாண்புமிகு' என்று நாம் குறிப்பிடுவது இல்லை. அமைச்சர்களுக்கு உரிய இடம் அளிக்கப்படாதது மரபுக்கு மாறானதாகவும், வருத்தம் அளிப்பதாகவும் இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது...

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகளை மாண்புமிகு என்று யார்

*அழைத்தார்கள்? எப்போது அழைத்தார்கள்? அப்படி யாரும் அழைக்கவில்லையே!*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அழைக்க முடியாது என்று சொன்னேன். அழைக்க முடியாது என்றுதான் சொன்னேன். அமைச்சர்களுக்கு இருக்கிற சிறப்பு அவர்களுக்கு இல்லையென்று சொல்கிறேன். அழைக்க முடியாதென்றுதானே சொன்னேன். அந்தச் சிறப்பு உங்களுக்கு இருக்கிறது, இல்லையென்று சொன்னால் நான் விட்டுவிடுகிறேன், எனக்கொன்றும் இல்லை. உங்களுக்கு அந்தச் சிறப்பு இருக்கிறது என்று சொல்கிறேன், நீங்கள் இல்லை என்று சொன்னால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்? உங்களுக்கு அந்தச் சிறப்பு இருக்கிறது என்று சொல்கிறேன், இல்லையென்று சொல்கிறீர்களா? விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்களை அழைத்ததாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவர் உள்பட யாரையும் அப்படி அழைக்க முடியாது. தலைமைச் செயலாளர் உள்பட எந்த அதிகாரியையும் அப்படி அழைக்க முடியாது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு நிகழ்வு என்று இருக்கின்றபோது, அந்த அரசு நிகழ்வில் தொடர்புடைய அமைச்சர்கள் அந்த நிகழ்வில் பங்கேற்கிறார்கள், அது முறையானது. அமைச்சரவை பூராவும் அதிலே பங்கேற்க வேண்டுமென்றால், அது வீண் விளம்பரம். விளம்பரத்திற்காக நடைபெறுகின்ற ஆட்சி இந்த ஆட்சி அல்ல. இது, செயல்பாட்டிற்காக, மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதற்காக செயல்படுகிற ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் விளக்கிக் கூற விரும்புகிறேன். பொதுவாக, அரசின் சார்பில் விழாக்களை நடத்துகின்றபோது, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, எந்தத் துறையின் சார்பில் அந்த விழா நடத்தப்படுகின்றதோ, அந்தத் துறையின் அமைச்சரையும், அந்தத் துறையின் அரசு அதிகாரிகளையும், குறிப்பாக, செயலாளர், கமிஷனர் போன்றவர்களை மேடையில் அமர வைப்பது வழக்கம். உள் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் தெரிவித்ததைப்போல, உள் துறைக்கும் நான்தான் அமைச்சர். தலைமைச் செயலாளர் ஏன் மேடையில் அமர வைக்கப்பட்டார் என்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், செயலாளர்களில் உள் துறைச் செயலாளர் இருந்தாலும்கூட, இங்கே சட்டம் ஒழுங்கிற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் தலைமைச் செயலாளர். ஆகவேதான் அவரும் மேடையில் அமர வைக்கப்பட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது, காவல் துறையினரால் நிகழ்த்தப்பட்ட அத்துமீறல்களும், மனித உரிமை மீறல்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. வாச்சாத்தி, மானாம்பதி, சிதம்பரம், தருமபுரி மாவட்டம் போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் மாறாத வடுக்களை ஏற்படுத்திவிட்டன. இந்த நிலையில், எந்தக் குற்றச்சாட்டையும் கூறக் கூடாது என்று முதலமைச்சர் கூறுவது ஏற்புடையதாக இல்லை. பெண்களுக்கெதிரான பாலியல் வழக்குகள் சி.பி.ஐ. போன்ற அமைப்புகளால் விசாரிக்கப்பட்டு வருவது நமக்கு பெருமையளிப்பதாக இல்லை. காவல் துறைக்கு அளிக்கிற முக்கியத்துவத்தைவிட, கல்வி, சுகாதாரம், அரசுப் பணியாளர்கள், வேலைவாய்ப்பு போன்ற துறைகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஓரிரு துறைகளைத் தவிர, மற்ற துறைகளுக்குப் புதிய நியமனங்கள் எதுவுமில்லை என்று பிறப்பிக்கப்பட்டுள்ள அந்த அரசாணையை உடனே திரும்பப் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காலியாக இருக்கும் ஒரு இலட்சம் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டுமென்று ஊழியர் சங்கங்கள் கோரிக்கை வைத்திருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டும். ஒரு இலட்சம் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் குறைந்த சம்பளத்திற்கு தற்காலிகமாக ஆசிரியர்களை நியமித்து வேலை வாங்கும் நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டிற்கே சமாதி கட்டப்பட்டிருக்கிறது. சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்பதும் இந்தப் பிரச்சினையில் இல்லாமல் போய் விடுகிறது. கல்லூரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. கல்வியின் தரம் குறைந்துகொண்டு வருகிறது. கல்வியாளர்கள் பலரும் அதைப் புகாராகச் சொல்லி வருகிறார்கள். எனவே, கல்லூரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை, உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையையெல்லாம் மாற்றி பணியிடங்களை நிரப்புவதும், சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவதும் அரசாங்கத்தின் கடமையாகவும், முன்னுரிமையாகவும் இருக்கவேண்டும். அதற்காகத்தான் அதிக நிதியை ஒதுக்கவேண்டும்.

நான் சென்றமுறை பேசும்போதுகூட குறிப்பிட்டேன். பஞ்சாயத்துப் பெண் தலைவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். எல்லோரையும் பார்த்திருப்பார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

அதிலே முக்கியமான கோரிக்கை மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மின் கட்டணம் எல்லோருக்கும் உயர்த்தப்பட்டது. ஆனால், தேர்தலுக்குப் பிறகு, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மின் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது; அதேநேரத்தில், பஞ்சாயத்துகளுக்குக் குறைக்கப்படவில்லை. முன்பு ஒரு யூனிட்டுக்கு 1 ரூபாய் 60 காசாக இருந்த மின் கட்டணம், இப்போது 3 ரூபாய் 40 காசாக வசூலிக்கப்படுகிறது. யாராலும் கட்டமுடியவில்லை என்று அவர்கள் குரல் எழுப்புகிறார்கள். அதை நாம் மதிக்கவேண்டும், அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; நான் சென்ற முறை பேசியபோது சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். அதாவது, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இங்கேயிருக்கிற உள்ளாட்சி இயக்ககத்தின் ஆணையரின் சுற்றறிக்கையை வைத்து ஒரு கடிதம் எழுதியிருந்தார். பஞ்சாயத்துத் தலைவர்களே, அந்தந்த பஞ்சாயத்துகள் கட்டவேண்டிய பணத்திற்கு 18 சதவிகிதம் வட்டி அவர்களுடைய சொந்தப் பொறுப்பிலேயிருந்து, ஜேபியிலேயிருந்து கட்டவேண்டுமென்று ஓர் அறிக்கை விட்டிருந்தார்கள். இன்றுவரை அதைத் திரும்பப் பெற்றதாகத் தெரியவில்லை. அதைத் திரும்பப் பெறுவதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, ஊராட்சி மன்றத் தலைவர், அவருடைய சொந்தப் பணத்திலிருந்து கட்டச் சொல்லி சுற்றறிக்கை இல்லை. மின்சாரக் கட்டணத்தை அந்த ஊராட்சி மன்றத் தலைவர் கட்டவில்லையென்றால், மின்சாரத் துறையின் மூலமாக 18 சதவிகிதம் வட்டியைச் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும். அந்த நிலையை மாற்றுகின்ற வகையில் நீங்கள் மின்சாரக் கட்டணத்தை முன்னுரிமை கொடுத்துக் கட்டிவிட வேண்டுமென்றுதான் அந்தச் சுற்றறிக்கையில் இருந்தது. அவர் கூறியதுபோல, அவர்களுக்கு அந்தக் குறிக்கோளோடு அந்தச் சுற்றறிக்கை அனுப்பப்படவில்லை.

முற்பகல் 10–30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, அந்தக் கடிதத்தையே உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். இங்கே, அவை முன்னவர் அவர்களிடத்திலே கொடுத்தேன். அதனுடைய எண்கூட இன்னும் என்னிடத்திலே இருக்கிறது. வட்டித் தொகையினை ஊராட்சி நிதியிலிருந்து கணக்கு எண் 1 செலுத்தக்கூடாது என்றும், அரசால்



தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும், இதனால் ஊராட்சித் தலைவர்கள் இதுபோன்றவற்றைத் தவிர்த்து தெளிவாக அவர்தான் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அந்த எண் எல்லாம் நான் உங்களிடத்திலே இங்கே முன்பே கொடுத்திருக்கிறேன். இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக்கூட கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதன் பொருள் என்னவாக இருக்குமென்றால், Panchayat President – ஊராட்சித் தலைவர் என்ற பதவியின் பொறுப்பில் இந்தப் பதவியைப் பயன்படுத்தி அவர் கட்டவேண்டுமேயொழிய தனிப்பட்ட முறையில் அவர் வீட்டிலிருந்து கொண்டுவந்து கட்டவேண்டுமென்ற பொருள் அல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விளக்கம் வந்துவிட்டால் மகிழ்ச்சி. ஆனால், உண்மை அதுவல்ல. தெளிவாக எல்லா பத்திரிகைகளிலும்....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய மின் கட்டணப் பாக்கி ஏறத்தாழ ரூ.200 கோடிக்கு மேல் அதிகமாக நிலுவையில் இருந்ததன் காரணமாக, அதனை வசூல் செய்யவேண்டிய கட்டாயத்தின் காரணமாக—ரூ.200 கோடிக்குமேல் இன்னும் பல ஊராட்சி மன்றத் தலைவர்கள் நிதியிருந்தாலும் மின் கட்டணத்தைக் கட்டுவதில்லை. அதற்கு, அந்தப் போக்கினை மாற்றவேண்டும் என்பதற்காகத்தான், அந்த மின்கட்டணத்தை ஊராட்சி மன்றத் தலைவர்கள் கட்டவேண்டுமென்று அறிவுறுத்துகின்ற வகையிலேதான் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆகவே, நான் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று அவை முன்னவருக்கு உங்களுடைய அமைச்சரே பதில் சொல்லிவிட்டார். அறிவுறுத்துவதற்காக, செய்ததாகச் சொல்லிவிட்டார். பரவாயில்லை.

இப்போது, மதிப்புக் கூட்டு வரியைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும்போது, அதனுடைய சிறப்புகளைப் பற்றியும் அதனால் உள்ள அனுகூலங்களைப் பற்றியும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

மதிப்புக் கூட்டு வரியைப் பொறுத்தவரையில், 1960–களிலே பிரேசில் நாட்டில் அது முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது, அமல்படுத்தப்பட்டது. 1970–களில் ஐரோப்பிய நாடுகளில் அது அறிமுகப்படுத்தப்பட்டது, அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது உலகம் முழுவதும் 130–க்கும் அதிகமான நாடுகளில் அது அமல்படுத்தப்பட்டிருக்கிறது. China, Sri Lanka போன்ற நாடுகளில் எல்லாம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது; வெற்றிகரமாக நடைபோட்டு வருகிறது.

நம்முடைய நாட்டிலேயும் இதைப்பற்றியெல்லாம் விவாதம் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. 1995 ஆம் ஆண்டே முதலமைச்சர்கள் மாநாட்டை அன்றைய நிதியமைச்சர் மன்மோகன் சிங் அவர்கள் கூட்டினார்கள். அப்போதே விவாதம் தொடங்கியது என்றாலும்கூட 1999–க்கு பிறகு தொடர்ந்து பல கூட்டங்கள் நடந்திருக்கின்றன.

1999 ஆம் ஆண்டு அதிகாரம் பெற்ற குழு, முதலமைச்சர்கள் கூட்டத்திலே அதிகாரம் பெற்ற குழு என்று ஒன்று அமைக்கப்பட்டது. அதிலே, மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டது. அந்த அதிகாரம் பெற்ற குழுவிற்குத் தலைவராக மேற்கு வங்க நிதியமைச்சர் ஆசிம்குமார் தாஸ் குப்தா அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு பலமுறை கூடியிருக்கிறது. கூடி பலமுறை விவாதித்து, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு கொண்டுவரப்படும் என்பதை அவர்களாகவே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு தானாகவே சொன்னதல்ல, சொல்லும்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொண்டுவிட்டு, இன்றையதினம் அதை தள்ளிப்போடலாம் அல்லது நான் சிலருடைய கருத்துகளை கேட்கவேண்டும் என்று சொன்னால்—இந்த ஆண்டு ஜனவரி மாதம் இங்கே அந்தக் குழுவினுடைய கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அதிலே, அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், வர்த்தக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், வர்த்தகச் சபையைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டார்கள். வர்த்தகச் சபைகள் சார்பிலே பேசியவர்கள், நான் அறிந்தவரையில் ஒரே ஒரு சபையைத் தவிர வேறு யாரும் அதை எதிர்க்கவில்லை.

அதேபோல, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், மிக மிகப் பெரும்பான்மையானவர்களில் ஒரே ஒருவர் மட்டும் 3 மாதம் அவகாசம் கேட்டார் என்று சொன்னார்கள்; அத்தனைபேரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆக, இவ்வளவு பேர் ஏற்றுக்கொண்டபிறகு,



நாமும் அமல்படுத்துகிறோம் என்று சொல்லிவிட்டு, இன்றையதினம் அதை இப்போது அமல்படுத்தவில்லை; ஒருமித்த கருத்து வரவேண்டுமென்றால், ஒருமித்த கருத்து என்றால் என்ன? யாரிடத்திலே ஒருமித்த கருத்து எதிர்பார்க்கிறீர்கள்? ஏன் அதை காலம் தாழ்த்துகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய நிதியமைச்சர் தமிழகத்தில் ஒரு கூட்டத்தையே அதற்காகக் கூட்டினார். VAT Committee, Chairman Das Gupta அவர்களும் அதற்கு வந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் அனைத்து அரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளவேண்டுமென்றும் அவர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டு இருந்தன. ஆனால், அதில் காங்கிரஸ் கட்சியினுடைய பிரதிநிதிகள்தான் வந்தார்களேயொழிய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதிநிதிகள், மைய அமைச்சரே கூட்டிய கூட்டத்திற்கு வரவில்லை. M.D.M.K. வரவில்லை, D.M.K. வரவில்லை, C.P.I. வரவில்லை, இந்திய முஸ்லீம் லீக் வரவில்லை, C.P.I. (M) மட்டும் வந்தது. அவர்கள் கூறிய கூற்றுகூட traders–க்கு—வணிகர்களுக்கு— பாதிப்பில்லாத அளவிற்கு, அவர்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு அவர்களையும் அரவணைத்துச் செல்வதென்றால், அந்த மதிப்புக் கூட்டு வரியைக் கொண்டுவரலாம் என்று சொல்லிவிட்டார்கள். டில்லியிலே மதிப்புக் கூட்டு வரி சம்பந்தமான கூட்டங்கள் நடக்கின்றபோது அங்கு அதற்குச் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு 1998-ல் தமிழகத்தில் இருந்த ஆட்சி, தி.மு.க. ஆட்சி. அன்று ஆங்கு பங்கேற்று அதற்குச் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு, தற்போது மைய அமைச்சர் கூட்டுகிற அந்தக் கூட்டத்திற்கு வராமல் புறக்கணித்து, அந்த ஒருமித்த கருத்து உருவாக வேண்டும் என்பதற்காகவே மத்திய நிதியமைச்சராலும், மதிப்பு கூட்டு வரி குழுவினுடைய தலைவராலும் கூட்டப்பட்ட கூட்டத்தில் யாருமே பங்கேற்கவில்லை.

முற்பகல் 10–35

அவையில் தி.மு.க. தன்னுடைய கருத்து என்ன என்பதைச் சொல்லட்டும். P.M.K. அவர்களுடைய கருத்தைச் சொல்லட்டும். C.P.I. அவர்கள் கருத்தைச் சொல்லட்டும். மதிப்புக் கூட்டு வரி வரலாமா என்ற கருத்தைத் தெளிவுபட இங்கு ஒவ்வொருவரும் கூற வேண்டும். மதிப்புக் கூட்டு வரியை ஆரம்ப நேரத்திலே மைய அரசு கொண்டு வரவில்லை. இதை மாநிலங்கள் ஒருங்கிணைந்து கொண்டு வருவதாக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறினார்கள். ஆனால், நடந்த உண்மை அது கிடையாது. மாநிலங்களைப் பொறுத்தவரைக்கும் பல மாநிலங்கள் மைய அரசினுடைய சில எதேச்சாதிகாரமான அணுகுமுறையை மறுத்தன.

VAT வருகின்றபோது தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 1,200 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். குறைந்தபட்சம் என்பது தெளிவாக்கப்பட்டது. அந்த 1,200 கோடி ரூபாய் இழப்பை மைய அரசு compensate செய்ய வேண்டும். Continuous compensation till the VAT loss is set right என்று கோரப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் அப்படித்தான் கோரினார்கள். ஆனால், non–manufacturing States, உற்பத்தியிலே முன்னணியிலே இல்லாத வடபுலத்து மாநிலங்கள் எல்லாம் VAT வந்தால் வளர்ந்துவிட்ட மாநிலங்களான தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து நாம் செலுத்துகிற பணத்திலிருந்து அவர்களுக்கு வருவாய் கிட்டுகிறது. அந்த மாநிலங்கள் வாழலாம்.

இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்த காரணத்தால் நாங்கள் வற்புறுத்தியது, VAT loss முதல் ஆண்டிலே 100 சதவீதம் தருகிறார்கள், இரண்டாம் ஆண்டும் 100 சதவீதம் வேண்டும், மூன்றாம் ஆண்டும் 100 சதவீதம் வேண்டும், தொடர்ந்து 100 சதவீதம் வேண்டும். VAT இழப்பு என்பதே இல்லாத நிலை என்று கேட்டோம். ஆரம்ப நேரத்தில் ஒத்துக்கொண்டு, பிறகு மைய அரசு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதுதான் நடைமுறையில் இருந்த ஒன்று. தற்போது முடிவு செய்யப்பட்டிருப்பது பெரும்பான்மையான மாநிலங்கள், வடபுலத்து மாநிலங்கள், First year 100%, Second year 75%, Third year 50% என்பதனை பெரும்பான்மையான மாநிலங்கள் ஒத்துக்கொண்டன; தமிழக அரசு ஒத்துக்கொள்ளவில்லை. காரணம் அப்படி VAT loss நமக்கு ஏற்படுகிறபோது, இரண்டாவது ஆண்டு 25 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. அந்த 25 சதவீதம் இழப்பு தொடர்ந்து ஏற்பட்டால் அதற்கான அந்தப் பணத்தை ஈடுகட்ட மைய அரசு முன்வரவில்லை. எங்கே பணத்திற்குச் செல்வது? ஒன்று நாம் புதிய வரி போட வேண்டும், VAT system லே புதிய வரியே போடமுடியாத நிலை; VAT percentage is being fixed at 0, 4 and 12–1/2; இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு விலக்கு வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். இதை எல்லாவற்றையும் மீறி அவர்கள் தருவதற்கு தற்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள்; மைய அரசின் சார்பிலே, அதைத் தருவதாகக் கூடச் சொல்லுகிறார்கள்; It can be considered என்று சொல்லுகிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை இதிலே என்ன?

வணிகர்களைப் பொறுத்தவரைக்கும் தங்களுக்குப் பெரும் பாதிப்பு வரும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக வணிகர்களுக்குப் பாதிப்பு வராத அளவிற்கு அவர்களுடைய turnover 50 இலட்சம் ரூபாய் வரைக்கும் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்றுகூட இப்போது



VAT Committee முடிவு செய்திருக்கிறது. தமிழ்நாட்டில் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தை சிலர் ஆதரிக்கவும் செய்தார்கள் – சில அரசியல் கட்சிகள். அது தெளிவுபட வேண்டும். Because VAT is a subject that is very much pertaining to the economic affairs of the State. இதைப் பொறுத்தவரைக்கும் ஒருமித்த கருத்தோடு VAT ஐ நடைமுறைப்படுத்துகிறபோது இழப்பு நமக்கு வரும். அந்த இழப்பு – தொடர் இழப்பு ஏற்படாமல் இருந்தால் நல்லது. பின்தங்கிய மாநிலங்களுக்குத் தொடர் இழப்பு வராது என்பது உறுதி.

Manufacturing State, நம்மைப் பொறுத்தவரைக்கும் நாம் அதற்கு input credit கொடுத்தாக வேண்டும். உற்பத்தி செய்கின்றவர் வாங்குகின்ற மூலப்பொருட்களுக்கு அவர் செலுத்துகிற வரியை அரசு கொடுக்க வேண்டியிருக்கிறது. Export க்கும் அதேமாதிரி வருகிறது. Manufacturing industries அதிகம் இருக்கிற காரணத்தால் input credit என்ற இழப்பு அதிகம் ஏற்பட்டு, அதனால் நிதிச் சுமை அது ஈடுகட்டப்படாத நிலையில் அதிகமாகிவிடக்கூடாது என்ற அக்கறையில் அதை நாம் ஒருமித்த கருத்தோடு முடிவு செய்தாக வேண்டும்.

இன்னும் ஒன்று exempted category. விபூதிக்கு tax கிடையாது; குங்குமத்திற்கு tax கிடையாது; கற்பூரத்திற்கு tax கிடையாது; சாம்பிராணிக்கு 4% tax மட்டுமே. ஆனால், VAT Committee முடிவு பண்ணியது, நான் ஏற்கெனவே சொன்னது போல majority decision வடபுலத்து மாநிலங்கள் அதிகமாக பயன்படுத்துகிற, கைதூக்குகின்ற முறையில் அவர்கள் முடிவுகளை செய்த காரணத்தால், இதிலே விபூதிக்கும் இப்போது exempted category 0% என்று இருக்கிறது; அது 12–1/2 சதவீத வரிக்கு விபூதி சென்றுவிடும், குங்குமம் சென்றுவிடும், சூடம் சென்று விடும், சாம்பிராணி சென்றுவிடும். இவற்றுக்கெல்லாம் விதிவிலக்கு வேண்டுமென்று நாங்கள் 52–க்கும் மேற்பட்ட பொருட்களுக்குக் கேட்டோம். பத்துப் பொருட்களுக்கு மட்டுமே தரப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பத்துப் பொருட்கள் அதிலிருந்து நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். நாங்கள் இருபது பொருள்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்குக்கூட இதுகாறும் சம்மதம் இல்லை. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதையெல்லாம் கலந்து நாங்கள் பிறகு 12–1/2 சதவீதம் என்று வரி சாம்பிராணிக்கு போட்டுவிட்டார்கள், குங்குமத்திற்குப் போட்டுவிட்டார்கள், விபூதிக்குப் போட்டுவிட்டார்கள் என்று வருகிறபோது அப்போதே அரசியல் கட்சிகள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்; எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். [illegible] it requires a consensus. அவையிலே அனைத்துக் கட்சி[illegible]களும்

226636.
சென்னை-600 008

இருக்கிறீர்கள். இது வரலாமா? இதனுடைய சாதக பாதகங்களை விளக்கி நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஒருமித்த கருத்தோடு வரலாம் என்று நாம் முடிவெடுத்தால், கொண்டு வரலாம். வணிகர்களுக்கு பாதுகாப்பைத் தந்துவிட்டு கொண்டுவரவேண்டும் என்பதற்கும் நாங்கள் வழிவகைகளைச் சொல்லியிருக்கிறோம். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தில் கொண்டு —மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி., V.A.T. வரவேண்டும் என்று கூறுகிறார். இந்தக் கருத்தை மற்றவர்களும் ஒத்துக்கொண்டால், உங்களுடைய தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவருமே ஒத்துக்கொண்டால் — டெல்லியிலே ஒத்துக் கொள்கிறீர்கள். அங்கே ஒத்துக்கொண்டு, தமிழகத்தில் வந்து, இங்கே மௌனிகளாக இருப்பது, இது மக்களை அல்லது எங்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குவதாக ஆகிவிடும். இந்த நிலை மாற வேண்டும்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் கூட்டிய கூட்டத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்கவில்லை, அவர்களுடைய கருத்துகளைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மதிப்புக் கூட்டு வரியை, V.A.T.–ஐ அமல்படுத்துவதில் மிகத் தெளிவான கொள்கையை 1998 ஆம் ஆண்டு, மத்திய அரசு கூட்டிய கூட்டத்தில் நானே கலந்து கொண்டு, எங்களுடைய தலைவர் சொல்லி அனுப்பிய அந்தக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மூன்றாம் தேதி நடைபெற்ற அந்தக் கூட்டத்திலேகூட, சென்னையில் நான் பேசும்போது, V.A.T.–ஐ அனைவரும் வரவேற்க வேண்டும். இங்கே வெள்ளையன் தலைமையிலுள்ள வியாபாரிகள் சங்கம் எதிர்க்கிறது. அவர்களை நிதியமைச்சர் அழைத்துப்பேசி, இதிலே இருக்கக்கூடிய சாதக பாதகங்களை விளக்கி இந்த வரியை அமல்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, V.A.T.–ஐ அமல்படுத்தவேண்டுமென்று திரு. குருமூர்த்தி என்பவர் Finance Secretary ஆக இருக்கும்போது, எங்களுக்குச் சொல்லியிருக்கிறார். அதிலே எந்தக் கருத்து வேறுபாடும் எங்களுக்கு இல்லை.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இதில் என்ன பிரச்சினை என்றால், ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக All Party Meeting was convened by the Union Finance Minister. அதிலே, மைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு பழனி மாணிக்கம்கூட பங்கேற்கவில்லை. இதுதான் முக்கியமான ஒரு பிரச்சினை. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து, மதிப்புக் கூட்டு வரி வரவேண்டும் என்பதுதான் உங்கள் இயக்கத்தினுடைய கருத்து என்றால், அதைத் தெளிவுபடுத்துங்கள். நாம் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவுபடுத்துங்கள் என்று கேட்டீர்கள், திரு. ஆற்காடு வீராசாமி தெளிவுபடுத்திவிட்டார்கள். எனவே, அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, ஏதோ இதிலே, மத்திய அரசு எதேச்சாதிகாரமாக என்று சொல்லிச் சொன்னார்கள். இந்தக் குழுவிற்கு, அதிகாரம் பெற்ற குழுவிற்குத் தலைவர், மத்திய நிதியமைச்சர் அல்ல; மாநில நிதியமைச்சர். மேற்கு வங்கத்தினுடைய மாநில நிதியமைச்சர்தான் அதற்குத் தலைமை தாங்குகிறார். ஆசிம்குமார் தாஸ் குப்தா அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். அவரும், இன்னும் பல விளக்கங்களை உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம் சந்தேகம் எழுப்பியவர்களிடத்திலே, அவர் சொன்ன விஷயம், அமல்படுத்திய பிறகு பிரச்சினைகள் இருக்குமேயானால், வேண்டுமானால் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடலாம். அதில் இருக்கிற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் நாம் விவாதித்து அதற்குத் தீர்வுகாண முற்படுவோம். எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, எல்லோரும் ஒப்புக் கொண்டதாக, இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட அறிவித்திருக்கிறார்கள். ஆக, அப்படி அறிவித்த பின்னாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்னவென்று கேட்டீர்கள். அவர்களும் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். இந்த நிலையில் அதைத் தள்ளிப்போட வேண்டிய அவசியம் என்ன? ஒரேயொரு எதிர்ப்புக்காக அதைத் தள்ளிப்போட வேண்டுமா? ஒரேயொரு சின்ன வர்த்தக சபை எதிர்ப்பிற்காகத் தள்ளிப்போட வேண்டுமா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். உங்களுடைய முடிவிற்கு நான் விட்டுவிடுகிறேன்.

அதேபோல, காவிரிப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, நல்ல முடிவு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத் திட்டம் என்பது, கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம் ஆகியவற்றில் கிட்டத்தட்ட 4,20,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெறுகிற திட்டம் காவிரி, இந்த தமிழ்நாட்டினுடைய life line என்று சொன்னால், ஜீவ ஊற்று என்று சொன்னால், எங்களைப் பொறுத்தவரையில் அந்த இரண்டு மாவட்டங்களுக்கும் பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக அமைந்திருப்பது பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத் திட்டம். அந்தப் பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசோடு ஒரு சுமூகமான பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். நீண்டகாலமாகப் பாக்கியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டும். அதிலுள்ள முக்கியமான பிரச்சினை, ஏற்கெனவே 9 அணைகளை நாம் கட்டியிருக்கிறோம். இன்னும் இரண்டு அணைகளை நாம் கட்டியாக வேண்டும். ஒன்று, ஆனைமலை ஆறு. இரண்டு, நல்லாறு. ஆனைமலை ஆறு அணையைக் கட்டுவதன்மூலமாக, நமக்கு இரண்டரை டி.எம்.சி. தண்ணீர்தான் அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டரை டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். ஏனென்றால், நாம் எதிர்பார்த்த 9 டி.எம்.சி. தண்ணீர் இன்றுவரை கிடைக்கவேயில்லை. அதுமட்டுமல்லாமல், அந்த நல்லாற்றிலே ஒரு அணை கட்டுவதன் மூலமாக, இப்போது மேற்கு நோக்கிப் பாயும் மேல்நீராற்றுத் தண்ணீராக இருந்தாலும், இப்போது புதிதாக வர இருக்கிற ஆனைமலை ஆற்று நீராக இருந்தாலும், எந்த நீராக இருந்தாலும், இன்று மேற்கே போகிறது; சோலையாறுக்குப் போகிறது; சோலையாறு அணைக்குப் போகிறது. அங்கேயிருந்து பரம்பிக்குளத்திற்குப் போகிறது. அங்கேயிருந்து 200 கிலோமீட்டர், மீண்டும் திரும்பி வந்து, கீழே இருக்கிற திருமூர்த்தி அணைக்கு வந்து சேர்கிறது. இந்த நல்லாறு அணையை நீங்கள் கட்டிவிடுவீர்களேயானால், அந்த ஏழரை டி.எம்.சி. தண்ணீரையும், இப்போது புதிதாக வந்து சேர்கிற 9 டி.எம்.சி. தண்ணீரையும் அங்கே தேக்க முடியும். தேக்குவது மட்டுமல்ல, அந்தத் தண்ணீரை நேரே கொண்டு வரலாம். இல்லையென்றால், அந்தத் தண்ணீர் மேற்கே போகும்போது, வெள்ளக் காலங்களிலே என்ன ஆகிறது என்று சொன்னால், அந்தத் தண்ணீர் சோலையாறு அணையிலேயிருந்து வழிந்து ஓடிவிடுகிறது. வெள்ளத்திலே வழிந்து ஓடிவிடுகிறது. அங்கே தேக்கி வைக்கமுடியவில்லை. அணையிலே வைக்கமுடியவில்லை. வழிந்து ஓடிவிடுகிறது. அப்படி வழிந்து ஓடுவதற்கு இடம் கொடுக்காமல், முழுத் தண்ணீரையும் தேக்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றியாகவேண்டும். நீங்கள் சுமூகமாகப் பேசலாம். அதனால் ஒன்றும் பாதகமில்லை. அவர்கள் சில சந்தேகங்களைக் கேட்கிறார்கள். அது பெரிய விஷயம் அல்ல. நாம் பேசித் தீர்வு காணலாம். மணக்கடவுக்கு நாம் போதிய அளவிற்குத்



தண்ணீர் கொடுப்பதில்லை என்பது பெரிய குற்றச்சாட்டு. மணக்கடவிலே போகிற தண்ணீர் கொஞ்சம் குறைவு என்பது உண்மைதான். எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அதற்கு காரணம், நீர் அங்கே உறிஞ்சப்படுகிறது. அந்த உறிஞ்சப்படுகிற நீரை நிறுத்தினால், நிச்சயமாக வெளியிலே விடப்படுகிற தண்ணீர் முழுவதுமாக அங்கே போகும். அவர்கள் கேட்கின்ற தண்ணீரைக் கொடுத்துவிடலாம். அதைப் பேசி சுமூகமாகத் தீர்த்துக்கொள்ளலாம். அதற்குமேல் நாம் பேசுவது முறையாக இருக்காது. சுமூகமாகப் பேசினால் நல்ல தீர்வு காண முடியும். எனவே, அதைப் பேசித் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பாசனப் பாத்தியதைக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

இன்னொன்று, நொய்யல். அது முன்பு ஜீவனுள்ள நதியாக இருந்தது. இப்போது ஜீவன் இல்லாத நதியாக இருக்கிறது. அதனுடைய உற்பத்தி ஸ்தானம் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது; தொண்டாமுத்தூரிலே இருக்கிறது; மேற்கு தொடர்ச்சி மலையிலேயிருந்து கீழேயிறங்கி வந்து, பல ஆறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நொய்யலாக மாறுகிறது. அந்த நொய்யல் இன்றையதினம் மோசமான நிலைமையில் இருக்கிறது. தூர்வாரிச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவை–குற்றாலம் தொகுப்பிலேயிருந்து வரும் நீர், முறைப்படுத்தப்பட்ட பாசன ஏற்பாடு இல்லாமல், அணையோ, மதகோ இல்லாமல் ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுக்கிறது. வைதேகி நீர்வீழ்ச்சி எவ்விதப் பாசனத் திட்டமும் இல்லாமல் ஆயிரம் ஏக்கர் பாசன வசதி செய்து கொடுக்கிறது. அங்கேயிருந்து தண்ணீர், புதுக்காடு வாய்க்காலுக்குப் போய்ச் சேருகிறது. புதுக்காடு வாய்க்காலும் பாசன வசதி இல்லாமல், முறையான பாசன வசதி இல்லாமல், ஒரு ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கிறது. நீலி வாய்க்கால், சுமார் ஆயிரம் ஏக்கர் அளவிற்குப் பாசன வசதி கொடுக்கிறது. இந்த நான்கு பாசனத் திட்டங்களுக்குக் கீழே, சித்திரைச்சாவடி அணை இருக்கிறது. அந்தச் சித்திரைச்சாவடி அணையிலிருந்து நேரடிப் பாசனம் 2000 ஏக்கருக்குக் கிடைக்கிறது. அந்தச் சித்திரைச்சாவடியிலிருந்து வழிந்தோடுகின்ற தண்ணீர், ஆற்றிலே செல்லுகின்ற தண்ணீர், வாய்க்காலிலே செல்லுகின்ற தண்ணீர் எல்லாம் சேர்ந்து 7 குளங்களில் நிரம்புகின்றன. அந்த 7 குளங்கள் மூலமாக 2 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. இதனைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது, அங்கு, தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. சிறு துளி என்கின்ற பெயரில், ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் செயல்படுகிறது. உள்ளபடியே நல்ல முறையிலே அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். சில குளங்களை அவர்கள் தூர் வாரியிருக்கிறார்கள். சில குளங்கள் அந்தச் சிறு துளி அமைப்பினால் தூர் வாரப்பட்டிருக்கின்றன. அது மட்டும் போதாது. தன்னார்வத் தொண்டு நிறுவனத்தோடு, அரசும் முனைந்து செயல்பட்டாலொழிய, இதனைச் செயல்படுத்த முடியாது. எனவே, நீங்கள் தூர் வார வேண்டும். தூர் வாருவது மட்டுமல்ல; சிறிய தடுப்பணைகள் ஆங்காங்கே கட்ட வேண்டும். அங்கே நிலத்தடி நீர்மட்டம் மிகவும் கீழே போய்விட்டது. சிறிய தடுப்பணைகள் கட்டுவதன் மூலமாகத் தண்ணீர்— மேலே வருவதற்கு உதவும்; எனவே, சிறிய தடுப்பணைகள் கட்டி முறைப்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொண்டாமுத்தூர் பகுதியிலே நிலத்தடி நீர் மிகவும் கீழே போய் விட்டது. இன்றைக்கு போர் போடவேண்டுமென்றால், ஆயிரம் அடி போட வேண்டும்; Collector Office-ல் கேட்டால் 330 மீட்டர்ஸ் என்று சொல்லிவிடுகிறார்கள். நிலத்தடிநீர் மிகவும் கீழே போய் இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலே, ஆனைமடுவுக்குப் பக்கத்திலே தாளியூர் பஞ்சாயத்திலே ஆனைமடுவு என்கின்ற இடத்தில் தடுப்பணை கட்டவேண்டுமென்று பல காலமாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு, மதிப்பீடுகள் இன்றையதினம் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த மதிப்பீடுகள் இருக்கின்ற காரணத்தினாலே, உடனடியாக நிறைவேற்ற முன்வரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பெரியநாயக்கன்பாளையம் நஞ்சுண்டாபுரம் பஞ்சாயத்தில், பாப்பநாயக்கன்பாளையத்தில் எஸ்.எப். நெ. 805–ல் தடுப்பணை கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றும் உரிமை நிதியமைச்சருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும், ஆளுநரின் உரையைப் போலவே நிதியமைச்சரின் பட்ஜெட் உரையும் அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே நிதியமைச்சரால் தாக்கல் செய்யப்படுகிறது. இந்த உரைக்கு முழுப் பொறுப்பாகவும், உந்து சக்தியாகவும் விளங்குபவர் முதல்வரே என்பதை நிதியமைச்சரும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. காவல் துறை, திரைப்படத் துறை போன்றவற்றில் முதலமைச்சர் காட்டும் ஈடுபாடும் அக்கறையும் எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது. நிதிநிலைக் குழுக்களால் இறுதி செய்யப்படும் துறைவாரியான முடிவுகளை உள்ளடக்கிய நிதிநிலை



அறிக்கையை, நிதித் துறை செயலாளரின் தலைமையிலான குழு தொகுத்து அறிக்கையாகத் தயாரிக்கிறது. ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும் அந்த அறிக்கையை, தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு நிதியமைச்சரால் பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. அரசியல் ரீதியான முடிவுகளும், வழிகாட்டுதல்களும் இருந்தால்தான், அது அமைச்சரவை தயாரித்த அறிக்கை என்ற சிறப்பைப் பெறுகிறது. மத்திய பட்ஜெட்டைப் பற்றி கருத்து கூறிய ஒரு எதிர்க்கட்சித் தலைவர், ஓர் அரசியல் தலைவர் தயாரித்த பட்ஜெட்டாக இல்லாமல் வக்கீல் ஒருவர் தயாரித்த பட்ஜெட் போல் இருக்கிறது என்று கேலியாகக் குறிப்பிட்டார். நல்லவேளையாக, நம்முடைய பட்ஜெட், ஞாயிற்றுக் கிழமை வக்கீல் ஒருவரால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்று குறிப்பிடாமல் விட்டுவிட்டார். அதிகமான பக்கங்களைக் கொண்ட உரையாக இருந்தாலும் உள்ளடக்கத்தில் ஒன்றுமேயில்லாத பட்ஜெட் உரையாகத்தான் இந்த உரை அமைந்திருக்கிறது. எதற்கும் பொறுப்பு ஏற்காமல், முதலமைச்சரையே எல்லாவற்றிற்கும் பொறுப்பாக்கும்வகையில்தான் பட்ஜெட் உரை தயாரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இதை ஒரு சுனாமி பட்ஜெட் என்று கூறாவிட்டாலும், பினாமி பட்ஜெட் என்று குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஏதோ ஒரு ஏவிவிடப்படும் இயந்திர மனிதனைப் போன்று....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதுகை மோனை அடிப்படையிலே இந்த பினாமி, சுனாமி எல்லாம் தேவையான வார்த்தைகளா அவை? தயவுசெய்து அவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது ஒன்றும் தவறு அல்ல, பினாமி என்றால். அவரே சொல்கிறார், நான் பொறுப்பு அல்ல; இன்னொருவர் பொறுப்பு என்றால்... (குறுக்கீடு) தயவுசெய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 'நான் பொறுப்பு இல்லை' என்று அவர் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். இது எல்லாக் காலங்களிலும் சொல்வது உண்டு. (குறுக்கீடு) இது எல்லாக் காலங்களிலும் சொல்லப்படக்கூடிய செய்தி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆமாம். அதனால் என்ன? அதனால் என்ன? அது என்னுடைய பாய்ண்ட். என்னுடைய பார்வையில் அது பினாமியாக இருக்கிறது. அதில் என்ன தவறு? பினாமி என்று

சொன்னால் தவறா? சுனாமி–பினாமி, இது ஒன்றும் எதுகை மோனை அல்ல. பினாமி என்று சொன்னால் தப்பா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மைய ஆட்சியில்கூட அமைச்சராக இருந்த திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு அமைச்சகம் என்றால், it is having collective responsibility என்ற அடிப்படை ஞானத்தோடு அவர் பேசவேண்டும். ஒரு பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது என்றால் ஒவ்வொரு துறைக்குரிய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனது வழிகாட்டுதலின்பேரில் பட்ஜெட் அமைக்கப்பட்டதாக மாண்புமிகு நிதி அமைச்சர் குறிப்பிட்டதை மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் குறை கூறுகிறார். இங்கேயாவது நான் முதலமைச்சர். அறிவுரை கூறுவதற்கும், வழிகாட்டுவதற்கும் எனக்கு சட்டப்படி உரிமை இருக்கிறது. ஆனால், மத்தியிலே தயாரிக்கப்பட்ட பட்ஜெட், அரசாங்கத்தில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத திருமதி சோனியா காந்தியின் வழிகாட்டுதலின்பேரில் தயாரிக்கப்பட்டதே. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் என்ன நினைக்கிறார்? அது பினாமி பட்ஜெட். உண்மையாக அதுதான் பினாமி பட்ஜெட் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக்கூட சொல்லலாம். அங்கே போய் சொல்லலாம். இங்கே சொல்லி அது பயன் இல்லை (சிரிப்பு) அங்கே சொல்லி இருக்க வேண்டும். ஏதோ ஒரு ஏவி விடப்படும் இயந்திர மனிதனைப் போன்று நிதி அமைச்சர் மூச்சைப் பிடித்துக்கொண்டு இந்த உரையை வாசித்து முடித்திருக்கிறார். இருந்தாலும், அவரை காலி டப்பா என்றோ, நாணயம் இல்லாதவர் என்றோ, வக்கற்றவர் என்றோ கூறும் அளவிற்கு நான் ஓர் உயர்ந்த மனிதனும் இல்லை. அண்ணா அவர்களின் வழிகாட்டுதலின்கீழே இந்த ஆட்சி நடப்பதாக சொல்லிக்கொள்கிறார்கள். அண்ணா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தொடர்ந்து சொல்வார். அந்த கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பதோடு, அவர் ஆட்சிக்கு வந்தபோது, முதலிலே அவர் சொன்னது "வரிகளைக்



குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்" என்று சொன்னார். இங்கே வரியைப் பெருக்கி, வசதியைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக அண்ணா அவர்கள் சொன்ன எதையும் பின்பற்றாத அரசாக இந்த அரசு இருக்கிறது. அண்ணா வழி நடக்காத...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியைப் பெருக்குவதில் தவறு இல்லை. புதிய வரியைப் போடுவதுதான் கூடாது. புதிய வரியைப் போடவில்லை. வரி ஏய்ப்பைத் தடுத்திருக்கிறோம். வரி ஏய்ப்பைக் கண்டுபிடித்து, வருமானத்தைப் பெருக்கி இருக்கிறோம். இதைப் பாராட்ட மனம் இல்லாமல் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக, ஏதோ குறை சொல்ல வேண்டும் என்பதற்காக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுவது அவருடைய ஞானத்திற்கு ஏற்றதல்ல, அவருடைய தகுதிக்கு ஏற்றதல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மொத்தத்தில் இந்த ஆட்சி அண்ணா வழி நடக்கவில்லை என்பதைக் கூறி நான் அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 2006 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பினைத் தந்திருக்கக்கூடிய தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 3 நாட்களுக்கு முன்பு இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குட்டித் தலைவர் என்று எனக்கு ஒரு பட்டத்தை வழங்கி இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் குட்டித் தலைவராகவோ அல்லது ஒரு பெட்டித் தலைவராகவோ, ஒரு சின்னத் தலைவராகவோ, ஒரு பெரியத் தலைவராகவோ இருப்பதற்கு நான் என்றைக்கும் விரும்பியது கிடையாது. எப்பொழுதும் ஒரு சாதாரண தொண்டனாக இருக்கவேண்டும் என்றுதான் நான் விரும்பிக்கொண்டிருக்கிறேன்.

இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையினுடைய முதல் பத்தியை நான் மனதாரப் பாராட்டுகிறேன். காரணம், அய்யன் வள்ளுவர் யாத்த குறள் இடம் பெற்றிருக்கிறது. 2001–2002, 2002–2003, 2003–2004, இந்த 3 ஆண்டுகளில் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையினுடைய புத்தகங்களில் திருக்குறள் இடம்பெற்றிடவில்லை.

மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில்கூட இப்பொழுது திருக்குறள் இடம்பெறத் தொடங்கி இருக்கிறது. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும், இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையில் திருக்குறள் இடம்பெற்றிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்றாகும். இந்த ஆண்டிலேயே தேர்தல் வந்துவிடும் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்ததற்குப் பிறகு அடுத்த ஆண்டுதான் தேர்தல் என்ற முடிவுக்கு மக்கள் வந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10–55*

பக்கம் 9–ல், இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையினுடைய புத்தகத்தில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) 9–வது பக்கத்தில். "வரவு–செலவுத் திட்டத்தின்போது அதிக அளவிற்கான திட்ட ஒதுக்கீடுகளை அறிவித்துவிட்டு, நடைமுறையில் அதை எய்த முடியாமல் இருக்கும் பல மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாட்டில், நாங்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஒவ்வோராண்டும் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கும்மேல், நடைமுறையில் விஞ்சியுள்ளதை உறுதி செய்துள்ளோம்." என்று நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வோராண்டும் நடைமுறையில் விஞ்சியுள்ளோம் என்று குறிப்பிட்டுவிட்டு, உங்களுக்கு சாதகமாக 2002–2003 ஆம் ஆண்டு முதல் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். காரணம், 2001–2002 ஆம் ஆண்டினுடைய, தமிழ்நாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 6040 கோடி ரூபாயை இந்த அரசு எய்த முடியாமல் 5200 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எங்கள் தவறு அல்ல. நீங்கள் உருவாக்கிவிட்ட நிதிச் சீர்கேடு. நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, பலமுறை அவையிலே கூறியிருக்கிறோம். கஜானா காலி என்ற நிலை, கடன் சுமை. கான்ட்ராக்ட்காரர்களுக்கு பணத்தைக்கூட கொடுக்க முடியாத நிலை. இப்படிப்பட்ட நிலையில் மைய அரசும் எங்களுக்கு ஒத்துழைப்பு தரவில்லை. எங்களுக்கு ஒதுக்கிய நிதியைக்கூட காலத்தே தரவில்லை. காரணம், டெல்லியிலே ஒருவேளை நீங்களும் அந்தநேரத்தில் இருந்த காரணத்தாலோ, என்னவோ எங்களுக்கு நிதி கிட்டாத அப்படிப்பட்ட நிலை. இப்படிப்பட்ட நிலையை உருவாக்கிவிட்டீர்கள். இந்த நிலையையெல்லாம் மீறித்தான் தற்போது நாங்கள் வெற்றிச் சாதனைகளை செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. மு.க. ஸ்டாலின்:** ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இதையேதான் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். சரி. வருவாய்க் கணக்கில் முக்கிய செலவினங்கள் என்ற தலைப்பில் சில முக்கியமான துறைகளுக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சிலவற்றை நான் குறிப்பிடுகிறேன். குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி. ஆக, இந்தத் துறைகளுக்கு 2004–2005 ஆம் ஆண்டு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** குடிநீர் வழங்கல். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் சொல்வது record ஆகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியான தகவல் அல்ல. (குறுக்கீடு) குடிநீர் வழங்கல் துறை...(குறுக்கீடு) இல்லை, இல்லை, குறைந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஸ்டாலின் பேசுகிறார் (குறுக்கீடு) அவர் பேசுகிறார். நீங்கள் என்ன பக்கவாத்தியம்? அவர் பேசுவார்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நான் figure–ஐச் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு வேண்டுமானால் தெளிவாகச் சொல்லுங்கள். அதாவது, நிதிநிலை குறிப்பினுடைய பகுதி–I புத்தகத்திலே நீங்களே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி. இந்தத் துறைகளுக்குக் கடந்த ஆண்டு 403 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். திருத்திய மதிப்பீடு 422 கோடி ரூபாய். ஆனால், இந்த ஆண்டு 384 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து, ஊரக வளர்ச்சித் துறை. (குறுக்கீடு) ஊரக வளர்ச்சிக்கு, கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 613 கோடி ரூபாய். இந்த ஆண்டு 384 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பாசனம், வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 607 கோடி ரூபாய். அது இந்த ஆண்டு 535 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையினுடைய புத்தகம், பக்கம் 76–ல் மக்கள் நல்வாழ்வு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும் என்று காத்திருந்தேன். அவர்கள் கூறிய அனைத்துமே தவறு.

Rural Development—ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கெனவே மாண்புமிகு எஸ்.ஆர்.பி. பேசுகிறபோதே சொன்னேன். (குறுக்கீடு) இருக்கிறது, அதில் பல பக்கங்கள் இருக்கின்றன. அதையும் நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு பக்கத்தைப் பார்த்துக்கொண்டு பேசக்கூடாது. Revenue expenditure comes under one title. Capital expenditure is shown in some other place. Both the things are shown very clearly in the Demand Book. The Demand Book has also given to all Members. அவை அனைத்தையும் உறுப்பினர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் 10 தினங்களுக்கு முன்பே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–00

Revenue Expenditure and Capital Expenditure, இரண்டையும் நீங்கள் கூட்டிப் பார்த்தால் அப்போது உங்களுக்குத் தெளிவுபடும். 2003–2004 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறைக்கு 1,927.53 கோடி ஒதுக்கப்பட்டது. அது 2004–2005-லே, Revised Estimate-லே ரூ.2,097.95 கோடியாக உயர்த்தப்பட்டது. தற்போதைய நிதிநிலையில் வரலாறு காணாத அளவிற்கு என்று முன்னரே சொன்னேன், ரூ.2,416.07 கோடி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மை.

அடுத்து, Irrigation Department–ஐப் பற்றியும் சொன்னீர்கள். நீங்கள் தனித்தனியாக, தயவுசெய்து அவை முடிந்த பிறகேனும் நீங்கள் Revenue Expenditure Heading–ஐ எடுத்துப் பாருங்கள், Capital Expenditure Heading–ஐ எடுத்துப் பாருங்கள். Revenue Expenditure, Capital Expenditure இரண்டையும் தனித்தனியாகத்தான் காட்ட முடியும். இரண்டையும் ஒன்றாக, குழம்பு மாதிரி, மசாலா மாதிரி பண்ண முடியாது. தனித்தனியான Heading–ல் இருக்கின்றன. உங்களுக்குத் தகவல் கொடுத்தவர்கள் ஒன்றை மட்டும் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் அவர்களும் படிக்கவில்லை என்று தெரிகிறது. Irrigation Department–ஐப் பொறுத்தவரைக்கும் ரூ.836.72 கோடி 2003–2004-ல் ஒட்டுமொத்தமாக, மூலதனச் செலவிலேயும், வருவாய்ச் செலவிலேயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது Revised Estimate–லே ரூ.913.27 கோடியாக உயர்த்தப்பட்டது. தற்போது அது ரூ.1,042.01 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, Municipal Administration and Water Supply–ஐப் பொறுத்தவரைக்கும் 2003–2004–லே ரூ.1,982.35 கோடியாக இருந்தது. Capital Expenditure as well as Revenue Expenditure put together. Budget Estimate–ஐப் பொறுத்தவரைக்கும் அவர்கள் முன்கூட்டியே வாங்கியிருந்த



கடன், Repayment support by Government-ஏற்கெனவே அந்தக் குடிநீர் வழங்கு துறைக்கு அவர்கள் கடன் வாங்கியிருந்தார்கள். அரசாங்கம் அந்தத் துறையின் வாயிலாக அந்தப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அப்போது கணக்கிலே காட்டப்பட்டது. தற்போது அரசாங்கம் அவர்களுக்குப் பணத்தை துறை வாயிலாகத் தரவில்லை. மாறாக, நேரடியாகவே அந்தப் பணத்தை, Repayment support–ஐ நேரடியாகக் கொடுப்பதற்கு அரசே தற்போது பொறுப்பேற்றுக்கொண்ட காரணத்தால், அது அந்தத் தலைப்பிலே அங்கு வருகிறது.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 76–ல் மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலன் என்ற அந்தத் தலைப்பில் 2000–ல் உயிருடன் பிறந்த குழந்தைகளில் குழந்தை இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 51 ஆக இருந்தது இது 2002–2003-ல் ஆயிரத்திற்கு 44 ஆகக் குறைந்துள்ளது என்று குறிப்பிட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து இதே கால அளவில், மொத்தப் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 19.3-லிருந்து 18.5 ஆகக் குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதிலே என்ன வேடிக்கை என்று கேட்டால், கடந்த ஆண்டு, 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை புத்தகத்திலே என்ன புள்ளிவிவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறீர்களோ அதை அப்படியே இந்த ஆண்டும் வெளியிட்டிருக்கிறீர்கள். ஆகவே, நான் கேட்க விரும்புவது, 2002 ஆம் ஆண்டிற்குப் பிறகு என்ன நிலை? அது புரியவில்லை.

பக்கம் 78–இல், இந்த அரசு மொத்தம் 80.48 கோடி ரூபாய் செலவில் 403 சுகாதாரத் துணை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வகை செய்துள்ளதோடு, 104 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 86.25 கோடி ரூபாய் செலவில் 746 சுகாதாரத் துணை மையங்கள் கட்டி உள்ளதாகக் கூறியிருக்கிறீர்கள். இதுதான் முக்கியம். கடந்த ஆண்டு 86.25 கோடி ரூபாய் செலவிலே 746 சுகாதாரத் துணை மையங்கள் கட்டி உள்ளதாகக் கூறியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு 80.48 கோடி ரூபாய் செலவில் 403 சுகாதாரத் துணை மையங்கள் கட்ட வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறீர்கள். இதில் எது சரி என்பதை விளக்கிட வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டுமே சரிதான்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அதுதான் எப்படி என்று கேட்கிறேன். (குறுக்கீடு) அதுதான் எப்படி என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டினுடைய அந்தத் துறையினுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, அந்தப் பணிகளுக்கு அந்த நிதி ஒதுக்கப்பட்டது. தற்போதைய இந்த நடப்பு ஆண்டிற்கு அந்தத் துறையினுடைய கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிறது. 80.48 கோடி ரூபாய் செலவில் 403 சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் கட்டடங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது ஆயப்பட்டது. அது ஏற்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–05

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது, 86.25 கோடி ரூபாய்க்கு கடந்த ஆண்டில் 746 கட்டடங்கள். இப்பொழுது 80.48 கோடி ரூபாய்க்கு 403 கட்டடங்கள்தான். எனவே, அதைத்தான் நான் கேட்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கூடுதல் தொகை என்பதிலிருந்தே, கூடுதல் நரக் கட்டுப்பாடு, கூடுதல் வசதிகள், கூடுதல் அடிப்படை வசதிகள் more infrastructure facilities என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், 2001–லே உயிருடன் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 51 இருந்தது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டதற்கு answer பண்ணுகிறேன். 2002–2003 ஆம் ஆண்டுக்கான மாதிரிப் பதிவு ஆய்வின்படி, ஆயிரத்திற்கு 44–ஆகக் குறைந்திருக்கின்றது. இப்பொழுது எவ்வளவு இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். 2003–க்குப் பிறகு, 2004–லிருந்து அதாவது இப்பொழுது குழந்தைகளுடைய இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 30.1 என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உணவு மானியத்திற்கு நிதி ஒதுக்கீடு ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கின்றீர்கள். 2001–2002 ஆம் ஆண்டு இந்த உணவு மானியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1540 கோடி ரூபாய். 4 ஆண்டுகளுக்கு முன்பு 1540 கோடி



ரூபாய், இப்போது ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. பக்கம் 3–ல், 3–வது பத்தியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வளர்ச்சிப் பணிகளெல்லாம் கைவிடப்பட்டன என்றும் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். நான் கேட்பது, அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட எந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டன? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள்தான் உங்களுடைய ஆட்சியிலே கைவிடப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், ஏழை எளியோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், சத்துணவில் முட்டை வழங்கும் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இப்படிப் பல்வேறு திட்டங்கள் உங்களுடைய ஆட்சியிலேதான் கைவிடப்பட்டன. அதேபோன்று நமது கிராமம் என்ற திட்டத்தை 15–8–2004 அன்று தொடங்கப்பட்டதாகக் கூறியிருக்கின்றீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட நமக்கு நாமே திட்டத்தினுடைய மறு பெயர்தான் நமது கிராமத் திட்டம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 147 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 18,590 பணிகள் அன்றைக்கு நிறைவேற்றப்பட்டன. இதில் மக்களுடைய பங்கு எவ்வளவு என்று கேட்டால் 51 கோடியே 42 இலட்சம் ரூபாய் ஆகும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு 2003–2004–ல் 1392.64 கோடி கொடுத்து Revised Estimate–ல் 1267.5 கோடியாகக் குறைக்கப்பட்டதுதான். அப்படி குறைக்கப்பட்டதற்குக் காரணம், last year அதாவது loan to Civil Supply Corporation and one time relief to farmers for interest and penal interest விவசாயிகளுடைய வட்டி, penalty கூடுதல் வட்டி ஆகியவை இரத்து செய்ததற்கு one time payment–ஆக அந்தப் பணம் கொடுக்கப்பட்டது. அது கணக்கிலே கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆனால் அதையடுத்து, நடப்பாண்டிலே 1378.18 கோடியாக உயர்த்தித் தரப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கைவிடப்பட்டது, நமது கிராமம் திட்டத்தில் எந்த நடவடிக்கையும் இல்லையென்று சொன்னார். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஓராண்டுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய பகுதியிலிருந்து ஓர் ஊராட்சிமன்றத்தைத் தேர்வு செய்து, அதன்மூலமாக அங்கு வளர்ச்சிப் பணிகளைச் செய்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்

அறிவித்த நமது கிராமம் திட்டத்தின் மூலமாக 12,618 கிராம ஊராட்சிகளிலுமே வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குடிநீர்க் குழாய்கள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் மட்டும் குடிநீருக்கு உத்தரவாதம் அல்ல, கழிவறைகள் கட்டுவதால் மட்டும் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தடுக்க முடியாது, மரக்கன்று நட்டுவிட்டால் மட்டும் அது மரமாக வளர்ந்துவிட முடியாது, பள்ளிக் கட்டடங்கள் இருப்பதால் குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு உத்தரவாதம் இல்லை, குழந்தைகள் நல மையம் இருப்பதால் மட்டும் குழந்தைகள் கல்வி கற்கின்றார்கள் எனக் கருத இயலாது. சுகாதார நிலையங்களில் தடுப்பு மருந்து அளிப்பதால் அனைத்துக் குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மார்களும் தேவையான பாதுகாப்பு பெறுவார்கள் என்று கருத முடியாது. முதியோருக்கு ஓய்வூதியம் வழங்குவதால், சமூகப் பாதுகாப்பை அளிக்க இயலாது. இருந்தபோதிலும், இப்போதும் சிசுக் கொலை, குழந்தைகளை தவறான முறையில் பயன்படுத்துதல், குழந்தைகளைக் கடத்துதல் போன்ற சமூகப் பிரச்சினைகளைக் களைய வேண்டும்; இதன் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட திட்டமே நமது கிராமம் திட்டமாகும்.

முற்பகல் 11–10

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராம ஊராட்சி மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நமது கிராமம் திட்டத்தில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பயிற்சிக்கான அம்சம் இல்லை. நமது கிராமம் திட்டத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகவும், ஒட்டுமொத்த நீடித்து நிற்கக்கூடிய வளர்ச்சிக்கான பயிற்சி வழங்கப்படுகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஊராட்சியின் அடிப்படைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நமது கிராமம் திட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்புகளுடன் வாழ்க்கைத்தரம், மனிதவள மேம்பாடு போன்ற ஒட்டுமொத்த வளர்ச்சியையும் மேம்படுத்தும் பொருட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சாதனை அடிப்படையிலே கிராம ஊராட்சியின் செயல்பாட்டுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படவில்லை. நமது கிராமம் திட்டத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான கிராம ஊராட்சியின் சிறப்பான செயல்பாட்டுக்கும், சிறப்பான முன்னேற்றத்திற்கும் செயல்திறன் அடிப்படையிலான அரசு உதவித் தொகை வழங்கப்படுகிறது.



கிராம ஊராட்சிகள் மேலும் மேலும் சாதனை அடையும் பட்சத்தில் அரசின் ஊக்கத் தொகை கிராம ஊராட்சிகளுக்குக் கிடைக்கும். 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நமது கிராமம் திட்டத்தில், 5 கோடியானது பயிற்சி அளிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் 140 கோடி அந்த 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் பிரித்து, வளர்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக செலவிடப்படுகிறது. மீதம் இருக்கின்ற 55 கோடியானது இந்தப் பயிற்சிப் பணியிலே எந்த கிராம ஊராட்சியில் மிகவும் நல்ல முறையிலே வளர்ச்சி செய்கிறார்களோ, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே மூன்று இலட்சம் அவர்களுக்கு பரிசாக வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் 12,618 கிராம ஊராட்சிகளும், ஒட்டுமொத்தமாக வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமது கிராமம் திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சமத்துவபுரம் திட்டம் கொண்டுவந்தோம் என்று சொல்கிறார்கள். அந்த சமத்துவபுரம் திட்டத்தின்மூலம் அவர்கள் அந்தப் பகுதிகளிலேயிருந்து இலவசமாக வீடுகள் வழங்கியதாக ஒரு போலியான திட்டமாக தந்தார்கள். இந்தத் திட்டத்திற்கு வீட்டு வசதி வாரியத்திலிருந்து கடனாக ஒவ்வொரு வீட்டிற்கும் பத்தாயிரம் ரூபாயை வழங்கி, அது இன்றைக்கு இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. இவர்களுடைய திட்டங்களால் இன்றைக்கு கடனாளிகளாக ஆகியிருக்கின்ற அந்தப் பயனாளிகள் (மேசையைத் தட்டும் ஒலி) துடிக்கின்றார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அமைச்சருடைய சிறப்பான விளக்கங்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றி. ஊரகப் பகுதிகளில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க முடிவு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். 1971–72 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முதன் முதலில் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கக்கூடிய ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. 1,54,274 பேர்களுக்கு, அதாவது விவசாயத் தொழிலாளர்களுக்கு, வழங்கப்பட்டது. ஆக, அந்தத் திட்டத்தைக்கூட ஒரு நிகழ்ச்சியாக நடத்த வேண்டும் என்று சொல்லி, திருத்துறைப்பூண்டி தொகுதியிலே அதற்காக ஒரு விழா நடத்தப்பட்டது. அன்றைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அந்த விழாவிலே

பங்கேற்றார்கள். அதைவிட இன்னொரு சிறப்பு, அந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மூத்த முதுபெரும் தலைவர்களில் ஒருவராக இருந்து மறைந்த மதிப்பிற்குரிய அருமைப் பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் அந்த விழாவிலே பங்கேற்றார்கள். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்களுக்குக்கூட நன்றாக நினைவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த விழாவிலே திரு. மணலி அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றும்போது, ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். இந்த குடியிருப்பு மனைப் பட்டா வழங்க வேண்டும் என்று எத்தனையோ போராட்டங்களை நடத்தினோம், சிறைகளுக்குச் சென்றோம், பல கொடுமைகளை அனுபவித்தோம், அதற்காக இரத்தம் சிந்தினோம். ஆக இரத்தம் சிந்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய பேனாவிலிருந்து சிந்திய ஒரு துளி மையினால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அன்றைக்கு வாழ்த்தி, பாராட்டி, புகழ்ந்து பேசினார். அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு, 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில் மட்டும் 7,51,238 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே பயனடைந்தவர்களில், ஆதிதிராவிடர்கள் 2,44,899 பேர். பழங்குடியினர் 8,654 பேர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் 4,97,702 பேர்.

*முற்பகல் 11–15*

அடுத்து மதிப்புக் கூட்டு வரியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதற்கு எங்களுடைய உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே அந்த மதிப்புக் கூட்டு வரியைப் பற்றி உறுப்பினர்களுடைய கருத்துகளை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உள்ளபடியே..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஏழைகளுக்கு இலவசமான வீட்டு மனைப் பட்டாக்கள் ஏராளமாக வழங்கியதாகவும், அதை ஏதோ இந்த ஆட்சியில் நிறுத்திவிட்டதைப் போலவும், இப்போது மீண்டும் அறிவித்திருக்கிறோம் என்பதைப் போலவும், மாண்புமிகு உறுப்பினர் இப்போது இங்கே பேசினார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்களில் யாரும் வீடு கட்டிக்கொள்ள முடியவில்லை. காரணம்,



அந்தப் பகுதிகளில் –infrastructure– கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை. சாலைகள் இல்லை, மின் விளக்குகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை. ஆகவே, இலட்சக் கணக்கில் வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை யாரும் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த ஆட்சி வந்த பிறகு ஒரு கொள்கை முடிவெடுத்தோம். ஏற்கெனவே எந்த ஆட்சிக் காலத்திலும், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் சரி எங்கெல்லாம் இத்தகைய இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, முதலில் அந்த இடங்களில் எல்லாம் வீடு கட்டிக்கொள்வதற்கு வசதியாக அடிப்படை வசதிகளை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், சாலைகள் போட வேண்டும், தெரு விளக்குகள் போட்டுத் தரவேண்டும், குடிநீர் இணைப்புகள் தரவேண்டும். அவற்றையெல்லாம் செய்து முடித்த பிறகு புதிதாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கலாம் என்று, தொடர்ந்து வழங்கலாம் என்று முடிவெடுத்தோம். ஓரளவிற்கு இந்தக் கட்டமைப்பு வசதிகளை எல்லாம் செய்து கொடுத்துவிட்டதால் இப்போது மீண்டும் ஏற்கெனவே இருந்த திட்டத்தைத் தொடருகிறோம். மீண்டும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறோம். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொது நோக்கத்தோடு ஒரு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கையெழுத்திட்டு வழங்கப்பட்ட அந்த நிலப் பட்டா என்பது, தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் மிராசுதார்களுக்குச் சொந்தமான அவர்களுடைய நிலத்திலே, ஏதேனும் ஒரு மூலையில், ஒரு பகுதியில் உழைப்பாளிகளாக இருக்கிற, உழவர்களாக இருக்கிற அந்தத் தொழிலாளிகள் வீடு கட்டியிருக்கிறார்கள். கட்டியிருக்கிறார்கள் என்றால் வெறும் கூரை வீடு. அப்படி இலட்சக் கணக்கான வீடுகள் கட்டப்பட்ட இடங்களில் அவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், அந்த வீட்டு மனைகளிலிருந்து விரட்டப்படுகிற ஒரு நிலை இருந்தது. மிராசுதார் நினைப்பாரேயானால், அவருக்குக் கோபம் வருமேயானால், உடனே அந்தத் தொழிலாளி, விவசாயி விரட்டப்படுவார். அப்படி விரட்டப்படாமல் எந்த இடத்தில் அவர்கள் ஏற்கெனவே குடிசை போட்டுக் குடியிருக்கிறார்களோ அந்த அடிமனையின் பட்டாக்கள் எல்லாம் உடனடியாக அவர்களுக்கு

வழங்கப்பட வேண்டும் என்று அந்த முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்படிப் பட்டா வழங்கப்பட்டதுதான் அவர்கள் குடியிருந்த இடங்கள். அந்த இடங்களிலே எல்லா வசதிகளும் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. தனிப்பட்ட, தனித் தனி குடிசைகளாக வெவ்வேறு இடங்களிலே இருந்திருக்கக்கூடிய குடிசைகள் அவை. சில இடங்களிலே மட்டும்தான் ஒரு 10,20 குடிசைகள் சேர்ந்தாற்போல இருக்கக்கூடிய ஒரு நிலைமை. அன்றைக்கு மிராசுதாரர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்து இந்த உழைப்பாளிகளுக்காக, உழவர்களுக்காக செய்யப்பட்ட ஒரு நல்ல காரியம் என்ற காரணத்தினாலேதான் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக அன்றைக்கு இருந்த மணலி கந்தசாமி அவர்கள் அதை வரவேற்றுப் பாராட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் ஏதோ அவர்கள் காலத்தில் 7 இலட்சம் பட்டா அளவிற்குக் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். அதனுடைய புள்ளிவிவரங்களை நான் என்னுடைய மானியக் கோரிக்கையில் தெளிவாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல் அவர்கள் காலத்தில் கொடுத்த பட்டாக்கள், இடம் எந்த இடத்தில், எந்த சர்வே நம்பரில் இருக்கிறது என்பதைக்கூட தெரியாமல் இன்னும் வாங்கிக்கொண்ட அந்த பட்டாவை பேப்பராக வாங்கிக் கொண்டு, விவசாயிகள் (மேசையைத் தட்டும் ஒலி) எந்த இடத்தில் என்று தெரியாமல் இருக்கிறோம் என்று பேசியிருக்கின்ற ஒரு சூழ்நிலை, நாங்கள் எல்லாம் சுற்றுப்பயணம் செல்கின்ற நேரத்தில் மக்கள் எங்களிடம் வந்து அவற்றைக் கோரிக்கைகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இப்போது அவர் இந்த வீட்டு மனைப் பட்டா கொடுப்பதை நாங்கள் நிறுத்திவிட்டோம் என்ற கருத்துபட கூறியிருக்கிறார். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 3 இலட்சத்து 61 ஆயிரத்து 745 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டில் 2 இலட்சம் பட்டாக்கள் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11–20

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலத்திலே முதலமைச்சராக இருந்த நேரத்திலே எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களும், நானும் தேனி மாவட்டத்திற்கு சென்றுவிட்டு, இரவு 7-30 மணிக்கு பெரியகுளம் வருகிறோம். இரவு பெரியகுளம் வந்தவுடனே அங்கு சாலை மறியல் செய்து அந்த பெரியகுளம் நகராட்சிப் பகுதிக்குட்பட்ட வீடுகளையெல்லாம் காலி செய்வதற்காக நகராட்சி உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, நாளை எங்களை காலிசெய்ய இருக்கிறார்கள். எப்படியாவது பட்டா பெற்றுத் தருவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சொல்லி சாலை மறியல் செய்து தடுத்துவிட்டார்கள். நாங்கள் முதலமைச்சரிடத்திலே பேசுகிறோம் என்று மருத்துவர் அய்யா அவர்களும், நாங்களும் சொல்லிவிட்டு அடுத்த நாள் காலையிலே வந்தவுடனே சரியாக 8.30 மணிக்கு தலைவர் கலைஞர் வீட்டிற்குச் சென்று மருத்துவர் அய்யா அவர்கள் உங்களிடத்திலே பேசச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி வீடுகட்டி வாழக்கூடியவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டும், காலி செய்யக்கூடாது. அது பெரியகுளத்திலே இருக்கிறது என்றுச் சொன்ன பிறகு, (மணியடிக்கப் பெற்றது) இல்லை, இல்லை ஒரே வார்த்தை (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, சொன்ன பிறகு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின் பேசட்டும். உட்காருங்கள். நீண்ட விவாதத்திற்குப் போக வேண்டாம். திரு. ஸ்டாலின் பேசட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** அதற்குப் பிறகுதான் அன்று முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், 10 ஆண்டுகள்—20 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகள் குடியிருந்தாலும்கூட அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என்ற உத்தரவு தமிழ்நாடு முழுவதற்கும் அப்பொழுதுதான் பிறப்பிககப்பட்டது. அது தெரியும். நடந்த உண்மை அது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். ஏதோ அவர்கள் அங்கே சுற்றுலா, Tour போய்விட்டு வருகின்ற பொழுது நகராட்சியினுடைய மையப் பகுதியில் இருந்தவர்கள் இவர்களிடம் முறையிட்டதாகவும், அவர்கள் திரு. கருணாநிதி அவர்களிடம் முறையிட்டதாகவும், அவர்கள் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

கொடுத்ததாகவும் தவறான தகவலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நான் அந்த நகராட்சியினுடைய நகர் மன்றத் தலைவராக அந்த நேரத்திலேயிருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) பொறுங்கள். சொல்வதைக் கேளுங்கள். அந்தப் பகுதி முத்துராஜா தெரு என்ற பகுதி. அந்தப் பகுதி, நகராட்சியில் உள்ளடங்கிய சாலையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற road-னுடைய வகைப்பாட்டில் இருக்கின்ற பகுதியில் அவர்கள் குடியிருந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதியில் அவர்களை காலி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நான்தான் அந்தப் பகுதி மக்களை, தற்போது காலி செய்யவேண்டாம் என்றுச் சொல்லி தடுத்து நிறுத்தியிருந்தேன். அவர்களுக்கு பட்டா கொடுக்க முடியாது; இதுவரையிலும் அவர்களுக்குப் பட்டாவும் கொடுக்கவில்லை. ஏனென்று சொன்னால், அதாவது அது சாலைப் புறம்போக்கில் வருகின்ற ஒரே காரணத்திற்காக அங்கு பட்டா கொடுக்காமல் அவர்களுக்கு இப்பொழுது மாற்று இடத்தில் பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆட்சியிலே மூன்று இலட்சம் பட்டாக்களைக் கொடுத்தார்கள் என்றுச் சொல்லுகிறார். வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் சொல்லுகிறபோது தி.மு.க. காலத்திலே ரோடு இல்லை, லைட்டு இல்லாத இடத்திலே கொடுத்துவிட்டார்கள் என்றார்கள். இந்த மூன்று இலட்சம் பட்டாக்களும் ரோடு போட்டு, பார்க் வைத்து, லைட்டு போட்டு ரியல் எஸ்டேட்காரன் மாதிரி கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். இடம் எங்கு இருக்கிறது என்றே தெரியவில்லை. இடமே எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று சொல்லி விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த கால ஆட்சியின்போது எங்களுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலேகூட ஆத்துப் பொள்ளாச்சி என்கின்ற கிராமத்திலே பாறைமேடு என்கின்ற இடத்திலே 100 மக்களுக்குப் பட்டா கொடுத்தார்கள். இன்று வரையிலே அங்கு அஸ்திவாரமே எடுக்க முடியாத அளவிற்கு அது பாறையாகவே இருக்கின்றது. அப்படிப்பட்ட



இடங்களிலேதான் அந்தக் காலத்திலே பட்டாக்கள் வழங்கப்பட்டன என்கின்ற கருத்தினைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரியைப் பற்றி நான் குறிப்பிட்டேன். ஆக, நிதியமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் உறுப்பினர்களுடைய கருத்துகளை அவர் இங்கு பெருந்தன்மையோடு கேட்டிருக்கிறார். உள்ளபடியே அது பாராட்டுக்குரிய ஒன்றுதான். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் இதுகுறித்து பேசப்பட்டிருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசுகளையெல்லாம் அழைத்து, கலந்துபேசி, அவர்களும் ஒரு முடிவினை எடுத்திருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆட்சியினுடைய முடிவு என்ன? காரணம், கவர்னருடைய அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; கடந்த 31 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையிலே என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது? பக்கம் 22, அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, எட்டப்பட்ட ஒருமித்த கருத்துகளின் — அதாவது 23-வது பத்தி — எட்டப்பட்ட ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில் மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சட்டம் கொண்டுவர இந்த அரசு உத்தேசித்துள்ளது. இந்தப் புதிய வரி விதிப்பு முறையை செயற்படுத்துவதால் ஏற்படும் நிதி இழப்பினை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மத்திய அரசு ஈடு செய்யும் என்பதன் அடிப்படையிலும், கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெறும்வகையில் மத்திய விற்பனை வரிச் சட்டத்திற்குத் தக்க திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்பதன் அடிப்படையிலும் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது, என்று அறிவித்திருக்கிறீர்கள்.

நான் கேட்க விரும்புவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலக் கட்டங்களில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு அன்றைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் வணிகப் பெருமக்களுடைய பிரதிநிதிகளை, விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரதிநிதிகளை எல்லாம் கோட்டைக்கு அழைத்து, அவர்களோடு கலந்து பேசி, அவர்கள் கருத்துகளைக் கேட்டு, அதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்வதை வழக்கமாக வைத்திருந்தார்கள். ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரை அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. இருந்தாலும், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டிருக்கக்கூடிய

நீங்கள், அதையும் தாண்டி அந்த வணிகப் பெருமக்களுடைய பிரதிநிதிகளை எல்லாம் அழைத்துப் பேசி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை இந்த அரசுக்கு எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களுக்குக் கடந்த கால நிகழ்வுகள் என்ன என்பதே தெரியவில்லையென்று நான் கருதுகிறேன். அரசு பலமுறை வணிகர்களைக் கூட்டி பேசியிருக்கிறது. நானே பேசியிருக்கிறேன். தற்போது (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். எனவே, அரசைப் பொறுத்தவரைக்கும் கடந்த காலத்தில், கடந்த மூன்று ஆண்டு காலமாக மதிப்புக் கூட்டு வரியினுடைய சாதக பாதகங்களை விளக்கி மாவட்டம் மாவட்டமாக கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

Commercial Taxes Department அதிகாரிகள்மூலமாக சம்பந்தப்பட்ட வணிகர் சங்கங்கள் எதுவாக இருந்தாலும் சரி, அவற்றையும், உற்பத்தியாளர்களையும், நுகர்வோரையும் அழைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் மதிப்புக் கூட்டு வரியினுடைய சாதக பாதகங்கள் விளக்கப்பட்டு, அவர்களுடைய ஒருமித்த கருத்தைப் பெறுவதற்கு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரசு மட்டத்திலும்கூட, நாங்களே சில முறைகள் கூட்டினோம். இதை வேண்டாம் என்று கூறுகிறவர்களைக்கூட, அந்தச் சங்கத் தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு, வணிகர்கள் பிரிவினரையும் கூப்பிட்டு, அவர்களிடம் சாதக பாதகங்களைத் தெளிவாக விளக்கிச் சொல்லியிருக்கிறோம்.

அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இல்லை. ஆனால், நாங்கள் கேட்டுக்கொண்டோம் மைய அரசை, தமிழகத்திலே, அதுவும் குறிப்பாக இந்த மதிப்புக் கூட்டு வரி வேண்டாம் என்று சொல்கிற ஒரு குறிப்பிட்ட வணிகர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு நிகழ்விலே, திரு. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்வில்கூட கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரைக்கும், கட்டுப்பாட்டுக்கு வராத ஓர் அமைப்பாக அவர்கள் இருக்கக் கூடாது, ஒருமித்த கருத்தோடு வர வேண்டுமென்ற நோக்கோடு அவர்களையும் அழைத்து, மைய அரசினுடைய முயற்சியில், VAT Committee Chairman-னுடைய முயற்சியில், அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து வணிகர் சங்கப் பிரிவுகள், அனைத்து உற்பத்தியாளர்கள், அனைத்து நுகர்வோர் அமைப்புகள், அவ்வளவையும் அழைத்து Le Meridien Hotel-லில் ஒரு



கூட்டத்தை, ஒரு பெரும் கூட்டத்தை மைய அரசு முயற்சியால் Empowered Committee கூட்டியது. VAT Committee Chairman வந்திருந்தார், நான் வந்திருந்தேன். ஆனால், அதற்கு உங்கள் இயக்கத்தைச் சேர்ந்த டெல்லியிலே இருக்கின்ற இணை நிதியமைச்சர் திரு. பழனிமாணிக்கம் அவர்கள் பங்கேற்கவில்லை, உங்கள் கட்சியின் சார்பிலும் பங்கேற்கவில்லை. தாக்கீது அனைவருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. எனவேதான், ஒருமித்த கருத்தை அவையிலே கேட்கலாம் என்ற நோக்கோடு நாங்கள் இங்கு அதைக் கேட்கிறோம்.

இதைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆளுநர் உரையிலே கூறியுள்ளது உண்மைதான். தற்போதும் அரசைப் பொறுத்தவரைக்கும் ஒருமித்த கருத்து இதில் வர வேண்டுமென்று எண்ணுவதற்குக் காரணம், ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய எதிர்கால நலனைத் தொடர்புபடுத்தியிருக்கின்ற ஒரு வரியாக இருக்கிற காரணத்தால், சாதக பாதகங்களை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட வேண்டுமென்ற நோக்கோடு உங்கள் கருத்தைக் கேட்கின்றோம்.

இதிலே Service tax - நாங்கள் எழுதியிருக்கிறோம், உன்னிப்பாக அதைப் படித்துப் பார்க்க வேண்டும். ஆளுநர் உரையிலே மைய அரசு Service tax-க்குத் திருத்தம் கொண்டு வந்தால், 1998-லே இதற்கு ஒப்புதல் தெரிவித்தபோது, அப்போதிருந்தே உங்களுடைய சார்பிலே நீங்களும் அதைக் கோரியிருக்கிறீர்கள், தற்போது நீங்கள் அதை வலியுறுத்தவில்லை. Service tax devolution-ஐப் பொறுத்தவரைக்கும் தமிழகம் வளர்ந்துவிட்ட மாநிலம் — we have provided a lot of infrastructure facilities for industrial growth in this State — அதனாலே Service tax அதிகமாக மைய அரசுக்குக் கிடைக்கிறது, கிட்டத்தட்ட 27 ஆயிரம் கோடி ரூபாய் ஒட்டுமொத்த வருமானம் தமிழகத்திலிருந்து ஓர் ஆண்டுக்கு டெல்லிக்குச் செல்கிறது. இப்படியிருக்கின்றபோது எங்களுக்கு நிதிப் பற்றாக்குறை இல்லாமல் வளர்ச்சித் திட்டங்களை, மக்களைச் சந்திக்கின்ற மாநில அரசு அதிகமாக மேற்கொள்வதற்கு, Service tax which has been so far in the Residuary List of the Constitution has been suddenly taken to the Union List of the Constitution — அங்கு சென்று திரு. சிதம்பரம் அவர்கள் இப்போது நிதியமைச்சராக இருக்கிற காலத்தில்தான் அப்படி எடுத்துச் செல்லப்பட்டு, அந்த Service tax வரியினுடைய பலன் எல்லாம் மைய அரசுக்கே செல்கிறது. அந்த நிலை கூடாது. Service tax பெரும்பான்மையான, Service tax, Banking, Insurance போன்ற பல்வேறு வருவாய் ஈட்டித் தருகிற Service tax எல்லாம் மாநில அரசுக்குத் தர வேண்டும், அப்படி ஒத்துக்கொண்டால், VAT-ஐ நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

*முற்பகல் 11–30*

VAT–ல் ஏற்படுகிற loss 1,200 கோடி ரூபாய் என்று தற்போது கணக்கிடப்படுகிறது. படிப்படியாக CST–யும் இருக்காது என்று சொல்கிறார்கள். CST இல்லையென்றால் அதிலே 1,500 கோடி ரூபாய்க்கு மேல் நட்டம் வந்து விடுகிறது. மைய அரசு கையை விரித்துவிட்டால்—– தற்போது என்ன சொல்லியிருக்கிறார்கள் பெரும்பான்மை ஒப்புதலின் அடிப்படையில், இந்த ஆண்டுக்கு 100 சதவிகிதம், அடுத்த ஆண்டுக்கு 75 சதவிகிதம், அதற்கு அடுத்த ஆண்டுக்கு 50 சதவிகிதம். நாங்கள் என்ன சொல்கிறோம். இந்த ஆண்டு மதிப்புக் கூட்டு வரியை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறபோது, 100 சதவிகிதம் தருகிறீர்கள். அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்துகிறபோது எங்களுக்கு 100 சதவிகிதம் நட்டம் என்றால் 75 சதவிகிதம்தானே தருகிறீர்கள். அந்த 25 சதவிகித இழப்பீடு சில ஆயிரங்களாக வந்துவிடுமே, நிதி நெருக்கடியை உருவாக்கும் மாநிலத்திற்கு. எனவே, இந்த VAT–ஆல் உங்களுக்கு இலாபம் வருகிறது. முக்கியமான ஒன்று மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். VAT–ஐப் பொறுத்தவரைக்கும், மாநிலச் சட்டத்திற்கு உட்பட்டு வந்தாலும்கூட, மறைமுகமாக மைய அரசுக்கே அதிக பலனைத் தருகின்ற ஒரு சட்டம் ஆகும். When VAT is introduced, when VAT is complied strictly from top to bottom, Manufacturing to retail –அந்த value chain முழுமையாக ஈடேற்றப்படுகிறபோது, வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டுவிடும். அப்போது மாநில அரசிற்கு ஓரளவுக்கு வருவாய் வரும், 4 சதவிகிதம், 12 1/2 சதவிகிதம். மைய அரசிற்கும் Sales Tax compliance முறையாக இருக்கிறபோது, Income Tax வருமானத்தைப் பொறுத்தவரைக்கும் 30 சதவிகிதம் வருமானம், அதிகப்படியான வருமானம் கிடைக்கிறது. அப்படி அதிகப்படியான, மைய அரசுக்கு Income Tax வருமானத்தை மறைமுகமாக இந்த VAT தருகிற காரணத்தால் அந்த Income Tax வருமானத்திலிருந்து, தற்போது எங்களுக்குப் பகிர்ந்து தருகிற 29.5 சதவிகிதம், தற்போது 12 ஆம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 30.5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது; அதை மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் கவனிக்கவேண்டும்; அதை 50 சதவிகிதமாக உயர்த்தித் தரவேண்டும். உங்களுக்கு VAT –ஆல் Income Tax வருகிறது; அப்படி என்று கேட்டு இருக்கிறோம். அதற்கெல்லாம் அவர்கள் ஒப்புதல் தரவில்லை.

நீங்கள் அந்த ஆட்சியில் இருக்கிற காரணத்தால், நீங்கள் இதை வற்புறுத்தவேண்டும். இணை நிதி அமைச்சராக, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இருக்கிற காரணத்தால் Service Tax benefits should be devolved



to the State Government to a considerable extent. இரண்டாவது, இரண்டாவது ஆண்டும், 3-வது ஆண்டும் 100 சதவிகிதம் VAT loss–ஐ ஒத்துக் கொள்ளவேண்டும். அடுத்து, விபூதி, குங்குமம், கற்பூரம் போன்ற பல பொருட்களுக்கு தற்போது வரியே இல்லாத பொருட்களையெல்லாம் VAT–லே நாம் ஏற்றுக்கொண்டால் (குறுக்கீடுகள்) திரு. அசோகன் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், இதுபோல் முறைகேடாக நடந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கும் என்று எச்சரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, exempted category–யில் இருக்கிற பல அயிட்டங்கள், அரிசிக்கே வரி என்று கொண்டு வந்துவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் டெல்லிக்குப் பலமுறை எழுதிய காரணத்தால், தற்போது Food grains can be left to the option of the State என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கி வருகிறார்கள். அரிசி, உணவு தானியங்களுக்கு எல்லாம் வரி என்று வருகிற நேரம், வரியே இதுகாறும் இல்லாத இனங்களெல்லாம் 12 1/2 சதவிகிதம் வரி என்று வருகிறபோது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும். விலைவாசி உயரும். அந்த நிலை உருவாகக் கூடாது என்ற நோக்கோடுதான் VAT–ஐப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டிலே ஏற்கெனவே நடைமுறையிலிருந்த வரிமுறையில் பாதிப்பு இல்லாத அளவுக்கு அதற்கு ஏற்பு தரவேண்டும் என்று மைய அரசை கேட்டு இருக்கிறோம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், VAT Committee–யினுடைய முடிவு மட்டும் அல்ல இது; மைய அரசு நட்ட ஈட்டைத் தருவதற்கு ஒத்துக்கொண்டால் VAT Committee ஒத்துக்கொள்ளும். மைய அரசு நட்ட ஈட்டைத் தருவதற்கு நிதித் துறை ஒத்துக்கொள்ளாத காரணத்தினால் VAT Committee, may decide by majority. இப்படி அதை முடிவு செய்கிறார்கள். இதை வலியுறுத்தி நமக்கு 100 சதவிகிதம் தொடர்ந்து VAT loss, இழப்பு தரப்படுமென்றால், CST வருகின்ற காலத்திலும் 100 per cent CST loss has to be compensated by the Centre என்று ஒத்துக்கொள்வார்களேயானால், இதுகாறும் வரி விதிப்பில் இல்லாத items தவிர exempted category 12 1/2 சதவிகிதத்திற்குச் செல்ல வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற அந்த முறையை மாற்றிக்கொள்வார்களானால், 5 சதவிகிதம் வரைக்கும் வணிகர்களுக்குச் சலுகை என்று சொல்லியிருக்கிறார்கள்; 10 சதவிகிதமாக உயர்த்தலாம் என்று தற்போது சொல்லி இருக்கிறார்கள்; ஆனால் 5–லிருந்து 10-ஆக உயர்த்துகிறபோது

ஏற்படுகிற உயர்வான மேற்கொண்டு 5 இலட்சத்திற்கு VAT loss கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள்; அதை மாற்றி அதற்கும் VAT loss கொடுத்தால் எங்களைப் பொறுத்தவரைக்கும் VAT -க் கொண்டு வருவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புது டில்லியிலே மதிப்புக் கூட்டு வரி கூட்டத்திலே கலந்துகொண்டபோது அந்தக் கூட்டத்திலே தமிழக அரசு மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்த வேண்டுமென்றால், மத்திய விற்பனை வரியை இந்த மதிப்புக் கூட்டு வரியிலே வசூலிப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்; நீங்கள் மத்திய விற்பனை வரியை எடுப்பதாக இருந்தால், தமிழக அரசு அதில் கலந்துகொள்ளாது என்று மிகத் திட்டவட்டமாக நாங்கள் தெரிவித்தோம். ஆனால், அந்தக் கூட்டத்திலே, ஓராண்டு காலம் CST-ஐ வசூலித்துக் கொள்ளலாம்; ஓராண்டு காலம் கழித்து அதைப் பரிசீலிக்கலாம் என்று கூறினார்கள். ஆனால், அதைத் தெரிவித்துவிட்டு ஒரு வாரத்திற்குப் பின்பு மத்தியிலே இருக்கின்ற Revenue Secretary ஒரு கூட்டத்தில் CST 5 சதவிகிதமாக அடுத்த ஆண்டு குறைக்கப்படும் என்று கூறுகிறார்கள்; இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பு என்ன கூறுகிறார்கள் என்றால், இந்த VAT-ஐ எப்படியாவது அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காக, சில மாநிலங்கள் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால், இந்த CST-ஐ நீக்குவதற்கும் நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று கூறினார்கள். அப்படி CST-ஐ நீக்கினால்—தமிழக அரசாங்கத்திற்கு மட்டும் சென்ற ஆண்டு மத்திய விற்பனை வரியிலே மட்டும் 1,186 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது—இப்படி CST-ஐ நீக்கினால் நமக்கு வருகின்ற வருவாய் இழப்பை அவர்கள் எப்படி ஈடுசெய்வார்கள்? இப்படி முன்னுக்குப்பின் முரணாக எப்படியாவது மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அந்த ஒத்துக்கொண்ட முடிவை, எடுக்கப்பட்ட முடிவை மாற்றி, மாற்றி அமைச்சர் ஒன்றைக் கூறுகிறார், செயலாளர் ஒன்றைக் கூறிக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. மு.க. ஸ்டாலின்:** வேறு யாராவது பேச இருக்கிறார்களா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சாலைப் பணியாளர்கள்.... (குறுக்கீடு)

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அவரே கேட்டார், வேறு யாராவது பேசுகிறார்களா என்று. அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம்



அனுமதி வாங்கிப் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோது அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கைவிடப்பட்டது, கைவிடப்பட்டது என்று (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முக்கியமான பிரச்சினையை ஆதாரத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பேசப்பட்டுவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முக்கியமான பிரச்சினையை, ஆதாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு ஸ்டாலின் பேசுவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு பேசுகிறேன். (குறுக்கீடு) அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கைவிடப்பட்டது, கைவிடப்பட்டது என்று தொடர்ந்து எல்லா உறுப்பினர்களும் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லட்டும். சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்கள், அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லட்டும். (குறுக்கீடு) சொல்லட்டும், சொல்லட்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் கையில் கிடைத்த பிறகுதான் சொல்லமுடியும். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுதான் பேச முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கைவிடப்பட்டது என்று சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்முடி அவர்கள் எனக்கு உத்தரவிடக்கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மானியத்தில் பேசவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் உத்தரவிடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசியதற்குப் பிறகு ஸ்டாலின் பேசுவார். நீங்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? உட்காருங்கள் மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** அமைச்சருக்கு மானியம் இருக்கிறது. தவறு இருந்தால் திருத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிடட்டும், முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நான் ஒரே ஓர் ஆதாரத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அரசாணை இது. இந்த அரசாணை வெளியிடப்பட்ட நாள் 19-5-1999-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே மொத்தம் 212 கிராம ஊராட்சிகளில் மட்டும்தான் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டதாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஊராட்சிகளில்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, அரசாணையிலே. அதற்குப் பிறகு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக அவர்களே படிப்படியாக— அந்த அரசாணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற வாக்கியத்தை மட்டும் தங்களின் அனுமதியோடு இங்கே படிக்க விரும்புகிறேன். கிராம ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்; இந்தத் திட்டங்களுக்காக வரையறுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். கை பம்புகள் அமைப்பதற்கு ஆகும் செலவு தவிர, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் குடிநீர் வசதிக்கான திட்டங்களைச், செயல்படுத்தும். கை பம்புகள்



அமைப்பதற்கு, குடிநீர் வடிகால் வாரிய நிதி ஆதாரத்தை குறைந்த வசதிகள் அளிக்கும் திட்டம், அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டங்களோடு சேர்த்துத்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென்று மீண்டும் தொடரும் என்று இவர்களாகவே அரசாணையிலே வெளியிட்டிருக்கிறார்கள். நாங்கள் நிறுத்திவிட்டோம், நாங்கள் நிறுத்திவிட்டோம் என்று சொல்வது எந்தவிதத்தில் நியாயம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இவர்கள் நிறுத்திய திட்டத்தை புதுப்பொலிவு கொடுத்து, 385 ஒன்றியங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு தந்திருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் கைவிட்ட திட்டத்தை நாங்கள் தொடர்ந்திருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின். (குறுக்கீடு) திரு. எ.வ.வேலு, திரு. ஸ்டாலின் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் முட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) எ.வ. வேலு, உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சாலைப் பணியாளர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு, பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கக்கூடிய சாலைப் பணியாளர்கள், தொடர்ந்து பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஊர்வலமாக கோட்டைக்குக்கூட வந்து கைது செய்யப்பட்டு பல இன்னல்களை அவர்கள் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, சென்னை உயர் நீதி மன்றத்தை நாடி அந்த நீதிமன்றத்தின் மூலமாக மீண்டும் அவர்களுக்கு வேலை வழங்கவேண்டும் என்ற அந்தத் தீர்ப்பையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இதுநாள்வரையில் இந்த அரசின் சார்பில் வேலை வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லை. ஏறக்குறைய 45 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கக்கூடிய கொடுமைதான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட நிச்சயமாக அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால், பெருத்த ஏமாற்றத்திற்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–40

இந்த நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்திலேகூட கலந்துகொண்டு உரையாற்றிய எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள்கூட மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பற்றி, அதைத் திரும்பப் பெற்றதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். 'மக்களுடைய மனதை அறிந்து, புரிந்து அதற்கேற்ற வகையில் ஆட்சி நடத்திட வேண்டும்' என்று குறிப்பிட்டுவிட்டு, இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். 'Flexibility' என்று சொல்லி, வளைந்து கொடுப்பது என்ற அந்தத் தன்மையை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, நான் கேட்க விரும்புவது, இந்தச் சாலைப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு வளைந்து கொடுத்து, அவர்களுக்கு மீண்டும் அந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அரசை நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன? அவற்றில் சிலவற்றை நான் உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 44, அதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள், 'அடிப்படை அறிவியல் துறைகள் சிறந்து விளங்க, இந்திய அறிவியல் நிறுவனத்தை ஒத்த தேசிய அறிவியல் நிறுவனம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும்' என்று அறிவித்தீர்கள். அது என்னவாயிற்று?

அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 40–லே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள், நெசவாளர்களுக்காக. அது என்னவென்று கேட்டால், தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்திற்கு அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை.

அதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைப் புத்தகம் பக்கம் 19–ல் காவல் துறைக்கு ஒன்று சொல்லியிருக்கிறீர்கள். என்னவென்று கேட்டால், 'காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளின் அலுவலகங்களுக்காக' தரமணியில், 30 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலக வளாகம் ஒன்று கட்டப்படும், என்று



அறிவித்திருக்கிறீர்கள். ஆக, இந்த அறிவிப்பு கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 15–ல் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஓராண்டிற்குள் அந்த முழு கட்டட வளாகம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, அரசுப் பணியிடங்கள், அதேபோல ஆசிரியர் பணியிடங்கள். இந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். அந்தந்தத் துறைகளைச் சேர்ந்த அமைச்சர்களும் அதற்கு விளக்கம் தந்து, உறுதியும் தந்திருக்கிறார்கள், அவை எல்லாம் விரைவிலே நிரப்பப்படும் என்று, மகிழ்ச்சிதான். ஆனால், பல்வேறு முக்கியமான துறைகள், அந்த முக்கியமான துறைகளை நிர்வகிக்கக்கூடிய key post-லே இருக்கக்கூடிய சில அதிகாரிகள் இன்றைக்கு அந்த இடங்களில் இல்லாமல் இருக்கிறார்கள். அந்த இடங்களெல்லாம் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்கின்றன. 10 நாட்களுக்கு முன்பு எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய சில செய்திகளை வைத்து நான், குற்றச்சாட்டாக அல்ல, குறையாகக்கூட அல்ல, உங்களுக்கு நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்று, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் – டிட்கோ–வினுடைய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், சுகவனேஷ்வரர், அவர் தலைமைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார். அவர் கடைசியாக டிட்கோ–விலிருந்து ஆகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றிருக்கிறார். ஆனால், அந்த இடம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா? அந்த இடம் இப்போதும் காலியாகத்தான் இருக்கிறது.

அடுத்து, தமிழ்நாடு காகித நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநராக இருந்த ஸ்கந்தன், I.A.S., அவர்கள். அவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு மின் வாரியத்தினுடைய தலைவராக மாற்றப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு அந்த இடம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா? அதுவும் இல்லை.

அடுத்து, பழங்குடி நலத் துறை இயக்குநராக இருந்த சாந்தினி கபூர், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பணி மாற்றம் செய்யப்பட்டார். அந்த இடத்தில் யாராவது இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லை.

தமிழ்நாடு கிடங்கு நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநராக இருந்த கிறிஸ்துதாஸ் காந்தி அவர்கள், கடந்த டிசம்பரில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் இன்றைக்கு அவர் சேர்க்கப்பட்டிருக்கிறார். பல மாதங்களாக அந்த இடம் காலியாக இருக்கிறது.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதமே அதற்கென்று தனி I.A.S. அதிகாரி போடப்பட்டு அவர் அதற்குப் பொறுப்பேற்றிருக்கிறார் என்ற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நன்றி. அதாவது எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நான் தவறாகச் சொல்லவில்லை, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிரப்பப்படாமல் இருந்தால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறல்ல.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நானும் உங்கள் மேல் குற்றச்சாட்டு சொல்லவில்லை. தகவல்களைச் சரியாகத் தெரிந்து கொண்டு சொல்லவில்லை என்பதற்காகக் குறிப்பிட விரும்பினேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, மறுவாழ்வுத் துறை ஆணையராக திரு. மணிவண்ணனுக்குப் பிறகு அந்தப் பதவியும் காலியாகத்தான் இருக்கிறது. வேளாண்மை, வருவாய்த் துறை ஆணையராக இருந்த திரு. எம். இராமு கடந்த ஆகஸ்ட் மாதம் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். மாதக் கணக்கில் அந்தப் பொறுப்பிற்கும் எந்த அதிகாரியும் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. அரசு ஊழியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக செயல்படும் அண்ணா மேலாண்மைப் பயிற்சி மையத்தினுடைய இயக்குநராக இருந்த திரு. பிந்து மாதவன் மாற்றம் செய்யப்பட்டு 2 மாதங்கள் ஆகிறது. அந்தப் பதவிக்கும் யாரும் நியமிக்கப்படவில்லை. நகர் மற்றும் ஊர் அமைப்பு திட்ட இயக்குநராக இருந்த பி. ஆர். ஆனந்த் அவர்கள் மத்திய அரசுப் பணிக்குச் சென்று 2 மாதங்கள் ஆகிறது. அந்தப் பதவிக்கும் இதுவரையில் யாரும் நியமிக்கப்படவில்லை. பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் பதவி கடந்த 1½ ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கிறது. எனவே, நான் கேட்க விரும்புவது இப்படி இருந்தால், அரசுப் பணிகள் வேகமாக, துரிதமாக நடைபெறக்கூடிய வாய்ப்பை பெற்றிட முடியுமா?



**மாண்புமிகு திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நிர்வாகக் காரணங்களுக்காக சில பதவிகள் உடனுக்குடன் நிரப்பப்படாத காரணத்தினால், பணிகள் ஸ்தம்பித்து விடுகின்றன என்பது பொருள் அல்ல. கூடுதல் பொறுப்பேற்று பிற அதிகாரிகள், கீழேயுள்ள அதிகாரிகள், மற்ற அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, எந்தவிதத் தொய்வும் இன்றி பணிகள் நடைபெறுகின்றன என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையினுடைய தொடக்கத்தில் இடம் பெற்றுள்ள குறளுக்குப் பொருளாக, 'நீதி தவறாத, நேர்மையான ஆட்சிமூலம்' குடிமக்களின் நலன்களைப் பேணி காக்கும் மன்னன், மனித உருவிலான தெய்வமாகக் கருதப்படுவான், என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், எந்த அளவிற்கு இந்த ஆட்சியில் நீதி தவறப்பட்டிருக்கிறது என்பதை நீதிபதிகளே தங்களது கண்டனங்கள் மூலமாகப் பலமுறை தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இதே அவையிலே 4-2-2005 அன்று கடந்த ஆளுநர் உரை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நீதிபதிகளும் மனிதர்கள்தான். அவர்கள் அரசைப் பற்றியோ அல்லது மற்றவர்களைப் பற்றியோ எது வேண்டுமானாலும் பேசி விடுகிறார்கள். அதைக் கேள்வி கேட்க முடிவதில்லை. ஆனால், நாம் கோர்ட் பற்றியோ, நீதிபதிகள் பற்றியோ ஏதாவது சொன்னால் உடனே கோர்ட் அவமதிப்பு நடவடிக்கை எடுத்துவிடுகிறார்கள். அவர்களிடம் அந்த அதிகாரம் இருப்பதால் அப்படிப் பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள். அவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு இருக்கிறது, நமக்கு இல்லை. இப்படி ஆளுக்கொரு நீதி என்று இருப்பதும் கவலை அளிக்கக்கூடிய விஷயம்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, பக்கம் 2, 2-வது பத்தியிலே, நிதியமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'முந்தைய ஆட்சியினுடைய இறுதிக் காலத்தில் நமது மாநிலம் சந்தித்த நிதிச் சீரழிவு, பொருளாதாரத் தேக்கநிலை, பாதுகாப்பற்ற, தடம்புரண்ட நிலை ஆகியவற்றிலிருந்து மாநிலத்தை மீட்கும் பொறுப்பை, தமிழ்நாட்டு மக்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்களில்

மாண்புமிகு முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அபார வெற்றிமூலம் அளித்தார்கள்' என்று நிதியமைச்சர் இதிலே குறிப்பிட்டிருக்கிறார். நிதி அமைச்சரிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது, 2004 மே திங்களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தந்த தீர்ப்பு என்ன? 2001 ஆம் ஆண்டு தேர்தலிலே உங்களுடைய வெற்றிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய செயல்பாடுகள்தான் காரணம் என்று சொன்னால், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் உங்களுடைய தோல்விக்கு உங்களுடைய ஆட்சியினுடைய செயல்பாடுகள்தான் காரணமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது காரணம் அல்ல. 40 இலட்சத்திற்கு மேற்பட்ட எங்களுக்குத் தேவையான ஓட்டை, எங்களுக்கு வரக்கூடிய ஓட்டை திட்டமிட்டு நீக்கிவிட்டார்கள், எச்சரிக்கையாக இருங்கள், மீண்டும் சேருங்கள், வெற்றிக் கனி உங்களுக்கே கிடைக்கும் என்று மக்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்குப் பாதகமான 18 இலட்சத்திற்கு மேற்பட்ட கள்ள ஓட்டுகளை எதிரிகள் போட்டிருக்கிறார்கள். கண்டுபிடித்து, தீர்த்து விடுங்கள்; அப்படி ஒரு நிலை ஏற்படுகிறபோது, அடுத்தச் சட்டமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளும் அம்மாவுக்கே என்று மக்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் இருக்கின்றபோது நாடாளுமன்றத்திற்குப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது தி.மு. கழகத்திற்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை. ஆகவே, அன்றைக்கு ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசின் செயல்பாடுகளால்தான் அந்த முடிவு ஏற்பட்டதா? அந்தத் தோல்வி ஏற்பட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–50

**திரு. மு.க. ஸ்டாலின்:** நாங்கள் சொல்லவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். நான், அதற்குப் பதில் சொல்வதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறல்ல. அடுத்து இங்கே ஒரு கிளை வெட்டப்பட்டதைப் பற்றி 110 வது விதியைப் பயன்படுத்தி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள (மணியடிக்கப்பெற்றது)......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)



**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை. இல்லை. நான் அதற்கு உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை. இல்லை. 110–வது விதியைப் பயன்படுத்தி (குறுக்கீடு) நேற்றையதினம் திரு. சந்தானம் அவர்கள் பேசினார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. நேற்றையதினம் 110–வது விதியைப் பயன்படுத்தி திரு. சந்தானம் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் அதற்கு உள்ளே செல்லவில்லை. அந்தப் பிரச்சினைக்கே நான் செல்லவில்லை. நான் கேட்க விரும்புவது, இங்கு அந்தப் பிரச்சினை வந்தபோது, ஒரு புகைப்படமும் காண்பிக்கப்பட்டது. ஆனால், நான் இப்போது ஒரு புகைப்படத்தைக் கையிலே கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அனுமதித்தால் அதை அவர்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களுடைய கரத்திலே ஒப்படைக்க நான் காத்திருக்கிறேன்.

(புகைப்படத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்)

இது எந்தப் படம் என்று கேட்டால், எப்படி அவர்கள் ஒரு படத்தை இங்கே அவையிலே காட்டினார்களோ அதேபோன்று ஒரு படம். ஆனால், பகுதி வேறு, அவர்கள் காட்டியது—நேற்று முன்தினம் காட்டியது அண்ணா சாலை பகுதி, இது அண்ணா நகர் தொகுதி. இதனுடைய முகவரி என்னவென்று கேட்டால் ஏ–14, 3–வது அவின்யூ, அண்ணா நகர். ஆக, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு விளம்பரப் பலகையை மறைக்கிற சூழ்நிலையிலே அங்கேயிருக்கிற மரக் கிளைகளையெல்லாம் வெட்டியிருக்கிறார்கள். இது மரத்தினுடைய கிளை. மரமே வெட்டப்பட்டிருக்கிறது சில இடங்களில்......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை வெட்டுவதைப் பற்றியும், கிளைகள் வெட்டுவதைப் பற்றியும் யார் பேசினாலும் பேசலாம், தி.மு. கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவே கூடாது. திண்டுக்கல் அருகே நடைபெறவுள்ள தி.மு.க. மண்டல மாநாட்டையொட்டி நெடுஞ்சாலைகளிலுள்ள பிரம்மாண்ட மரங்களை திமுக.–வினர் வெட்டிச் சாய்த்து வருகின்றனர். தேசிய நெடுஞ்சாலையிலுள்ள மரங்களை வெட்டியதுடன், தேக்கு, பாக்கு மரங்களைக் கொண்டு ஏராளமான அத்துமீறல்களுடன் தயாராகி வருகிறது தி.மு.க. மாநாட்டுத் திடல்.

திண்டுக்கல்லில் இருந்து மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் திண்டுக்கல்லில் இருந்து 10–வது கிலோ மீட்டர் தொலைவில் சின்னாளப்பட்டி அருகேயுள்ள கோட்டைப்பட்டியில் வரும் 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் திண்டுக்கல் மண்டல தி.மு.க. மாநாடு நடைபெறவுள்ளது. இதற்கான பணிகள் ஏராளமான அத்துமீறல்களுடன் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகின்றன. தேசிய நெடுஞ்சாலையில் சாலைப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் திண்டுக்கல்லில் இருந்து மதுரை செல்லும் வரை, சாலையின் இரு புறமும் கம்பங்களை ஊன்றி கட்சிக் கொடிகளைப் பறக்க விட்டுள்ளனர். மாநாட்டின் பிரம்மாண்டமான நுழைவாயிலின் முன்புறம் தேசிய நெடுஞ்சாலையில் இருந்த அரசுக்குச் சொந்தமான மரங்கள் அனைத்தையும் வேரோடு வெட்டிச் சாய்த்து விட்டனர். மேலும் சில மரங்களை மொட்டையாக்கி அதில் வர்ணமயமான சீரியல் மின் விளக்கு செட்டுகளைத் தொங்கவிட்டுள்ளனர்.

இந்த மரங்களை நாசமாக்குவதில் விஞ்ஞான ரீதியில் தி.மு.க. வினர் விளையாடியுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மாநாட்டுக்காக இந்த இடத்தைத் தேர்வு செய்தபோதே தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மரங்கள் மாநாட்டின் முகப்புத் தோற்றத்திற்கு இடையூறாக இருக்கும் என முடிவு செய்து சம்பந்தப்பட்ட மரங்களின் வேர்ப் பகுதியில் ஆசிட் ஊற்றி பட்டுப் போகச் செய்தனர். பின்னர், இந்தக் குறிப்பிட்ட மரங்கள் மட்டும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளதாகவும் அவற்றை அகற்றுமாறு மாநாடு நடைபெறும் களிக்கம்பட்டி பஞ்சாயத்து சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைத்து, அத்துறையின்மூலம் மரங்களை உடனடியாக அகற்றினர். மேலும், சில மரங்களையும் மொட்டையாக்கிவிட்டனர். இதற்குத் தனைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலுவின் தலையீடுகளும் ஏராளம். மேலும், மாநாட்டில் கட்டப்பட்டுள்ள விளக்குகள் ஒரே அளவு உயரம் உள்ள நூற்றுக்கணக்கான பாக்கு மரங்களில் வெள்ளை நிற வர்ணம் பூசி, பாக்கு மரத்திலேயே கட்டியுள்ளனர். இதுமட்டும் போதாது என்று விழா மேடையில் தி.மு.க. தலைவர் ஏறும் வழியில் இருபுறமும் மிகத் தடிமனான தேக்கு மரத்தை ஊன்றி அதில் பந்தல் அமைத்துள்ளனர். தற்போது மரங்களுக்கு வெள்ளை வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது. தென்னை மற்றும் சோளம் பயிரிடப்பட்டிருந்த சுமார் 80 ஏக்கர் விளை நிலத்தையும் தரைமட்டமாக்கிவிட்டனர். மேலும், மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலு மற்றும் ராஜா ஆகியோரின் உத்தரவுப்படி இவ்வழியே வரும், அதாவது தேசிய நெடுஞ்சாலையில் வரும் வாகனங்களையும் மாற்று வழித் தடத்தில் திருப்பிவிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



மேலும் வாகனங்கள் நிறுத்துவதற்காகவே பல விளைநிலங்களை அழித்துள்ளனர். திரு. கருணாநிதி தங்குவதற்காகவே விழா மேடையின் பின்புறம் விளை நிலத்தை அழித்து சொகுசு இல்லம் கட்டி வருகின்றனர். ஆகவே, ஒரு தி.மு.க. மாநாடு நடத்துவதற்காக நூற்றுக்கணக்கான மரங்களை வெட்டிச் சாய்த்தவர்கள் இங்கே கிளை வெட்டுவதைப் பற்றி பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–55*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும்தான் எதிர்க்கட்சியைக் குற்றம் சொல்ல உரிமை இருப்பதாக இந்த அவையினுடைய நடவடிக்கையிலேயிருந்து நான் அறிந்துகொள்கிறேன். முதலமைச்சர் சொல்லக்கூடிய அதே குற்றச்சாட்டை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் சொல்ல விரும்பினால், சொல்ல நேரிட்டால் அதை இந்த அவை அனுமதிக்குமா? முதலமைச்சர் சொல்கிற குற்றச்சாட்டுகூட மாநாடு நடைபெறக்கூடிய அந்த வட்டாரத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றன என்றால் அரசாங்க அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுப்பதற்கான கடமை இருக்கிறதோ அந்தக் கடமையைச் செய்யும்படி முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ அவர்களுக்கு ஆணையிடலாம். அப்படி ஓர் ஆணையிடப்பட்டு, அந்த ஆணை மீறப்பட்டால், எங்கள் மீது குற்றம் சொல்லலாம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக மாநாடு அல்ல; வேறு எந்தக் கட்சியினுடைய மாநாடு நடைபெற்றாலும் அந்த இடத்தில், அந்த வட்டாரத்தில் ஒன்றிரண்டு மரங்கள் வெட்டுப்படுகின்ற நிலைமை எல்லா நேரத்திலும் நடைபெற்று இருக்கிறது. இது ஒன்றும் புதிதல்ல. இதை நான் 15 வயதிலேயிருந்து நாட்டிலே பார்த்துள்ளேன். ஆகவே இதிலே மரம் வெட்டுவது என்பது ஏதோ ஒரு நோக்கத்திற்காகச் செய்யப்படுமானால் அது தவறு. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில நிகழ்ச்சிகளில் சில தவறுகள் நடைபெறுமானால் இந்த அரசாங்கம் தாராளமாக நடவடிக்கை எடுக்கட்டும். உரியவர்கள் பதில் சொல்வார்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அவையில் நம்முடைய உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் பேச முன்வந்தது ஒரு விளம்பரப் பலகையைக் குறித்து அந்தப் பலகைக்கு முன்னால் இருந்த ஒரு கிளையை, அந்த விளம்பரப் பலகை மக்கள் பார்வைக்கு, தெரிய வேண்டும் என்பதற்காகக் கிளையை ஒடித்துவிட்டார்கள் என்று அன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லிப் பேசினார். நான் அறிந்த அந்தக் குற்றச்சாட்டை வரையில் ஒரு பெரிய விவரம் இங்கு கூறப்பட்டது அதற்காக ஒரு வழக்கு

நடைபெறுகிறது. அந்த வழக்கில் நாளைய தினம் தண்டனை
வேண்டுமானாலும் தரட்டும்; தண்டனை இல்லாமலும் போகட்டும்;
அந்த வழக்கு நடைபெறுகிறது. வழக்கு நடைபெறுகிறபோது, அது பற்றி
முதலமைச்சரே இங்கே சொல்கிறபோது, தீர்ப்பு எப்படிக் கிடைக்கும்?
வழக்கு இல்லாமல் இருக்குமானால், அது வேறு.

இரண்டாவது, ஒரு கிளையை ஒடித்ததாகச் சொல்லப்படுகிறபோது
அதனுடைய மதிப்பு என்ன என்றெல்லாம் காவல் துறையிலே
உள்ளவர்கள் முதலமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
அதற்காகத்தான் இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின்
அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள் அண்ணாநகரில் மரமே
வெட்டியிருக்கிறார்கள். இதுபோல விளம்பரப் பலகையைப்
பாதுகாப்பதற்காக அல்லது அதற்கு மக்கள் பார்வை கிடைப்பதற்காக.
அது சரியா, தவறா என்பதை விசாரிப்பதற்காகவாவது இந்த அரசு
கடமைப்பட்டிருக்கிறது அல்லவா? அப்படி நடைபெற்ற நிகழ்ச்சிக்கு யார்
பொறுப்பு என்பது இந்த அவைக்குத் தெரிய வேண்டும் இல்லையா?
மரம் மொத்தமாக வெட்டப்பட்டதற்குச் சான்று, நான் அண்ணா நகரில்
குடியிருக்கிற காரணத்தால் அதை நான் தினந்தோறும் பார்த்துக்
கொண்டிருக்கிறேன். வெட்டியவர்கள் யார் என்பதுகூட எனக்கு
முக்கியமல்ல. மரமே வெட்டப்படுகிறது விளம்பரப் பலகைக்காக.
ஒரு விளம்பரப் பலகைக்காக கிளை முறிக்கப்பட்டது என்பது ஒரு பெரிய
குற்றச்சாட்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பு
அவருக்கு இருக்கின்ற—மிகப் பெரிய ஒரு மாநிலத்தை ஆளுகிற அந்தத்
தகுதி காரணமாகச் சொல்கிறேன்—கிளை வெட்டப்பட்டதோ, கிளை
ஒடிக்கப்பட்டதோ ஒரு பெரிய பிரச்சினையாக முதலமைச்சரே இங்கு
சொன்னபோது, நான் சற்று வேதனைப்படுகிறேன். மரமே
வெட்டப்பட்டுள்ளதை நான் நினைவூட்டுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் செய்ய வேண்டிய கடமையைவிட்டு என்றைக்குமே தவறியது இல்லை. எங்கே மரம் வெட்டப்பட்டது என்பதை விசாரித்து தவறு நடந்திருப்பின், தவறு செய்தவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, இன்னொன்று. கிளை, மரங்களைத்
தாண்டி, தேக்கு மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. எங்கு? தேனி
மாவட்டம், பெரியகுளம் தொகுதி, கொடைக்கானல் அடிவாரத்தில்
இருக்கக்கூடிய மஞ்சளாறு வனப் பகுதி. அங்கு தேக்கு மரங்கள்
வெட்டப்பட்டிருக்கின்றன.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். ஏங்க, கிளைகள் வெட்டுவதைப் பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* சொல்கிறேன். அதாவது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்த அரசின் கடமையை இது செய்யும். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பேசுகின்றபோது மரங்கள் வெட்டுவது ஒரு பெரிய பிரச்சினையே அல்ல, கிளைகள் வெட்டுவது ஒரு பெரிய பிரச்சினையே அல்ல, எந்தக் கட்சி மாநாடு நடந்தாலும் இப்படித்தான் நடக்கும் என்றெல்லாம் அதை நியாயப்படுத்தப் பார்த்தார். அப்படி அவரே சொல்கின்றபோது அவருடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் ஏன் இதை ஒரு பெரிய பிரச்சினையாக இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்?

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். கிளை ஒடிப்பது, மரம் வெட்டுவது, காட்டையே அழிப்பது இந்த மூன்றுக்கிடையில் என்னென்ன வேறுபாடு என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறையினரைப் பார்த்து அல்லது அழைத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஸ்டாலின் அவர்கள் சொல்லத் தொடங்கியது தேக்கு மரம் வளர்ந்த ஒரு காட்டுப் பகுதியே அழிக்கப்படுகிற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி. அது உங்களுடைய பொறுப்பில் உள்ளது. நாங்கள் ஆட்சியிலே இல்லை. செய்திகள்தான் சொல்லமுடியும். குறையாகக்கூட இருக்கலாம். நாங்கள் சொல்கிற செய்தி, விவரம் குறைவாக இருக்கலாம். அதைப்பற்றி தீர்மானிக்க வேண்டியது நீங்கள். உண்மையோ, அல்லவோ, அதை நீங்கள் தீர்மானித்துக்கொள்ளுங்கள். சொல்கிற பொறுப்பு மட்டும்தான் எதிர்க்கட்சிக்கு. நாங்களே எல்லாவற்றையும் விசாரித்து, முடிவு எடுத்து, காவல் துறையைக் கூப்பிட்டு, கேட்டுவிட்டு பதில் சொல்ல முடியாது. ஆகவே, சொல்லப்படுகிற செய்தி, எதிர்க்கட்சி என்ற காரணத்தால் அந்தக் கருத்துகளைச் சொல்ல மட்டும்தான் நாங்கள் கடமைப்பட்டவர்கள். தாங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள், ஸ்டாலின் அவர்கள் அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்கு உரிய ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்து, அனுமதியை வாங்கவேண்டும். அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு என்பது யாராவது ஒருவர்மீது, ஆளைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு ஸ்டாலின், பேச்சை முடியுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** யார் மீதும் சொல்லவில்லை. இப்போது எப்படி அவர்களாகவே சொன்னார்களோ, திராவிட முன்னேற்றக் கழக மகாநாட்டுக்காக மரம் வெட்டப்படுகிறது என்று சொன்னார்களோ, அது ஒரு வகையிலே குற்றச்சாட்டு. அதற்கு யார் பொறுப்போ, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதை, அந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்து நான் ஏற்றுக்கொள்கிறேன். யார் வெட்டினாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள். அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயார். இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர்தான் ஏற்றுக்கொள்ளவேண்டுமானாலும், அந்த தண்டனையை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். மரம் வெட்டுவது எங்களுடைய குறிக்கோள் அல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே கூறினார். ஆனால், தண்டனையே கொடுக்க முடியாத வகையில், National Highways துறையை வைத்திருக்கின்ற தி.மு.க.–வைச் சார்ந்த மத்திய அமைச்சரே இந்த மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார். ஆகவே, தண்டனை வழங்குவது என்ற கேள்விக்கே இடமில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்குப் பொறுப்பான இடத்திலே மரம் இருக்குமானால், அந்த மரம் ஏதேனும் இடையூறாக இருக்குமானால் அதை வெட்டவேண்டிய கட்டாயம் ஏற்படுமானால், அப்போதும் இந்த அரசினிடத்திலே அனுமதி பெற்று அதை வெட்டுகிறார்கள். அதைப் போல...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசானாலும், மத்திய அரசானாலும் அரசின் சொத்து மக்கள் சொத்து. ஆகவே, இது தேசிய நெடுஞ்சாலையானாலும், அந்தத் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற மரங்கள் மக்களுடைய சொத்து.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சொத்து மக்கள் சொத்தாகத்தான் இருக்கும். வேறு யாருடைய சொத்தாகவும் நிச்சயமாக மாறாது. ஆனால், அழிக்கப்படுவது என்பது, சொத்தை அழிப்பதற்காக அல்ல. வேறு ஒரு வசதியைத் தேடுவதற்காக, ஒரு தேவைக்காக, ஒரு நிலைமைக்காக அப்படி நடைபெற்று இருக்கலாம். அது குற்றம் என்றால்கூட நான் ஏற்றுக்கொள்ளத் தயார். அது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்கள் நடைபெற போகின்ற ஒரு கட்சி மாநாட்டுக்காக 100 ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்திருந்த மரங்களை வெட்டியிருக்கிறார்கள். எந்த வகையில் அதை நியாயப்படுத்த பார்த்தாலும் அது குற்றம்தான்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் நியாயப்படுத்தவில்லை. மரம் வெட்டுவது குற்றம். நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் குற்றத்தைக்கூட சில நேரத்திலே செய்யவேண்டிய அவசியம் சில பேருக்கு ஏற்படுகிறது. தொழிலாகச் சில பேர் செய்கிறார்கள். சில பேர் சில சந்தர்ப்பங்களால் செய்கிறார்கள். சில பேர் சில அத்தியாவசியத் தேவைக்காகச் செய்கிறார்கள். அது அந்தந்த சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால், என்னுடைய வேண்டுகோள், நாங்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் சொல்கிற செய்திகள் எல்லாவற்றுக்கும் அவற்றை நிரூபிக்கிற அளவிற்கு எங்களுக்கு ஆதாரம் கிடைக்காது. செய்திகளைத்தான் இந்த அவைக்குச் சொல்லலாம். இந்த அவைதான் முடிவு எடுக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஆளுகிற பொறுப்பிலே உள்ள அமைச்சர்கள்தான் ஒரு முடிவு எடுக்கவேண்டும்; அந்த வகையில் ஆராய்ந்து பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், பேச்சை முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இறுதியாக நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரே வரியில் சொல்லவேண்டும்

என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இது ஒரு மலர்க் கொத்து என்று. ஆம், மலர்க் கொத்துதான். ஆனால், வாசம் உள்ள மலர்க் கொத்து அல்ல. காகிதப் பூக்களால் தயாரிக்கப்பட்டுள்ள மலர்க் கொத்து இந்த நிதிநிலை அறிக்கை.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இங்கே அமர்ந்திருக்கக்கூடிய காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய மூத்த தலைவர்களில் ஒருவராக இருக்கக்கூடியவர் மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். அவரைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; 'காலி டப்பா' என்று; முதலமைச்சரே சொன்னார். நான் சொல்ல விரும்புவது, அவர் 'காலி டப்பா' அல்ல. இந்த நிதிநிலை அறிக்கைதான் 'காலி டப்பா.' 'வெறும் காலி டப்பா' அல்ல....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை நான் மக்களுக்கு வழங்கப்பட்ட மலர்க் கொத்து என்று வர்ணித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், 'ஆம், இது மலர்க் கொத்துதான்; ஆனால், காகிதப் பூக்களால் செய்யப்பட்ட மலர்க் கொத்து' என்றார். அதையும் ஒரு பாராட்டாகவே நான் எடுத்துக்கொள்கிறேன். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையான மலர்க் கொத்துக்கள் ஒரேநாளில் வாடிவிடும். காகிதப் பூக்களால் செய்யப்பட்ட மலர்க் கொத்து எத்தனை ஆண்டுகளானாலும் மக்கள் நினைவில் அப்படியே பசுமையாக இருக்கும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 12–05*

**திரு. மு.க. ஸ்டாலின்:** ஆனால், காகிதப் பூ மணக்காது. (குறுக்கீடு) காகிதப் பூ மணக்காது, (குறுக்கீடு) காகிதப் பூவும் மணக்காது; இந்த பட்ஜெட்டும் மக்களுக்குப் பயனளிக்காது. எனவே, அதுமட்டுமல்ல,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், அவ்வப்போது அடியெடுத்துக் கொடுக்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** நம்முடைய எஸ்.ஆர்.பி. அவர்களைப்பற்றி முதலமைச்சர் 'காலி டப்பா' என்று குறிப்பிட்டார். அவர் 'காலி டப்பா' அல்ல. இந்த நிதிநிலை அறிக்கைதான் 'காலி டப்பா' அதுவும் வெறும் 'காலி டப்பா' அல்ல; 'காலி பெருங்காய டப்பா' என்று சொல்லி அமர்கிறேன், வணக்கம். (குறுக்கீடு)



**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு புகைப்படத்தினைத் தந்தார்கள். நானும் உங்கள் அனுமதியைப் பெற்று, ஒரு புகைப்படத்தினை இப்போது இந்த அவையிலே காட்டுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள், இருங்கள். புகைப்படம் சம்பந்தப்பட்ட பிரச்சினைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. சேகர்பாபு, (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** புகைப்படம் சம்பந்தப்பட்ட பிரச்சினைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது, அதைக் காட்டுங்கள்; அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** இது மரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அவை முன்னவரிடத்தில் ஏற்கெனவே கொடுத்து அனுமதி பெற்றுவிட்டேன். (குறுக்கீடுகள்) அவை முன்னவரிடத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி வாங்கியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அனுமதி வாங்கியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் நிதி நிலைமையை மிகச் சிறந்த முறையில் நிர்வகித்ததன் காரணமாக, 2004–2005 ஆம் ஆண்டிற்கான Medium Term Fiscal Plan – நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டம் கொண்டு வரப்பட்டதை அவை அறியும். அதைக் கொண்டு வந்து, சீரானதும், சாத்தியமானதுமான நிதி நிலையை நிலைநிறுத்தி, ஏழையெளிய மக்களினுடைய நலனைப் பேணி, அதே நேரத்தில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு, தமிழக மக்களினுடைய நலனைப் பேணுவதுதான் இந்த அரசினுடைய நோக்கம். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, எத்தகைய நிதிநிலை தமிழகத்தில் இருந்தது என்பதனைப் பலமுறை நான் தெரிவித்திருக்கிறேன், அவை நன்கு அறியும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

விரலுக்கு ஏற்ற வீக்கம், வரவுக்கு ஏற்ற செலவு என்ற பொருளாதார அணுகுமுறையை 1996–லிருந்து 2000 முடிய நாட்டை ஆண்ட தி.மு.க.வி-னர் கடைபிடிக்க, நடைமுறைப்படுத்த தவறிய காரணத்தால்,

நிதிநிலை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது மிகவும் சீரழிந்த நிலையிலே இருந்தது. மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையிலே நிதிநிலை இருந்தது. அந்த நிதிநிலையைச் சீரமைத்தால்தான் நாட்டு மக்களுக்கும் நலத் திட்டங்கள் தொடர்ந்து கிட்டும் என்ற நிலை; நிதிநிலையைச் சீரமைத்தால்தான் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புகள் உருவாகும் என்ற நிலை. இப்படிப்பட்ட நிலையில்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை நாட்டு மக்களின் நலன் கருதி மேற்கொண்டிருந்தார்கள். அப்போது 2001-லே நாங்கள் பொறுப்புக்கு வந்தபோது, நிதித் தட்டுப்பாடு என்ற நிலை; மைய அரசும் எங்களுக்கு உதவியினைத் தராத நிலை; ஒதுக்கிய நிதியைக்கூட, காலத்தே, முறையாக, முழுமையாகத் தராத நிலை. இப்படிப்பட்ட நிலை ஒருபுறம்; இன்னும் ஒருபுறம், தமிழகத்தில் ஏற்கெனவே அதிகப்படியான வரிச் சுமை பன்னெடுங்காலமாக மக்களின்மீது திணிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மேலும் வரியினை உயர்த்தி மக்களின்மீது அந்தச் சுமையை ஏற்றக்கூடாது என்பது, மக்களின்மீது அக்கறை உள்ள மக்கள் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கொள்கை. அந்தக் கொள்கையை ஈடேற்றுகின்ற நோக்கோடு, நிதிநிலையை அணுகுகிற ஒரு மேம்பாட்டைக் கடைப்பிடித்தார்கள். இக்கட்டான நிதிநிலையை நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது பெற்ற காரணத்தால், தொடர்ந்து அதைச் சீரமைக்க எங்களுக்கு நிதியாதாரத்தை மைய அரசு தருவதற்கு வழிவகை செய்யாத காரணத்தால், இலவச வேட்டி, சேலைத் திட்டத்தைக்கூட நிறுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை கடந்த கால ஆட்சியினுடைய நிதி நிர்வாகம் எங்களுக்கு விட்டுவிட்டுச் சென்று விட்டது.

பிற்பகல் 12–10

அதைப்போலவேதான், மூன்றரை ரூபாயிலே கொடுத்த அரிசியை ஆறு ரூபாய் என்ற நிலைக்கு உயர்த்தக்கூடிய அளவிற்கு, கடந்த கால ஆட்சியினுடைய நிதி நிர்வாகம், நிதி நிலையைச் சீர்கெடுத்து அப்படிப்பட்ட ஓர் அவல நிலையை உருவாக்கி, அதனால் ஏழை மக்களினுடைய பாதிப்பு – ஏழை மக்களுக்கும் பாதிப்பு உருவாகக்கூடிய நிலை வந்தது. மைய அரசு டில்லியிலே கொண்டுவந்த சட்டம் ஒருபுறம், தமிழகத்தினுடைய கஜானா காலி என்ற நிலை ஒருபுறம், Electricity Board–க்கு ஏகப்பட்ட கடன் என்ற நிலை, இப்படிப்பட்ட நிலையை உருவாக்கி கடந்த கால ஆட்சி சென்றுவிட்ட காரணத்தினால் இலவச மின்சாரத் திட்டம் ஏழை விவசாயிகளுக்கு இல்லை. அதைப்போலவே, வீட்டு மின்சாரத்தை உயர்த்தவேண்டிய நிலை என்ற நிலையெல்லாம் கடந்த கால நிதி நிர்வாக, சீர்கேடான நிதி நிர்வாக அந்த அணுகுமுறை உருவாக்கிவிட்டுச் சென்றுவிட்டது.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த நிலை மட்டுமல்ல, ஆசிரியர் பெருந்தகைகளுக்கு, அரசு ஊழியர்களுக்கு, அவர்களுக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய சலுகைகள், உதவிகளைக்கூட தள்ளிவைத்து கொடுக்கவேண்டிய ஒரு நிலையை, துரதிருஷ்டவசமான நிலையை 1996-லிருந்து 2000 வரை நாட்டை ஆண்ட தி.மு.க. ஆட்சி ஓர் இக்கட்டான நிதிநிலையை உருவாக்கி அந்தச் சுமையை எங்கள்மீது 2001 ஆம் ஆண்டு போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். R.B.I., – Reserve வங்கியிலிருந்து கடன் வாங்கக்கூட முடியாத நிலை. அடுத்த மாதச் சம்பளத்தை ஆசிரியர்களுக்குக் கொடுப்பது என்றால், அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது என்றால், Reserve வங்கி மூலம் O.D. பெற்றுத்தான் தரவேண்டுமென்ற அப்படிப்பட்ட நிலை. இந்த நிலையையெல்லாம் சமாளிக்க மைய அரசை நாடினோம். நிதி நிறுவனங்களை நாடினோம். எங்களுக்கு நிதி வேண்டுமென்றால், இந்த மக்களைக் காக்க வேண்டுமென்றால் Fiscal Reforms, Medium Term Fiscal Reforms கொண்டுவர வேண்டுமென்ற ஒரு கட்டாயச் சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதனால் நாங்கள் அதை ஏற்றோம். மக்களைக் காத்தாக வேண்டும், ஏழையெளிய மக்களை காத்தாக வேண்டும் அப்படி காத்தாக வேண்டுமென்றால் நிர்வாகச் சீர்திருத்தம், நிதிச் சீர்திருத்தம் கட்டாயம் கொண்டுவந்தாக வேண்டும் என்ற முறையில்தான் நாங்கள் இந்த Medium Term Fiscal Reform–ஐ கொண்டு வந்தோம். இதனால் செலவு குறைக்கப்பட்டது.

ஏன் பணியிடங்களைப் பூர்த்தி செய்யவில்லை என்ற ஒரு கோரிக்கையை சொல்லுகிறீர்கள். மாநில அரசுக்கு அதிக நிதி வேண்டுமென்றால், நிதி நிறுவனங்களிடமிருந்து பணம் வேண்டுமென்றால், உலக வங்கி போன்றவற்றின் நிதி ஆதாரங்கள் நமக்குக் கிட்டவேண்டுமென்றால் மைய அரசினுடைய பரிந்துரை தேவை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு, கர்நாடக மாநிலத்திலே இருக்கிற மக்கள் தொகை 5 ½ கோடி என்றால், ஆங்கு அரசுப் பணியாளர்கள் 5 ½ இலட்சம்; ஆந்திர மாநிலத்திலே 8 கோடி மக்கள் தொகை என்றால் ஆங்கு அரசுப் பணியாளர்கள் 8 இலட்சம்; தமிழகத்திலே 6 கோடி மக்கள் தொகை என்று இருக்கிறபோது 12 ½ இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்களே இது அதிகம் இல்லையா? அதைக் குறைக்கவேண்டும், அந்த ratio above norms ஆக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று நிதி நிறுவனங்கள் வற்புறுத்தின; மைய அரசு வற்புறுத்தியது. இப்படிப்பட்ட

நிலைதான் தற்போது சில இடங்களில் இன்னும் ஆட்களை அதிகமாக அந்த norms–க்கு மேலே இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகிற, ஆய்விலே கண்டிருந்த இடங்களில் அந்தப் பணிகள் நிரப்பப்படாத நிலை இருக்கிறது. இப்படி நிதிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பிறகு, நிதித் தட்டுப்பாட்டிலிருந்து தமிழகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீட்டிருக்கிறார்கள். சீரிழந்து, சீரழிந்த நிதி ஒருபுறம், வறட்சி ஒருபுறம், மைய அரசு எங்களுக்கு உதவாத நிலை ஒருபுறம், வரிச் சுமை அதிகம் மக்களுக்கு போடக்கூடாது என்ற நிலையிலே வரி விதிக்காத நிலை. இப்படிப்பட்ட நிலையிலே நிதிச் சீரமைப்பைக் கொண்டு வந்த காரணத்தால் எங்களுக்கு நிதி நிறுவனங்களுடைய பண உதவி கிடைத்தது. தொடர்ந்து நான்கு ஆண்டுக் காலமாக மைய அரசு கூட தமிழக மாநிலத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய நிதி நிர்வாகத்தைப் பாராட்டக்கூடிய அளவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டி எங்களுக்குச் சிறப்பு உதவித் தொகை தரக்கூடிய அளவிற்கு நிதி நிர்வாகத்தை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

இப்படி ஒருபுறம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு, நிதி நிலையைச் சீரமைத்த காரணத்தால், எங்களுடைய நோக்கம் ஏழையெளிய மக்களைக் கண்காணிக்க வேண்டும், நிதி நிலையைச் சீரமைத்து கடந்த காலச் சீரழிவால் ஏற்பட்ட இலவச வேட்டி சேலை இல்லையென்ற நிலை, அரிசி விலை ரூபாய் 3 ½-லிருந்து ரூபாய் 6 ஆக உயர்த்தப்பட்ட நிலை, இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு இல்லையென்ற நிலை, மின் கட்டணம் வீடுகளுக்கு உயர்த்தப்படவேண்டிய நிலை என்ற இந்த நிலைகளையெல்லாம் உருவாக்கிய கடந்த கால — நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் உருவாக்கப்பட்ட அந்த மோசமான நிதி நிலை மாற்றப்பட்டு நிதிச் சீர்திருத்தத்தின்மூலம் சீர் செய்த காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் இலவச வேட்டி, சேலைத் திட்டத்தை ஏழைகளின் நலன் கருதி அந்த மக்களுக்காகத் தந்திருக்கிறார்கள். உழைக்கும் மக்களுக்கு, உழவர் மக்களுக்கு இலவச மின்சாரத்தைத் தந்திருக்கிறார்கள். அதைப்போலவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வீட்டு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, ஒத்தி வைக்கப்பட்டிருந்த சலுகைகளை நிதிநிலை சீரானவுடன் தருவேன் என்று சொன்னார். நிதிநிலை சீரானது சிக்கன நடவடிக்கைகள் காரணமாக. உடனே அந்த நிதியினை ஒதுக்கி ஆசிரியப் பெருமக்கள், அரசு ஊழியர்கள்—அவர்கள் வயிற்றிலே தற்போது பாலை வார்த்திருக்கிறார்கள்.



பிற்பகல் 12–15

இதற்கும் மேலாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு சேமிப்பைப் பெருக்கி, வருவாயைப் பெருக்கி, வரி விதிப்பு அதிகம் இல்லாமல் – வரி விதிப்பு இல்லாமல் வரி வருவாயை அதிகப்படுத்துகிற பணிகளை முடுக்கி [illegible] காரணத்தால் கிடைத்த சேமிப்பைக் கொண்டு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று ஏழைகளின் நல்வாழ்வுத் திட்டங்கள் எண்ணற்ற திட்டங்கள், என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் இப்படி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் இருந்த நிலை மாற்றப்பட்டு தற்போது சீரான நிலை தமிழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2003-04 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இப்படி நிதிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது ஒரு முறை; அடுத்து, பழைய கடன்கள், பழைய சுமைகள் அவற்றை நீக்குவது ஒரு முறை; இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளுக்கு இடையிலேயும்கூட ஒட்டுமொத்தமாக 2001–02–ல் நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 2003–04–லே 1565.24 கோடி ரூபாய் என்று revenue deficit–ஐ வைக்கக்கூடிய நிலைக்கு, சீர்கெட்ட நிதிநிலையை நிமிர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி ஒரு வரலாறு காணாத சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

அதற்குப் பிறகு பல வளர்ச்சித் திட்டங்கள், உங்களுக்குத் தெரியும். எண்ணற்ற திட்டங்கள். நாங்கள் ஒட்டுமொத்தமாக revenue வருமானத்தைப் பொறுத்தவரைக்கும் 23,705.71 கோடி ரூபாய் 2003–04–லே இருந்தது. அந்த revenue receipts–ஐ 27,049.40 கோடி ரூபாய் என அதிகப்படியாக உயர்த்தக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள். எங்கெங்கு வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்பதிலே, வரி போடாத வருமானத்தை, புதிய வரி போடாத வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்பதிலே அக்கறை செலுத்திய காரணத்தால் வரி ஏய்ப்புகள் எங்கெங்கு இருக்கின்றன; எப்படி வரி ஏய்ப்புகளைத் தடுப்பது என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களே முன்நின்று; இதற்குத் தலைமைதாங்கி இந்த நிதிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும், வருவாயைப் பெருக்க வேண்டும், சந்துபொந்துகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்புகள் எங்கெங்கு இருக்கின்றன என்பதனை எல்லாம் கண்டறிந்து நல்ல முறையான ஒரு நிர்வாகத்தை மேற்கொண்ட காரணத்தால் [illegible]

23,70,5.71 கோடி ரூபாய் என்று 2003–04-லே இருந்த வருவாய் 27,019.40 கோடி ரூபாய் என்று உயர்ந்தது.

இந்த நடவடிக்கைகள் தொடர்கிற காரணத்தால் இந்தச் சிக்கன நடவடிக்கைகளும், நிர்வாகத் தூய்மையும், வரி ஏய்ப்புகளைத் தடுக்கக்கூடிய முறையும், அதைப்போல அந்த capital expenditure-ஐ பொறுத்தவரைக்கும் அதை probe செய்து, ஒரு சாலைப் பணியாக இருக்கலாம், ஒரு கட்டடப் பணியாக இருக்கலாம், ஒரு பாலமாக இருக்கலாம், எப்பேர்ப்பட்ட capital expenditure-ஆக இருந்தாலும், what is the actual cost என்பதைக் கண்டறிந்து, அது உண்மையான முதலீடு என்பதனைக் கண்டறிந்து அந்த schedule of rate அதிகமாக இருந்த கடந்த கால நிலையை மாற்றி, அதைக் குறைத்து, இப்படிப்பட்ட சிக்கனங்களை எல்லாம் மேற்கொண்டு வருமானத்தை மிச்சப்படுத்தக்கூடிய ஒரு நுணுக்கமான அணுகுமுறை, பொருளாதார அணுகுமுறை, நிர்வாக அணுகுமுறை, தமிழகத்தினுடைய முதலமைச்சர் தொடர்ந்து மேற்கொண்டு வருகிற காரணத்தால் தற்போது 2005–06 ஆம் ஆண்டுக்கு அந்த 2003–04-லே வெறுமனே 23,705.71 கோடி ரூபாய் என்று இருந்த அந்த வருவாய் வரவு, 30,251.53 என்ற அளவிற்கு உயர்த்தக்கூடிய ஒரு சிறப்பை, ஒரு சாதனையை தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் இடையிலே எங்களுக்கு இயற்கை தந்த தொல்லை, அந்தச் சுனாமி, தொடர் வறட்சி இப்படிப்பட்ட உபாதைகளிடமிருந்தும் தமிழகத்தைக் காத்து, மக்களைக் காத்து இந்த 2004–05 திருத்த மதிப்பீட்டிலே வெறுமனே 1,687.39 கோடி ரூபாய்தான் revenue deficit என்ற நிலையை உருவாக்கி தற்போது 2005–06-லே revenue deficit 1,404 கோடி ரூபாய் மட்டுமே என்ற நிலையை உருவாக்கியது என்பது ஒரு வரலாற்றுச் சாதனை..

பிற்பகல் 12–20

Deficit Budget என்பது கூடாது. அதை நிலைக்கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்பதிலே தொடர் அக்கறை செலுத்திய காரணத்தால், தொடர்ந்து இதைக் கண்காணித்த காரணத்தால், ஒருபுறம் நிதிச் சீர்திருத்தமும் இருக்க வேண்டும். இன்னொருபுறம் ஏழைகளின் நல்வாழ்வுத் திட்டங்களும் நடக்க வேண்டும். இன்னொருபுறம் வளர்ச்சிப் பணிகளும் நடக்க வேண்டும். இப்படிப்பட்ட அணுகுமுறையை, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்தில் முதலமைச்சர் புரட்சித்



தலைவி மேற்கொண்ட காரணத்தால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) சீரழிந்த நிதிநிலை, கஜானா காலி என்ற கடந்த கால நிலை, இவற்றையெல்லாம் மாற்றி, அதுமட்டுமல்ல, ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக்கூட, கொடுக்க முடியாத கடந்தகால நிலையையெல்லாம் மாற்றி, ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் பாக்கி தரவேண்டிய நிலையை, இல்லை என்ற அற்புதமான நிலையை உருவாக்கக்கூடிய ஒரு சாதனையை, நிதி நிர்வாகச் சாதனையை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை வருவாயைப் பெருக்கி உருவாக்கியிருக்கிற உன்னத தலைவிதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தற்போது, உங்களுக்குத் தெரியும். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோதுகூடச் சொன்னார். 6,040 கோடி ரூபாய் என்ற திட்டத்தை 5,200 கோடி ரூபாய் என்று குறைத்தீர்களே என்று சொன்னார். அதற்குக்கூட நான் விளக்கம் தந்தேன். அப்போது, தமிழகம் எப்படிப்பட்ட நிலையில் விட்டுச் செல்லப்பட்டது? இப்போது சரிசெய்யப்பட்டு, நாங்கள் இந்த 2002–2007 ஆம் ஆண்டிற்கான பத்தாவது திட்ட ஒதுக்கீட்டை 40,000 கோடி ரூபாய் என்று நிர்ணயித்தோம். அப்படி 40,000 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கலாம் என்ற முடிவெடுக்கப்பட்டபோதுகூட, நான்கூடச் சற்று யோசித்தேன். முடியுமா, இப்படிச் சீர்கெட்டிருக்கின்ற நிதிநிலை. நிதிச் சீர்திருத்தம் என்றால் எதிர்ப்பு. நிதிச் சீர்திருத்தத்தில் ஏழைகளுக்கும் உ[illegible] வேண்டுமே, எப்படி சாத்தியக்கூறு என்று எண்ணியபோது, [illegible]புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், [illegible]ங்களுக்கு வழிகாட்டினார்கள். ஆலோசனைகளைக் கூறினார்கள். ஒன்று; வரி மூலமாக வருமானத்தைப் பெற்றுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். வரியோ, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உயர் வரியாக தமிழகத்திலே ஆண்டு பலவாக இருக்கின்ற நிலை. அடுத்து, மைய அரசு ஒதுக்க வேண்டும். விருப்ப ஒதுக்கீடு என்ற அதிகாரம் மைய அரசுக்கு இருந்தபோதிலும்கூட, தமிழகத்தைத் தொடர்ந்து புறக்கணிக்கின்ற அணுகுமுறையை — டெல்லியிலே யார் ஆட்சியிலே இருந்தாலும் சரி — மேற்கொள்கிற காரணத்தால் அந்த நிதியாதாரமும் கிட்டாத நிலை. அப்போதுதான் முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்தார்கள். அந்த முடிவின் அடிப்படையில்தான் சிக்கனங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். தேவையில்லாத் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். திட்டச் செலவைக் குறைந்த செலவிலே நவீன தொழில் நுட்பத்தோடு சிக்கனத்தை மேற்கொண்டு, செம்மையான திட்டத்தை,

தரமான திட்டத்தை எப்படி உருவாக்குவது என்பதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அடுத்து, மாநில வருவாயை நாம் பெருக்க வேண்டும். ஆயத் தீர்வைத் துறை மூலமாக வருகின்ற வருமானம், அதேபோல Sales Tax, Commercial Taxes மூலமாக வருகிற வருமானம், பதிவுத் துறை மூலமாக வருகிற வருமானம், இந்த வருமானங்களையெல்லாம் பெருக்குவதற்குரிய வழிகளை நீங்கள் கண்டறிய வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அவை ஆயப்பட்டன. அதன் விளைவாகத்தான் இன்று ஆயத்தீர்வையிலே வரி, அதிகப்படியான வருமானம் கிட்டியிருக்கிறது. அதேபோல, பத்திரப் பதிவுத் துறையிலே வரலாறு காணாத அளவிற்கு வருமானம் கிட்டியிருக்கிறது. Commercial Taxes Department-ஐப் பொறுத்தவரைக்கும் அதிகப்படியான ப்ளஸ் என்ற முறையிலே, அதிகப்படியான வருமானத்தை ஈட்டி, மைய அரசினுடைய பாராட்டுதலையே பெற்றிருக்கிற அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது, 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையம் பற்றி சில விவரங்களை எடுத்துக்கூறி, 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைச் சுட்டிக்காட்டி, சில முரண்பாடான விவரங்கள் உள்ளன என்று சொன்னார். இது தவறான வாதம் ஆகும். 2004–2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் டேனிடா திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள விவரங்களைச் சேர்த்து, விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டுவிட்டது. மேலும், அங்கே கூறப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 93 ஆகும். தற்போது கூறப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 104 ஆகும். இவை நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகும். 2004–2005 ஆம் ஆண்டில் 746 துணை சுகாதார நிலையங்கள் என டேனிடா திட்டத்தில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்களையும் சேர்த்து எண்ணிக்கை பெறப்பட்டுள்ளன. டேனிடா திட்டத்தில் துணை சுகாதார நிலையத்தின் கட்டுமானச் செலவு குறைவாகும். இந்த இரு மாற்றங்களினால் ஒதுக்கீட்டுத் தொகையில் மாற்றம் ஏற்படுகிறது. இதில் எந்த முரண்பாடும் இல்லை என்பதனை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். மைய அரசினுடைய நிதிநிலை மிகச் சிறந்த நிதிநிலையைக் கொண்டு வந்து மாநிலத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. அதைச் சரியாகப் ப்யன்படுத்த வேண்டும். மாறாக, விவசாயத் துறை போன்றவற்றையெல்லாம் சாதாரணமாக விட்டுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், மைய அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்தவரைக்கும் எப்படிப்பட்ட நிதிநிலை என்பதை பல பொருளாதார நிபுணர்கள் அதை விவரித்து உள்ளார்கள். அவர்கள் சொல்கிறார்கள்.

'It could be argued, for instance, that in increasing the role played by surcharges and cesses in Central taxation the Central Government is squeezing the States because this impose do not have to be shared under the Finance Commission 30.5% formula in moving from a 35% Corporate tax rate to a 30% rate plus a 10% surcharge, the States now get less than 90% of the tax taken from Companies.'

இதை நான் சொல்வதற்குக் காரணம், மைய அரசு தற்போது கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலையைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசுக்கு அதிகப்படியான வருவாய் கிட்டக்கூடிய வாய்ப்பு அதில் இல்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்னும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது, இதுகாறும் மாநில அரசுகளுக்கு அவர்கள் ஒதுக்கிய பணத்திலே onward lending, அதாவது அவர்கள் மாநில அரசுக்குக் கொடுக்கின்ற பணத்தைக் குறைத்துவிட்டார்கள். 30 சதவிகிதம் grant. 70 சதவிகிதம் கடன் என்றுதான் மைய அரசு இதுகாறும் கொடுத்து வந்தது. தற்போது அந்த 30 சதவிகிதம் grant வரும். ஆனால், அந்த 70 சதவிகித கடனை மாநில அரசே அதனுடைய முயற்சியில் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிகப்படியான வரி வருமானத்தைப் பெற்றிருக்கிற மைய அரசு நிதிநிலைத் தட்டுப்பாட்டில் தத்தளித்திருக்கின்ற மாநிலங்களை மீண்டும் நசுக்கி இந்த Federal System என்ற ஒரு முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, Unitary System என்ற முறையில் மைய அரசு நகர்ந்து செல்கிறது. அதற்கு அணுகுமுறையாக அவர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள். Normal Central Assistance–ல் 25,188.07 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு தற்போது அதை 23 ஆயிரத்து 70 கோடி ரூபாய் என்று மாநிலங்களுக்குக் குறைத்துவிட்டார்கள்.

மற்றும் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்கள். மாநிலங்களைப் பொறுத்தவரைக்கும் 18 சதவிகிதம் என வளர்ச்சியினைக் கணக்கிட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், 8 சதவிகிதத்திற்கு மேல் வளர்ச்சியினைக் காட்ட முடியாது என்பது நிலை. ஆனால், 18 சதவிகிதம் என்ற வளர்ச்சியினைக் காட்ட வேண்டுமென்கிறார்கள். ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் 13.74 சதவிகிதம் நாம் வளர்ச்சியைக் காட்டியிருக்கிறோம். ரூ. 8,001 கோடியிலிருந்து ரூ. 9,100 கோடி என்ற முறையிலே நாம் கொண்டு இருக்கிறோம். ஆனால், மைய அரசைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் 15 சதவிகிதம் growth, revenue expenditure என்று அவர்கள் ஒதுக்குகிறார்கள். ஆனால், மாநிலத்திற்கு 8 சதவிகிதம்தான் தருகிறார்கள். அப்படியென்றால் என்ன, மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டிய பணத்தை அவர்கள் வைத்துக்கொண்டு அதை மைய திட்டங்களுக்குத் தந்து, மைய அரசே நேரடியாக மக்களுக்குப் பல முறையில் பஞ்சாயத்து ராஜ் போன்ற முறையில் தந்து, மாநிலத்திற்கு ஏற்கெனவே இருக்கின்ற அதிகாரத்தைப் பறிக்கக்கூடிய ஒரு அணுகுமுறையை இந்த நிதிநிலை அறிக்கையிலே மைய அரசு கொண்டு வந்து, மாநில உரிமை அதிலே பறிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், தற்போது Backward Districts Area Fund என்ற ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் வளர்ந்துவிட்ட மாநிலம் என்று அதைச் சொல்லிவிடுகிறார்கள். தமிழகத்தை வளர்ந்துவிட்ட மாநிலம் என்று சொல்லி அந்த Backward Districts Area Fund என்ற முறையிலே விருப்ப ஒதுக்கீடாக பல மாநிலங்களுக்கு அவர்கள் அவர்களுக்கென்று வழிவகைகளை வைத்து அதன்மூலம் கொடுக்கிறார்கள். அதன்மூலமாக தமிழகத்திற்குப் பெரிய இழப்பு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதனையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டோம் என்றால், 8 மாநிலங்களுக்கு 10,171.65 கோடி ரூபாய் உதவி மானியங்களை தற்போது 12-வது நிதிக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய பிரதேசம், இராஜஸ்தான், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களுக்கு, நிதியை ஒதுக்கி, — மத்திய பிரதேசத்திற்கு 459.56 கோடி; இராஜஸ்தானுக்கு 100 கோடி; அதைப்போல மேற்கு வங்காளத்திற்கு 391.86 கோடி என ஒதுக்கி பிரத்யேகமாக அந்த மாநிலங்களைப் பின்தங்கிய மாநிலங்கள் என்ற புதிய அணுகுமுறையைக் கொண்டு வந்து, மாநிலத்தினுடைய உரிமையை மீண்டும் பறித்து, மாநில சுயாட்சி உரிமையைப் பறித்து, தென்னக மாநிலங்களை அறவே புறக்கணித்து இந்த நிதி ஆதாரம் நமக்குக் கிட்டாத ஒரு நிலையை



தற்போது 12-வது நிதிக் குழுவும் மைய அரசும் மேற்கொண்டிருக்கிறது என்ற வேதனையான செய்தியினைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

அதைப்போலவேதான் மருத்துவத் துறையில், 7 மாநிலங்களுக்குப் பின்தங்கிய மாநிலங்கள் என்ற குறியீட்டுக்குள் அவர்களைக் கொண்டுவந்து, 2005-லிருந்து 2010 வரை 5,887.08 கோடி ரூபாய் அந்த மாநிலங்களுக்கு உதவி மானியங்களை தருகிறார்கள். ஆனால், தமிழகம் உள்ளிட்ட எந்தத் தென்னக மாநிலத்திற்கும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்கிற மைய அரசு — தற்போது நிதித் துறை, நிதி அமைச்சகம் இப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிற காரணத்தால் பெரிதும் பாதிக்கப்படுகின்ற மாநிலம் தமிழகம் என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, சிக்கலுக்கான – தனிப்பட்ட சிக்கல் — special problems — என்று 11 துறைகளுக்குப் பணத்தை ஒதுக்கலாம் என்று மைய அரசு ஒரு முடிவு செய்திருக்கிறது அந்த நிதிக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று. அதிலே ஆந்திர மாநிலத்திற்கு 500 கோடி ரூபாய், கர்நாடகத்திற்கு 600 கோடி ரூபாய், கேரளத்திற்கு 500 கோடி ரூபாய், இராஜஸ்தானுக்கு 450 கோடி ரூபாய், மேற்கு வங்கத்திற்கு 890 கோடி ரூபாய். ஆனால், அதிலேயும் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் வெறுமனே 300 கோடி ரூபாய் என்று மட்டுமே ஒதுக்கி இருக்கிறார்கள். இப்படி மைய அரசினுடைய தற்போதைய அணுகுமுறையைப் பொறுத்தவரைக்கும் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி, அவர்கள் தற்போது கடைப்பிடிக்கின்ற நிதி அணுகுமுறை, பொருளாதார அணுகுமுறையாக இருந்தாலும் சரி, தமிழகத்திற்குப் பாதகத்தைத் தருகின்ற அணுகுமுறையாக இருக்கிறது. குறிப்பாக, கல்வித் துறைக்காக 10,171.65 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். சுகாதாரத் துறைக்கு 5,887.08 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதேபோல அந்த gap grant என்று 56,855.87 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக 72,914.6 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், கல்வித் துறைக்கோ, சுகாதாரத் துறைக்கோ அது மாநில அரசினுடைய gap grant, நமக்குள்ள வருவாய்ப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற அதை ஈடுகட்டுவதற்கோ, சல்லிக் காசுகூட தற்போதைய மைய அரசு நிதித் துறை ஒதுக்கவில்லை என்ற வேதனையான இந்த நிகழ்வினை, இந்த உண்மையினை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது சொன்னார்கள். Devolution (குறுக்கீடு) மாநில உள்ளாட்சி அமைப்புகளுக்கு நாம் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகிறபோது சொன்னார்கள். State Finance Commission–ஐப் பொறுத்தவரைக்கும் அது ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டு, இவ்வளவு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கவேண்டுமென்று முடிவு செய்திருந்தது. 1997–லிருந்து 2001 வரை இங்கு தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆட்சி அந்தக் காலகட்டத்தில் State Finance Commission கூறிய, அவர்களால் வரையறுக்கப்பட்ட தொகையில், 204.44 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கத் தவறிவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட தொய்வுதான் இந்தத் தொய்வு என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். ஆனால், நமது அரசைப் பொறுத்தவரைக்கும், 2001–2002–ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது நான் ஏற்கெனவே கூறியதைப்போன்ற ஒரு நிதி நெருக்கடி, ஓர் இடர்ப்பாடு இருந்த காரணத்தால், உடனடியாக அவர்களுக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலை இருந்தது. ஆனாலும்கூட, அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகள்தான் ஒரு நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் ஆணிவேர்; அவற்றை நாம் ஊக்குவிக்க வேண்டுமென்று ஆணையிட்டு, அதன் காரணமாக 2002–2003–லிருந்து அந்த நிதி ஒதுக்கீட்டைத் தர ஆணையிட்டார்கள். அப்படி ஆணையிட்டதன் காரணமாக 835.02 கோடி ரூபாய் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தராத 204.44 கோடி ரூபாயையும் சேர்த்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு devolution என்ற முறையிலே நிதிப் பகிர்வு அளிக்கப்பட்டுவிட்டது.

பிற்பகல் 12–35

அதுமட்டுமல்ல, கூடுதலாகக்கூட 254.73 கோடி ரூபாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெரிய மனதின் காரணமாக, உள்ளாட்சி அமைப்புகள் வளர வேண்டும், அவர்களுக்குத் தொல்லை தரக்கூடாது, அவர்கள் வளர்ச்சிதான் நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும் என்ற முறையிலே 254.73 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். தற்போதுகூட, இந்த நிதிநிலையில் 2004–2005–லே 1,375.86 கோடி ரூபாய் revised estimate–ல் நாங்கள் போட்டிருக்கிறோம். அதைத் தற்போதைய நிதிநிலையில் 1550 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது தரப்படும் என்பதனையும் நான் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



சில உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். உழைக்கும் வர்க்கத்திற்கு வேண்டிய சில சலுகைகள், உதாரணமாக, Electricity Board and S.T.U.s– State Transport Undertakings போன்றவற்றின் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு விரைவு முடிவு எடுக்கப்படாததற்குக் காரணம், globalisation policy–யை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, அதைக் கடைபிடிக்கிறீர்களா என்றுகூடப் பேசினார்கள். ஏழையெளிய மக்களின் வாழ்க்கையில் ஏற்றத்தை உருவாக்க வேண்டும், உழைக்கும் வர்க்கம் உய்வினை அடைய வேண்டும் என்பதில் புரட்சித் தலைவிக்கு நிகரான ஒரு தலைவி தமிழகத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் இல்லை என்ற முறையிலே, அவர்கள் ஏழைகளுக்காக, இக்கட்டான நிதிநிலை இருந்தபோதிலும்கூட, எண்ணற்ற சலுகைகளை ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவிலே அள்ளித் தருகின்ற உள்ளத்திற்குச் சொந்தக்காரர்தான் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள். நீங்கள் அப்படிப் பேசுகிறபோது ஒன்றை எண்ண வேண்டும். ஏதோ பேசுகிறோம் என்பதற்காக globalisation, privatisation என்றெல்லாம் பேசிவிடக்கூடாது.

இங்கேயிருக்கின்ற கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், டெல்லி ஆட்சியிலே இருக்கிறீர்கள். அங்கு நீங்கள் பேச வேண்டியதை இங்கு பேசுவது அர்த்தம் இல்லாத ஒன்று. (குறுக்கீடு) டெல்லியிலே இருக்கிறீர்கள், இங்கே வந்து globalisation–ஐயும், privatisation–ஐயும் நீங்கள் பேசுகிறீர்கள். பேசி, அந்தக் காரணத்தினாலே நாங்கள் செயல்படுகிறோம் என்று ஏன் சொல்கிறீர்கள்? அப்படி இருந்ததென்றால், இப்போது UPA Government–ல் இருக்கிறீர்கள். Common Minimum Programme என்ற ஒரு guidelines–ஐ நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அதை வைத்துக்கொண்டு செயல்பட்டபோதிலும், இது ஒரு புரியாத விந்தையாக இருக்கிறது. அங்கு ஒரு கொள்கையா? இங்கு ஒரு கொள்கையா என்று புரியவில்லை. தற்போது Tele–communication–க்கு 74% வரைக்கும் foreign direct investment–ஐ இப்போது allow பண்ணுகிறார்கள். 49% Insurance and Civil Aviation–ல் allow பண்ணுகிறார்கள். நீங்கள் ஒரு வருடமாக கூடாது, கூடாது என்று சொல்லிக் கொண்டேயிருந்தீர்கள். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு விளக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** No, I am not yielding. No, no. வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும். பேசி முடிக்கட்டும், கடைசியில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, வேண்டாம் வேண்டாம். time இருக்காது. உங்களுக்கும் பசிக்கும், பிறகு எனக்கும் (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். Insurance and Civil Aviation-ல் 4 சதவிகிதம் allow பண்ணுகிறார்கள் (குறுக்கீடு) இதெல்லாம் நடைமுறை உண்மை. நீங்கள் எதிர்த்துக் கொண்டே இருக்கிறீர்கள். ஆனால், அவர்கள் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் வந்து WTO-வை கொண்டு வந்து கொண்டேயிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, அதைக் கொண்டு வருகிறார்கள். (குறுக்கீடு) உங்களுடைய உயிர்க் கொள்கை ஏகாதிபத்தியம் கூடாது, (குறுக்கீடு) இருங்கள்; ஏகாதிபத்தியம் கூடாது, imperialism கூடாது. capitalist–னுடைய control கூடாது என்று நீங்கள் சொல்லிக்கொண்டு, அதைத்தான் நீங்கள் உயிர்க் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது உங்களுக்கு உயிர்க் கொள்கை. அதைக் கொண்டு வருவது காங்கிரஸிற்கு உயிர்க் கொள்கை. ஆனால், காங்கிரஸ் கொண்டுவந்து கொண்டேயிருக்கிறது. நீங்கள் அந்தக் கூட்டணியிலே இருந்து கொண்டேயிருக்கிறீர்கள். உங்கள் சபாநாயகர்.... (குறுக்கீடு) உங்களவர் அங்கே சபாநாயகராக இருந்து கொண்டேயிருக்கிறார். இப்படி சி.பி.எம். இயக்கம், கொள்கை உடைய இயக்கம் மாறுபட்ட வேடம் போடக்கூடாது என்பதற்காக, அதை வைத்து எங்களைத் தாக்கக்கூடாது என்பதற்காக இதை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது, மைய அரசினுடைய பட்ஜெட் மிகச் சிறந்த பட்ஜெட், மாநிலங்களைக் காக்கின்ற பட்ஜெட், பல துறைகளுக்கு நிதிகளைத் தருகின்ற பட்ஜெட் என்றெல்லாம் சொன்னார். ஆனால், அந்த மைய அரசினுடைய பட்ஜெட்டில் (குறுக்கீடு) அந்தப் பொருளோடு சொன்னார்.. (குறுக்கீடு) அந்த வார்த்தைகளே இல்லை, அந்த வார்த்தைகளே இல்லை. மைய அரசினுடைய பட்ஜெட்டைப் பாராட்டிச் சொன்னார், பாராட்டிச் சொன்னார். மத்திய பட்ஜெட், வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாடும் ஏழையெளிய மக்களுக்கு ஏற்ற வகையில் இல்லாமல், உயர்தர மக்களை மட்டுமே கருத்தில்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். யார் என்று கேட்டால் உங்களுக்கு ஆச்சரியம் வந்துவிடும்.

*பிற்பகல் 12-40*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள்தான் சொல்லியிருக்கிறோம். அதிலே என்ன doubt?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பாராட்டிய, மைய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய பட்ஜெட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி.யும், A.I.T.U.C.-யின் பொதுச் செயலாளருமான குருதாஸ் குப்தா அவர்கள் கடுமையாக விமர்சித்து, 'மத்திய பட்ஜெட் வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாடும் ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற வகையில் இல்லாமல், உயர்தர மக்களை மட்டுமே கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட். தரமான வாழ்க்கைக்கு, தரத்தை மனிதனுக்கு அளிக்கத் தவறிவிட்டது. பட்ஜெட்டில் கிராமப்புற வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் சொல்லியிருக்கிறார். இது நிச்சயமாக நடுநிலையான பட்ஜெட் இல்லை. பசி, பட்டினிக்கும், வேலைவாய்ப்புக்கும் முக்கியத்துவம் அளிக்காத வரையில் இந்த பட்ஜெட்டை வரவேற்க முடியாது' என்று கூறியிருக்கிறார் என்பதனை, எப்படிப்பட்ட கூட்டணி, டெல்லியிலே இருக்கிற உங்களுடைய கூட்டணி என்பதனை அவை உணர வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அதுமட்டுமல்ல, same-side goal என்பார்கள். (குறுக்கீடு) Honourable Speaker, I am not yielding to Mr. Hemachandran. Whatever he wants to raise, he can raise after I conclude my speech.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன். மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எங்களைப்பற்றிக் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார். நாங்கள் அதற்குப் பதில் சொல்ல வாய்ப்புத் தர வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் கடைசியாக, அவர் பேசிய பிறகு கேளுங்கள். அமைச்சர் பேசி முடிக்கட்டும், பிறகு நீங்கள் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இது குற்றச்சாட்டே இல்லை. நீங்கள் கூறியிருக்கிற குற்றச்சாட்டுத்தான் இது. நீங்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்கிறேன். அடுத்து, மைய அரசினுடைய பட்ஜெட்டுக்கு லயோலா காலேஜிலே நடந்த ஒரு Assessment Meeting-லே சொல்லியிருக்கிறார் உங்கள் ஆள். (குறுக்கீடு)

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய பட்ஜெட்டை இவர்கள் மட்டும் குறை சொல்லவில்லை.

same–side goal போட்டிருக்கிறார்கள்; காங்கிரஸ்காரர்களே குறை சொல்லியிருக்கிறார்கள். "Congress Bharat Krishak Samaj – BKS - Executive Chairman, Dr. Krishan Bir Chaudhary and CPI's All India Kisan Sabha General Secretary Mr. Atul Anjan described Mr. Chidambaram's gesture as an eye-wash. They alleged that the budget had not done anything to raise the income of the farmers" என்று சொல்லியிருக்கிறார்கள்.

மேலும் "Mr. Anjan demanded immediately to redress their grievances and offload 80 billion US dollars Forex reserve to boost the farmers' income" என்று சொல்லியிருக்கிறார்கள். 80 Billion Dollar Foreign Exchange Reserve இருக்கிறதே அதை முதலிலே வெளியே கொண்டு வாருங்கள், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதைச் செய்யுங்கள் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் சௌத்ரி சொல்லியிருக்கிறார். Credit flow will be a burden on farmers as long as interest on loans remain. மைய அரசினுடைய........

**திரு. ஜெ. அன்பழகன்:** அவர் நம்முடைய பட்ஜெட் பற்றிச் சொல்கிறாரா இல்லை மத்திய பட்ஜெட்டைப்பற்றிச் சொல்கிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) நம்முடைய பட்ஜெட்டைப் பற்றித்தான் பேசுகிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மைய அரசினுடைய வட்டி விகிதம். வட்டி விகிதத்தைப் பொறுத்தவரைக்கும் (குறுக்கீடு) மாநில அரசுகள் எல்லாம் மைய அரசிடம் கடன் வாங்கித்தான் ஆட்சி நடத்துகின்றன. அதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் விவசாயப் பிரிவினுடைய தலைவர்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** காங்கிரஸ் விவசாயப் பிரிவினுடைய தலைவர், அகில இந்தியத் தலைவர் திரு. சௌத்ரி சொல்கிறபோது சொல்கிறார், 'விவசாயிகளுக்காக இருக்கின்ற வட்டி விகிதமோ 12 சதவிகிதம், 16 சதவிகிதம் என்ற வரைக்கும் இருக்கிறது. இந்த நிலை மாறினால்தான், விவசாயிகளின் கடனுக்கான வட்டியைக் குறைத்தால்தான் இந்த நாடு முன்னுக்கு வரும் என்று சொல்லி, ஆந்திர மாநிலம் போன்ற மாநிலங்களுடைய விவசாயிகள் தற்கொலை செய்து



கொள்கின்ற நிகழ்வு போக வேண்டுமென்றால், கிராமப்புறத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் தரவேண்டும். அப்படி மைய அரசினுடைய நிதிநிலை அறிக்கை தரவில்லை, கிராமப்புறத்தைப் பாதுகாக்கவில்லை. கிராமப்புற மக்களுக்கு வட்டியைக் குறைக்கவில்லை. வட்டி அதிகமாகப் போட்டுக்கொண்டு, நான் இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன் என்று சொல்வது, மீண்டும் தற்கொலையில் முடியும்' என்று அவர் கூறியிருக்கிறார் என்பதனை நான் அவைக்குக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு) ஏன் சார், நீங்கள் மைய அரசில் இப்போதுதானே, தற்காலிகமாக சேர்ந்திருக்கிறீர்கள். அப்புறம் ஏன் மைய அரசைச் சொன்னால்....

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். நிதி அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நாங்கள் சொன்னதைச் சொல்லுகிறார். அதிலே ஒரு Point of Clarification.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதைப் பலமுறை சொன்னாலும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, பலமுறை சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No, No, No. I am not yielding. (Interruption) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. ஒரேயொரு செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். நிதியமைச்சர் பேசுகிறார். அவர் பேசி முடிக்கட்டும்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சரி, நான் பேச்சை முடித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். இது காகிதப் பூ நிதிநிலை அறிக்கை என்று எங்களைப்

பாராட்டி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசினார்கள். அதற்காக அவருக்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்மா அவர்கள் பேசுகின்றபோது விளக்கம் சொன்னார்கள். அழகான விளக்கத்தைச் சொன்னார்கள். இப்படி அம்மா அவர்கள் விளக்கம் சொல்வார்கள் என்று தெரிந்திருந்தால், திரு. ஸ்டாலின் அவர்கள் இந்த உவமையைச் சொல்லி மாட்டிக் கொண்டிருக்கமாட்டார் என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் மணக்கின்றது, காகிதப் பூ மணக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு திட்டங்கள்—ஒருபுறம் ஏழை எளிய மக்களுக்குத் திட்டங்கள்; இன்னொருபுறம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள். நிதியை ஒதுக்கவில்லை, எதற்குமே நிதி இல்லை, எதற்குமே நிதியில்லை என்றபோது, உலகமே பாராட்டக்கூடிய அளவிற்கு, இந்தியாவின் பொருளாதார வல்லுநர்களெல்லாம் பாராட்டுகின்ற நிதிநிலை அறிக்கை இது. நல்ல உள்ளம் படைத்த நடுநிலையாளர்களெல்லாம் பாராட்டுகின்ற நிதிநிலை அறிக்கை இது. ஆனால், ஒருவேளை அடிநெஞ்சில் கையை வைத்து நீங்கள் பாராட்டிக் கொண்டு, அரசியல் காரணத்திற்காக இதில் ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று சொல்கிறீர்களோ என்று நான் கருதுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கெனவே இங்கே விளக்கிச் சொன்னதைப் போல 40 ஆயிரம் கோடி. development outlay நாங்கள் சொன்னோம். We are achieving it. இரண்டாவது Annual Plan outlay–ஐப் பொறுத்தவரைக்கும் இக்கட்டான நிதி நெருக்கடியிலும் 8001 கோடி ரூபாயை 2004–2005–ல் நாங்கள் ஈடேற்றிக் காட்டுவோம் என்று சொல்லி ஈடேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட, நிதிச் சீரழிவில், இந்தியாவிலேயே எந்த மாநிலமும் பெறாத சாதனை இது. இப்படிப்பட்ட நிதி நெருக்கடியில் இருந்து கொண்டு தொடர்ந்து plan outlay–ஐப் பொறுத்தவரைக்கும் படிப்படியாக அதிகமாக வாங்கிக் கொண்டே வந்து இன்றைக்கு 9100 கோடி ரூபாயைப் பெற்ற சாதனையை எந்த மாநிலமும் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் செய்திருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. Plan outlay இந்த ஆண்டுக்கு 9000 கோடி ரூபாய் வரை எந்த மாநிலமும் பெறவில்லை என்று சொன்னார். நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திரா, நம்மைப் போலவே மாநில மக்கள் தொகை கொண்டது. நம்முடைய அளவுதான் உண்டு. இரண்டு எம்.பி.க்கள்தான் அதிகம். இன்னும் சொல்லப் போனால் இரண்டு பேருக்கும் ஒரே எண்ணிக்கை எம்.பி.-க்கள் தான் ஒரு காலத்திலே இருந்தார்கள். அந்த அளவுதான் இரண்டு மாநில அளவும். ஆனால், ஆந்திராவிலே Plan outlay திட்ட ஒதுக்கீடு என்னவென்று நிதியமைச்சர் அவர்கள் சொல்வார்களா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருளில், பயனிலையை மட்டும் எடுத்துக்கொண்டு எழுவாயையும், செயப்படு பொருளையும் விட்டுவிட்டீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரம் இருந்த நிதிநிலை என்ன? இப்படிப்பட்ட இக்கட்டான நிதிநிலையில் வளர்ச்சித் திட்டங்களுக்குப் படிப்படியாக நிதியினை மைய அரசு கொடுக்க மறுத்துவிட்டது. Reserve Bank எங்களுக்கு O.D. 20, நாட்கள், 25 நாட்கள், 27 நாட்கள், மாதம் O.D. வாங்கித்தான் அடுத்த மாதம் சம்பளம் கொடுக்கக்கூடிய அவல நிலையில் நாங்கள் தள்ளப்பட்டிருந்த காலம். மைய அரசு எங்களுக்கு உதவ மறுத்துவிட்ட காலம். அப்படியிருந்தாலும்கூட, நிதிச் சீர்திருத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தக்கூடிய நிண்ணிய உள உரம் (குறுக்கீடு) it is not BJP. இருங்கள். (குறுக்கீடு) இல்லை, இங்கே நிதி நிலையை இப்படிக் கெடுத்த, கடந்த தி.மு.க. ஆட்சியை நான் சொல்கின்றேன். நீங்கள் அதைக்கூட புரிந்துகொள்ளாமல் திரு. பழனிசாமி, ஏதோ பேசவேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கிறீர்களே! ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலையில் இருந்தபோது, நிதிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதில் ஒரு தொலைநோக்குச் சிந்தனையோடு முதலமைச்சரவர்கள் செயல்பட்டார்கள். ஒருபுறம் எதிர்ப்பு இருந்தது. நிதிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தால் நாங்கள் உங்களை விட்டு ஓடிவிடுவோம் என்று கம்யூனிஸ்ட்டுகளெல்லாம் கூறிய நேரம். அந்த நிதிச் சீர்திருத்தத்தை, நிதி நெருக்கடியை அவர்கள் உருவாக்கிய காரணத்தால்தான் இலவச வேட்டி சேலை திட்டம் போயிற்று, இலவச மின்சாரம் போயிற்று. அது நெஞ்சாரத் தெரிந்திருந்தும்கூட, இந்த நிதி நெருக்கடியை அவர்கள்தான் உருவாக்கினார்கள் என்பது தெரிந்திருந்தும்கூட, ஏதோ அரசியல் காரணமாக செயல்பட்டார்கள். ஆனால், அம்மா அப்படியில்லை. யார் எங்களை விட்டுப் போனாலும், மக்கள் எங்கள் பக்கம் இருக்கின்றார்கள், இந்த மக்களை நாம் காப்பாற்றியாக வேண்டும். இன்றைய அரசியல் பெரிதல்ல, எதிர்கால தமிழகத்தினுடைய செம்மைதான் எனக்கு முக்கியம். ஏழைகளுடைய எதிர்கால நன்மைதான் எனக்கு முக்கியம் (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நோக்கோடு fiscal reforms கொண்டு வந்த காரணத்தால், (குறுக்கீடு) Mr. Karunakaran, நீங்கள் அப்புறம் பேசுங்கள். எனவே, நிருவாகச் செம்மையை, நிருவாகச் சீர்திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் கொண்டு வந்த காரணத்தால், கடந்தகால நிதி இடர்ப்பாட்டிலிருந்து அம்மா தமிழகத்தைக் காத்திருக்கின்றார். தமிழகத்தை, தமிழகத்தினுடைய முதலமைச்சர் செம்மையாக நிர்வாகம் செய்வார், நிர்வகிப்பார், நிதி நிலையைச் சீரமைப்பார், தூய நிர்வாகத்தைத் தருவார் என்று மைய அரசுக்கு நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தால், எங்களுக்கு 8,001 கோடி ரூபாய் தந்தார்கள்; அப்புறம் 9,100 கோடி ரூபாயாக உயர்த்தினார்கள். அது அம்மாவினுடைய நிர்வாகத் திறமைக்கு மைய அரசு தந்த பரிசு. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவினுடைய தனிப்பட்ட நிர்வாகத்திற்குச் சான்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதைப்போலவே, நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை, ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறீர்கள். சுனாமி தாக்கியது. சுனாமி தாக்குதலுக்கு முன்கூட்டியே detection கருவிகள் இருந்திருந்தால், மக்கள் உயிரைக்கூட காப்பாற்றி இருக்கலாம், அந்த 8000 பேரை. அது இல்லை. அப்படியிருந்தும், மைய அரசு இப்போது முழு நிவாரணத்தை நமது பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தர மறுக்கிறார்கள். ஆனாலும்கூட, நமது அம்மா மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நிதி சிக்கலைச் சீர் செய்த காரணத்தால், நிதி ஆதாரத்தைப் பெருக்கிய காரணத்தால், ஒருபுறம் வளர்ச்சித் திட்டத்திற்கு நிதியை ஒதுக்குகிறார், இன்னொரு பக்கம் இலவச வேட்டி சேலை தருகிறேன் என்று ஏழைகளுக்குத் தருகிறார். மறுபுறம் விவசாயிகளே, பாதிக்கப்பட்ட விவசாயிகளே, கடந்த ஆட்சியின் அணுகுமுறையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளே, தொடர்ந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டுவந்த இலவச மின்சாரத் திட்டத்தை உங்களுக்குத் தருவதற்கு இதோ பணம் தருகிறேன் என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழ்நிலையில் எங்களுக்கு வறட்சி. அடுத்து, தற்போது சுனாமி. இருந்தாலும், அம்மா தளரவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தன் வயிற்றுப் பிள்ளைகள் பாதிக்கப்பட்டது போல் துடித்த தாய், ஆயிரம் கோடி ரூபாயை நிதியாக ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை புரிந்தார். நிதியே ஒதுக்கவில்லை, நிதியே ஒதுக்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால், எஸ்.ஆர்.பி. ஒத்துக்கொண்டார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து, காவல் துறை இந்தியாவிலேயே the best Police Force என்று பாராட்டப்படுகிறது என்றால், அந்த அளவுக்கு அவர்களுக்கு அடிப்படை வசதிகளை நாம் செய்து



கொடுத்திருக்கிறோம். அந்தச் சிறப்புக்கு முதுகெலும்பு, ஆணி வேர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இந்த ஆண்டு நாங்கள் வரியைப் போட்டு இந்தப் பணத்தை வாங்கவில்லை. டெல்லி பணம் நிறைய கொடுத்து நாங்கள் போடவில்லை. ஆனால், நிர்வாகத் தூய்மை, நிர்வாகத் திறமை, நிதி சேகரிப்பு, வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) 1,339.33 கோடி ரூபாயை காவல் துறைக்கு அம்மா தந்திருக்கிறார். காவல் துறையை நீங்கள் பாராட்ட வேண்டும். காவல் துறை உங்களையும் காப்பது, எங்களையும் காப்பது, ஆறு கோடி மக்களையும் காப்பது, சட்டம் அமைதியை நிலைநாட்டுவது. அது தொடர வேண்டும். இதை நீங்கள் பாராட்ட வேண்டும். பாராட்ட மனம் இல்லாமல் இருந்தால் அது தவறான ஒன்றாகும். (குறுக்கீடு) Mr. Duraimurugan, எழக் கூடாது.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறைக்கு நாம் அதிகம் செய்யாததைப் போல திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறினார், Primary Sector-க்கு. அது தப்பு. Primary Sector-னுடைய growth 16 சதவீதம் இப்போது increase ஆகியிருக்கிறது. அம்மாவினுடைய முயற்சியின் காரணமாக, வறட்சி என்று இருந்தபோதிலும்கூட, நவீன விவசாய முறையைத் தமிழகத்தில் கொண்டுவருவதற்கு ஆணையிட்டு, அதற்கான நிதியினை ஒதுக்கி, பலவித நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால், 90 இலட்சம் மெட்ரிக் டன் தானிய உற்பத்தியை இன்று நாம் எட்டி இருக்கிறோம். Crop Loan -க்கு 1037.68 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு, Co-operative Credit Institutions-க்குக் கொடுத்திருக்கிறார்கள். போன வருடம் நாம் கொடுத்தது 616.59 கோடிதான். அம்மா ஒன்றுமே பண்ணவில்லை இந்த நிதிநிலை அறிக்கையிலே என்கிறீர்கள். அம்மா சேமித்தார்கள், சேகரித்தார்கள்; ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல. 1037.68 கோடி ரூபாய் கூட்டுறவு அமைப்புகள் மூலமாக உழவர் பெருமக்களுக்குத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதனையாக உங்களுக்குத் தெரியவில்லையா?

அடுத்து, Primary Sector-லே புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்தவரைக்கும் விவசாயத்திற்கு நிறைய செய்திருக்கிறார்கள். 45 ஆயிரம் புதிய electric connections கொடுத்திருக்கிறார்கள். அது உங்கள் கண்ணிலே படவில்லை. ஏன் படவில்லை என்று தெரியவில்லை. New Agri Export Zone-உழவன் உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு value addition வேண்டும், விற்பனைச் சந்தை வேண்டும் என்பதற்காக, 10.36 கோடி ரூபாய் Agri Export Zone ஒன்றுக்கு, கடலூருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவும் உங்கள் கண்ணிலே படவில்லை.

Comprehensive Wasteland Development Programme–க்கு 35 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். Drip and Sprinkler Irrigation–க்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் போலவே pumpset-ஐ modernize பண்ணுவதற்கு 10 கோடி ரூபாய் தருகிறார்கள். ஆயிரம் New Microwater Sets கொண்டுவந்திருக்கிறார்கள். ரூ. 62.5 கோடி ஒதுக்கி, இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்தி, அதைப் புதுப்பித்து, அதன்மூலமாக விவசாய விளைநிலத்தின் பரப்பளவை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். State Water Source Consolidation Project மூலமாக பாலாறு Area–க்கு 20 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–55*

இது எல்லாவற்றையும் விட முக்கியமாக 28 irrigation project — நீர்ப்பாசனத் திட்டங்கள், 28 irrigation projects–க்கு ரூ. 209.07 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் கவனத்திற்காக அதைக் கொண்டு வருகிறேன். அது மட்டுமல்லாமல் இன்னும் 16 நீர்ப்பாசனத் திட்டங்கள், அதற்குத் தனியாக 42.38 கோடி ரூபாய் நபார்டு உதவியோடு கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு பக்கம் விவசாயத்திற்குப் பண்ணியது. விவசாயத்திற்கு ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்லக் கூடாது. (குறுக்கீடு) உள்ளதைத்தானே படித்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, இதில் உள்ளதைத்தான் நான் பேசினேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற நேரத்தில் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு குறைவாக வேளாண்மைத் துறைக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் இல்லை, இல்லை சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னார். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை பத்தி 36-ல் 'வேளாண்மைக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூபாய் 882.41 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது என்பதைத்தான் நான் சொன்னேன். அதேநேரத்திலே இந்த ஆண்டு நம்முடைய budget-லே ஒதுக்கப்பட்டிருப்பது 854.41 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் சொன்னேன். இல்லை, அது ஏதோ மாறியிருக்கிறது என்று சொன்னார். சரியாக இருக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு திட்ட ஒதுக்கீடு குறைவாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக இருக்கிறது.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி.–க்கு இது பூராவும் படிக்க வேண்டுமென்றால், we should take a class for hours together. Now I am coming to it. இப்போது நான் சொல்கிறேன். அந்த லிஸ்ட்டையே வைத்திருக்கிறேன். நானே clean ஆகச் சொல்கிறேன் உங்களுக்கு. அதாவது வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வி என்கிற ஒரு head –லே last year Agriculture University –க்கு grant கொடுத்தது that is adjusted this year, அது ஒன்று. இரண்டாவது, one time relief to farmers and Interest and penal interest நான் ஏற்கெனவே அவையில் சொன்னேன். அது ஒரு காரணம். Agriculture Department–ஐப் பொறுத்தவரைக்கும் நான் தெளிவாகச் சொல்கிறேன், நான் முன்பே சொல்லிவிட்டேன். இதைப் பல தடவை சொல்லிவிட்டேன். Capital Expenditure is different from Revenue Expenditure. For calculation purpose you have to take, club together Capital Expenditure and Revenue Expenditure. They are... (குறுக்கீடு) இல்லைங்க, அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் மூலதனச் செலவைப் பாருங்கள், அதையும் பாருங்கள். நான் ஒட்டுமொத்தமாக (குறுக்கீடு) இல்லை, மொத்த ஒதுக்கீடு தான் (குறுக்கீடு) இல்லை, இல்லை. இல்லை It is not correct. (குறுக்கீடு) மொத்த ஒதுக்கீடு குறையவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டிலே போடும்போது Revenue Expenditure, Capital Expenditure இரண்டும் சேர்ந்து gross amount –ஐத்தான் போடுவார்கள். நாம் Demand–லே பார்க்கும்போதுதான் gross amount எவ்வளவு, அதில் recovery எவ்வளவு வருகிறது, charge எவ்வளவு வருகிறது என்று போட்டுவிட்டு கீழே வந்து அது குறைந்து வரும், அது வரும்போது. அது Demand-லே பார்க்க வேண்டும். ஆனால், பட்ஜெட்டிலே பார்க்கும்போது Revenue Expenditure, Capital Expenditure இரண்டும் சேர்த்துத்தான் இன்ன துறைக்கு இவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்று போடுவார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், நீங்கள் Capital Expenditure தனியாகப் பார்க்க வேண்டும். Revenue Expenditure தனியாகப் பார்க்க வேண்டும். குறுக்கீடு இல்லை, இரண்டையும் சேர்த்துத்தான் போடுவார்கள். அப்படித்தான் வரும் பட்ஜெட்டிலே. Performance பட்ஜெட்டிலே.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நீங்கள் கடைபிடிக்கவில்லை, தற்போதும் அது இல்லை. Revenue Expenditure comes under a different heading. Capital Expenditure comes under a different heading. அதை

ஒட்டுமொத்தமாக கூட்டி நான் சொல்கிறேன் 2003–2004 ஆம் ஆண்டு Agriculture –க்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 652.71 கோடி. Revised Estimate –லே அது 825.49 கோடியாக உயர்த்தப்பட்டது. அது தற்போதைய நிதிநிலை அறிக்கையில் 854.41 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதனை நான் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதிலிருந்து நான் மாறுபடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் மாறுபட்டுவிட்டுப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** புத்தகத்தில் இருக்கின்ற உண்மைத் தொகையை நீங்கள் மாற்றிச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் எந்தப் புத்தகத்திலிருந்து சொல்கிறீர்கள்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எல்லாவற்றையும் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பிறகு எனக்கு நேரம் இருக்காது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை (குறுக்கீடு) பத்தி 36 அதிலே ஒதுக்கியதாக குறிப்பிட்டிருக்கிற தொகை, நிதியொதுக்கீடு ரூபாய், மொத்த திட்ட நிதியொதுக்கீடு ரூபாய் 882.41 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தொகையிலே அது 854.41 கோடிதான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே நிச்சயமாக சென்ற ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைக் காட்டிலும் இந்த ஆண்டு பட்ஜெட்டில் வேளாண்மைத் துறைக்கு 28 கோடி ரூபாய் குறைவாகத்தான் ஒதுக்கி இருக்கிறார்கள். இதை நிதியமைச்சர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை நான் முடித்துவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** எங்களுக்குத் தெரியாமல்கூட இருக்கலாம். நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புவது, Budget Estimate என்று ஒரு தொகையைப் போட்டால், அதில் Capital Expenditure–ம், Revenue Expenditure–ம் சேர்ந்து இருக்கிறதா, இல்லையா? அதை மட்டும் சொல்லுங்கள்.



பிற்பகல் 1–00

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Revenue expenditure — உங்களுக்கு ஒன்று புரிய வேண்டும் – ஒரு நிதிநிலை அறிக்கை என்பது நான் ஏதோ படிக்கிறேன், நிதிநிலை அறிக்கை புத்தகம் என்பது மட்டுமல்ல. இதோடு சேர்த்து உங்களுக்கு பல கையேடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் Budget Memorandum Part–I படிக்கவேண்டும். அது இல்லாமல், along with that I have given the Demands. ஒவ்வொரு துறையினுடைய Demand Copy–யும் உங்களுக்குக் கொடுத்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சென்ற ஆண்டை ஒப்பிடுகிறார். சென்ற ஆண்டினுடைய அந்த நிதிநிலை அறிக்கையை, சென்ற ஆண்டினுடைய – நீங்கள் அந்த Budget Memorandum Part–I–னுடன் சேர்த்து, இரண்டையும் சேர்த்துப் பாருங்கள். ஒட்டுமொத்தமாக 2003–2004 ஆம் ஆண்டுக்கு 652.71 கோடி ஒதுக்கப்பட்டது. 2004–2005–க்கு 825.49 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. தற்போது 2005–2006–க்கு 854.41 கோடி ரூபாய் (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள், நான் முடித்துவிடுகிறேன் இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். I am not yielding, let me finish. 854.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் இன்னொன்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். You are comparing the figures between Revised Estimates and Budget Estimates. You should compare the figures between Budget Estimates and other Budget Estimates. (குறுக்கீடு) No, that is not correct.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Revised Estimate is much low. Revised Estimate–ஐ நான் compare– செய்யவேயில்லை. Revised Estimate–ல் குறைவாகத்தான் செலவு செய்திருக்கிறார்கள்.........

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான வாதத்தை, தவறான புள்ளிவிவரத்தை திரு. எஸ்.ஆர்.பி. தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கட்டும், முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் தெளிவாகச் சொல்லி விட்டேன். எல்லாம் கொடுக்கப்பட்ட நூல்களில் இருக்கின்றது. அதைப்பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும். மேற்கொண்டு இதற்கு விவரம் வேண்டுமென்றால், நிதித் துறைச் செயலாளரை அறையில் சென்று, அவருடைய அறையில் நீங்கள் பிற்பகலில் சென்று கேளுங்கள்.

உங்களுக்குப் புரியாததை அவர் மேலும் புரிய வைப்பார் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) போங்க, பரவாயில்லை.

இதுமட்டுமல்ல. கூட்டுறவுத் துறையும், உழவுத் துறையோடு தொடர்புடையது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுகிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு equity support–க்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். திரு. எஸ்.ஆர்.பி.யும், திரு. துரைமுருகனும் கவனிக்கவேண்டிய ஒன்று கூட்டுறவுச் சங்கங்கள். நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்கள். உங்கள் காலத்தில் நலிந்துபோன கூட்டுறவுச் சங்கங்கள். அந்தச் சங்கங்களுக்கு தற்போது நலிவிலிருந்து விடுபட்டு வளம்பெற வேண்டுமென்பதற்காக, யார் காலத்தில் பாதிக்கப்பட்டாலும்–சங்கத்தில் பொறுப்பிலிருந்தவர்கள் சங்கத்தைச் சுரண்டி விட்டார்கள். ஆனால்–மக்களைப் பாதுகாக்க வேண்டும். விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு மறுவாழ்வு தருவதற்காக 50 கோடி ரூபாயைத் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பால் உற்பத்தி அதிகமாக வேண்டும், பால் சுத்தமாக இருக்கவேண்டும் என்ற முறையிலே 8 கூட்டுறவு — அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களுக்கும் 12.72 கோடி ரூபாய் தந்திருப்பதை நீங்கள் பார்க்க வேண்டும். கிராமத்திற்கு ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்லக்கூடாது. ஒரு விவசாயினுடைய உப வருமானம் பால். அங்கே 12.72 கோடி ரூபாய் அம்மா கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே 28 கோடி ரூபாயைக் கொடுத்து Savings-cum-Relief Scheme என்று fishermen–க்கு மட்டும் கொடுத்துக் கொண்டிருந்ததை இப்பொழுது fisher women–க்கும் கொடுத்து, கடற்கரைச் சாலையிலே இருக்கின்ற அந்தக் கிராமங்களில் இருக்கின்ற அந்த மீனவப் பெண்கள் வயிற்றிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த 28 கோடி ரூபாயை ஒதுக்கி, பாலை வார்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மழை பெய்யவேண்டுமென்றால் மரங்கள் வெட்டப்படக் கூடாது. மரத்தை வெட்டினால் மழை போய்விடும். பசுமைத் தாயகம் ஜி.கே. மணி கொண்டுவர முடியாது. அதற்காகத்தான் அம்மா சொல்கிறார்கள். மழை வரவேண்டுமென்றால் மரங்கள் வெட்டப்படக்கூடாது. பசுமை இருக்க வேண்டும். Ecology should be fully protected. அந்த நோக்கோடு காடுகளில் மரம் வளர்க்கும் திட்டத்திற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு Tamil Nadu Afforestation Project-II–க்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, மரங்கள்



நிறைய வரவேண்டும். பசுமைத் தாயகமாக தமிழகம் உருவாக வேண்டும். அதன்மூலமாக கிராம மக்களும் செழுமையோடு இருக்க வேண்டும், குடிநீர் கிட்டவேண்டுமென்பதற்காக ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, ரூ. 567.42 கோடியில் ஒரு பெரிய திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் பாராட்ட வேண்டாமா? அது கிராம மக்களுக்கு பலனைத் தராத திட்டமா?

அதைப்போலவே, கிராம வறுமையை ஒழிப்பதற்கு ஒன்றுமே செய்யவில்லை என்று கம்யூனிஸ்ட் உறுப்பினர் பேசுகின்றபோது சொன்னார். அம்மா அவர்கள் 25 கோடி ரூபாயிலே ஒரு இலட்சம் குடிசைகள், கச்சா வீடுகள் கட்டுவதற்கு, upgrade செய்வதற்கு — ஒரு இலட்சம் குடிசை வீடுகளையும், கச்சா வீடுகளையும் ஒரு better shelter, நல்ல வீடுகளாக மாற்றுவதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்தான். வறுமையில் வாடுகிற ஏழைகளின் வயிற்றில் பால் வார்க்கின்ற திட்டம். அதைப் போலவே, 50 கோடி ரூபாயை ஒதுக்கி இரண்டு இலட்சம் கிராம ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா தருவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார். அது ஒரு ஒதுக்கீடாக உங்களுக்குத் தெரியவில்லையா?

*பிற்பகல் 1–05*

அதுமட்டுமல்ல, நமது கிராமம் திட்டம். இது அந்தத் திட்டம், இந்தத் திட்டம் என்று திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோது சொன்னார். நமது கிராமம் திட்டத்தை ஒரு கண் துடைப்புத் திட்டமாக வேறு ஒரு பெயரில் வைத்திருந்த காலத்தை மாற்றி அந்தத் திட்டத்தால் பல கிராமத்து மக்கள் பலன் அடைய வேண்டும் என்பதற்காக ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, கிராம மேம்பாட்டிற்காக 200 கோடி ரூபாயை ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வரலாற்றுச் சாதனையை அம்மா செய்திருக்கிறார். இது பெரிய நிதி ஒதுக்கீடாக உங்களுக்குத் தெரியவில்லையா?

அதைப் போலவே, மிகுந்த ஏழ்மை நிலையிலே இருக்கின்ற கிராமப்புற மக்களுக்கு, ultra poor மக்களுக்கு வாழ்விலே poverty reduction, வறுமை ஒழிப்பை அவர்களுக்குத் தரவேண்டும் என்பதற்காக 20 கோடி ரூபாய் நிதியை மேற்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார். இதுவும் ஒரு முக்கியமான திட்டம். அதைப் போலவே Tamil Nadu Empowerment and Poverty Reduction Project ஆறு ஆண்டு காலத்திலே 715 கோடி ரூபாயில் கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கு ஒரு உன்னதத் திட்டத்தை நாட்டுக்குத் தந்திருக்கிறார் நமது

தாய். அதையும் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட எண்ணற்ற திட்டங்கள், சொல்லிக்கொண்டே போகலாம்.

தாய்மார்கள் தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் hand pump-ல் pump பண்ணுவது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது தெரியும். ஆகவே, இந்தியாவிலே முதல் முறையாக Mini Power Pump-ஐக் கொண்டு வந்து ஏழைத் தாய்மார்களுக்கு உதவ வேண்டுமென்ற உன்னதத் திட்டம், இந்த அருமையான சிந்தனை அம்மாவின் உள்ளத்தில்தான், மனதில்தான் உதித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மட்டும் 21 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கி இன்னும் ஒரு 5 ஆயிரம் Mini Power Pump Set-களைக் கொண்டு வருவதற்கு அம்மா அவர்கள் work out பண்ணியிருக்கிறார்கள்.

கிராமப்புறத்திலே குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பிரச்சினையை ஒன்றுமே கவனிக்கவில்லை, கவனிக்கவில்லை என்று எல்லோரும் சொன்னீர்கள். கவனிக்காமல் இல்லை. குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு உலக வங்கியினுடைய திட்ட உதவியோடு 3 ஆயிரம் கோடி ரூபாயில் Tamil Nadu Rural Water Supply Project-ஐ, அந்த அளவிலே, அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கும் தருவாயிலே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற சாதனைத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிச் சொன்னால் முதலில் நீங்கள் கோபித்துக் கொண்டீர்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொன்னேன், பேராசிரியர்கூட, இல்லை, அப்படியில்லையென்று சொன்னார். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரே ஒரு கிராமம், ஒரே ஒரு பஞ்சாயத்து, மீதி பஞ்சாயத்துகள் எல்லாம் வஞ்சிக்கப்பட்டன என்று நான் சொன்னேன், இல்லை என்று சொன்னீர்கள். ஆனால், ஒதுக்கிய நிதி, பிற தொகுதி நிதிகளை அங்கே adjust பண்ணி adjust பண்ணி, கொடுத்துவிட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் வளர்மதி அவர்கள் சொன்னார்கள். ஆனால், அம்மா அவர்களுடைய நோக்கம், கிராமத்திலே இருக்கின்ற விவசாய விளைப்பொருட்கள் should be converted into value added product, thereby they get better price for their agricultural produce. இதுதான் அம்மாவினுடைய நோக்கம். உழவர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்றால், கிராமத்திலே அந்தக் கிராம விளைப்பொருளையொட்டிய தொழிற்சாலைகள் வர வேண்டும். இந்த நல்ல நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 138.43 கோடி ரூபாய் முதலீட்டிலே 213 தொழிற்சாலைகளைக் கொண்டு வந்திருக்கிறாரே, (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு சாதனையில்லையா? நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



கட்சி ரீதியாக நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைக்கலாம், ஆனால், அம்மா அவர்கள் M.L.A. Fund–ஐ ஒரு கோடி ரூபாயாக உயர்த்தினார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) கட்சி பேதமின்றி நீங்கள் எல்லோரும் பாராட்ட வேண்டாமா? அந்தச் சாதனையையும் புரிந்திருப்பது மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலே பல மாநிலங்களில் road–ல் போனால் Car உடனுக்குடன் break down ஆகிவிடும். அப்படிப்பட்ட நிலை. ஆனால், இந்தியாவிலுள்ள சாலைகளிலேயே மிக உன்னதச் சாலைகள் உள்ள மாநிலம் தமிழ்நாடு (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமையோடு மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அம்மாவின் ஆணைப்படியும் இன்று நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதை நீங்கள் பாராட்ட வேண்டாமா? Comprehensive Road Development Programme-க்கு 1050 கோடி ரூபாய், State Highways–க்கும், Major District Roads - இதர மாவட்ட சாலைகளுக்கும் அம்மா ஒதுக்கியிருக்கிறார்கள். இது சாதாரண ஒதுக்கீடல்ல. 750 கோடி ரூபாயை இந்த பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் திட்டத்திலே 2064 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலை, 2114 கிலோ மீட்டர் Major District Roads, 5018 கிலோ மீட்டர் Other District Roads, 1600 கிலோ மீட்டர் Panchayat Union, Panchayat Roads அதை எடுப்பதற்கு இவ்வளவு நிதியை ஒதுக்கி, எவ்வளவு, 1050 கோடி ரூபாயை ஒதுக்கி, கிராமப்புறச் சாலையிலிருந்து மாநில் சாலை வரை இந்தியாவே கண்டு பாராட்டுகிற சாலைகளாக மாற்றி, தொழில் முதலீட்டாளர்கள், தமிழகம்தான் வேண்டும், தமிழகம்தான் வேண்டும் என்று நாடி வரக்கூடிய infrastructure–ஐத் தொலைநோக்குச் சிந்தனையோடு அம்மா தந்திருக்கிறாரே (மேசையைத் தட்டும் ஒலி) இதை நீங்கள் பாராட்ட வேண்டாமா? நாட்டின் நலத்தில் அக்கறை உள்ளவர்கள். இதுபோன்ற நல்ல திட்டங்களை நீங்கள் பாராட்ட வேண்டும்.

பிற்பகல் 1–10

அடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள்–இன்னும் பஞ்சாயத்திற்குப் பணமே இல்லை, ரோடே இல்லை என்று சொன்னீர்கள். முரளிதரன்கூட பேசும்போது சொன்னார்கள் என்று நினைக்கிறேன். தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் 214 கோடி ரூபாய் இதர மாவட்டச் சாலைகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கும், Road outlay--க்காக தந்து இருக்கிறார்கள். இது கிராமப்புற வளர்ச்சிக்கு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற அடுத்த ஓர் உன்னதமான திட்டம்.

பஸ்ஸைப் பற்றி ஏற்கெனவே சொன்னோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய ஒரு விளக்கத்தைத் தந்தார். நல்ல விளக்கத்தைத் தந்தார். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரைக்கும் ஒரு பொற்காலம் – மறுமலர்ச்சியை உருவாக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) பஸ்ஸில் போனால் அதில் இருக்கிற ஓட்டையில் விழுந்து உயிர்போய்விடுகிறது என்ற நிலைமைகளையெல்லாம் மாற்றி, புதிய பஸ் கொண்டு வந்து கொடுத்து --clutch plate இல்லாமல், gear box இல்லாமல், அதை வாங்கப் பணம் இல்லாமல், பெட்ரோல் பங்கிற்கு டீசலுக்குக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல், அவலமான நிதிநிலையில் இருந்த காலம், 2000 2001. அந்த நிலையை எல்லாம் மாற்றி, அந்த டீசலுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய ரூபாய் 900 கோடிக்கு மேல் பணத்தை எல்லாம் கட்டி விட்டு, clutch plate வாங்கி, gear box வாங்கிக் கொடுத்து, புதிய, புதிய பஸ்கள் வாங்கிக் கொடுத்து, மக்கள் பாராட்டுகிற அளவிற்குப் போக்குவரத்துத் துறையிலே மறுமலர்ச்சியைச் செய்து இருக்கிறார்களே, நீங்கள் மனமார இதைப் பாராட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் அப்போதே விளக்கினேன். 3500 கிராமங்களுக்கு 389.40 கோடி ரூபாய் செலவில் 19.07 இலட்சம் மக்கள் பலன் அடையக் கூடிய அளவிற்கு ஓர் உன்னதமான, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இது முக்கியமான திட்டம். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்திற்கு அங்கே இருக்கிற உழவர்களுக்குப் பாதுகாப்பைத் தந்து, விவசாயம் பாதிக்கப்படக்கூடாது என்று திரு. ஜி.கே. மணி போன்றவர்கள் சொன்ன குரலுக்கு உடனே செவிமடுத்து, உங்களுடைய விவசாயிகளும் பாதிக்கப்படமாட்டார்கள், அங்குள்ள மக்களுக்கும் பாதுகாப்புத் தரவேண்டுமென்று அதற்கு பிரத்யேக நிதியை ஒதுக்கி, தடுப்பணையெல்லாம் போட்டு, சென்னைவாழ் மக்களையும் காப்பாற்றவேண்டும், அதேபோன்று, திரு. ஜி.கே. மணி பகுதியில் உள்ள, அந்த மக்களையும் காப்பாற்றவேண்டும் என்று அம்மா 300 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தப் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தை, கிராம மக்களுக்கும் பலன் உள்ள திட்டம், சென்னை மக்களுக்கும் பலன் உள்ள திட்டம் என்று தொலைநோக்குச் சிந்தனையோடு கொண்டு வந்த இந்தத் திட்டத்தை நீங்கள் நெஞ்சாரப் பாராட்ட வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மின்சாரத் துறையிலே கடந்த கால ஆட்சியிலே கைவிட்ட ஒரு திட்டம், Jayankondam Lignite Power Project, அம்மா அதற்கு உயிர் கொடுத்து இருக்கிறார்கள். உயிர் கொடுத்து நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுடன் சேர்ந்து 5000 கோடி ரூபாய் முதலீட்டில் ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் திட்டத்தை தொலைநோக்குச் சிந்தனையோடு, தமிழ்நாட்டுக்கு அடிப்படை வசதியான மின்சாரம் தங்குதடையின்றி கிட்டவேண்டும் என்று, ஏற்கெனவே அந்தச் சாதனையை எட்டிவிட்டார்கள். அந்தச் சாதனை தொடர் சாதனையாக இருக்கவேண்டும். தொழிலிலே நாம் முன்னிலை மாநிலமாக இந்தியாவிலே மிளிர வேண்டும் என்பதற்காக விடுபட்டுபோன திட்டம், விட்டுவிட்ட திட்டம், இல்லை என்று முடிவான திட்டத்திற்கு உயிர் தந்து – அந்தத் திட்டத்திற்கு உயிரைத் தந்திருக்கிறார்களே, இது ஒரு சாதனை அல்லவா? நீங்கள் இதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போலவே, Hyundai Motor Company, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, 2,200 கோடி ரூபாய் முதலீடு செய்து அவர்கள் அந்தத் தற்போது கூடுதல் விரிவாக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொழிற்சாலையினுடைய விரிவாக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ்நாடுதான் அமைதி நிலவுகின்ற மாநிலம். அதைப்போலவே Uninterrupted Power Supply இருக்கின்ற ஒரு மாநிலம். எல்லா வசதிகளும் கிடைக்கின்ற மாநிலம். Single Window Clearance Concept என்ற முறையிலே தங்கு தடையில்லாமல், தாமதம் இல்லாமல், தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு வேண்டிய எல்லா ஊக்குவிப்புகளையும் தருகின்ற ஒரே முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மாதான் என்ற காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) வடபுலத்தே நிறுவப்பட இருந்த அந்த ஹுண்டாய் விரிவாக்கத் திட்டம் 2,200 கோடி ரூபாய் செலவிலே அம்மாவின் முயற்சியால் தமிழகத்திற்கு வந்திருக்கிறது. அதையும் நீங்கள் பாராட்ட வேண்டும். சென்னை நகரம், பெங்களூர் நகரத்தைவிட எல்லாவற்றிலும் மிஞ்சிவிட்ட நகரம் என்று பாராட்டக்கூடிய அளவிற்கு இதனை மேம்படுத்த 2054.09 கோடி ரூபாய் நிதியை அம்மா ஒதுக்கி, அந்தத் திட்டத்தைத் தற்போது ஈடேற்றி வருகிறார்கள். அது ஒரு மாபெரும் திட்டம். அது உங்கள் கண்ணுக்கு ஏன் படவில்லை என்று நான் ஆச்சரியப்படுகின்றேன். இப்படி, புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும் உன்னதமான அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறார். அதற்கு முன்னால் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். மதிப்பிற்குரிய திரு. எஸ். ஆர்.பி. அவர்கள் அந்தப் புள்ளி விவரங்கள் குறித்துப் பேசினார்.

பிற்பகல் 1–15

வேளாண்மைத் துறை சம்பந்தமான சில புள்ளிவிவரங்களைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார். அவர்கள் கடந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் படித்து, நடப்பு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டைச் சுட்டிக்காட்டியுள்ளார். அந்தத் தொகையோடு ஒப்பிட்டு தற்போது ஒதுக்கீடு குறைக்கப்பட்டது என்ற வாதத்தை எழுப்பினார். அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது, ஓராண்டுக்கு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்படுகின்ற தொகை ஒரு மதிப்பீடு ஆகும். அதன் பிறகு திருத்திய மதிப்பீடு வருகின்றது. நடப்பு ஆண்டில் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் வேளாண்மைத் துறைக்கு 825.19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை 854.41 கோடி ரூபாய் ஆகும். எனவே, இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒதுக்கீடு கூடித்தான் இருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. 2003–2004 ஆம் ஆண்டுக்கான கணக்கின்படி செலவிடப்பட்ட தொகை— திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு—2003–2004 ஆம் ஆண்டுக்கான கணக்கின்படி செலவிடப்பட்ட தொகை 652.71 கோடி ரூபாய் என்றிருக்க நடப்பாண்டிலும் சரி, அடுதத ஆண்டிலும் சரி, வேளாண்மைத் துறைக்கு கணிசமான அளவு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இதனைக் குறை கூறுவது விசித்திரமானது. இந்தப் புள்ளிவிவரத்தை என்னுடைய நிதித் துறை செயலாளர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி—time—இருக்கிறது. I can continue upto 1-30. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அணுகுமுறையைப் பொறுத்தவரைக்கும், சீர்கெட்ட நிதிநிலையைச் சீரமைத்து, பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் வாழ்க்கையில்—வயிற்றிலே பாலை வார்த்து, நல்ல வருமானத்தை தொடர்ந்து அடித்தளத்து மக்களும் பெறக்கூடிய அளவுக்கு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஊக்குவிப்பைத் தந்து, இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ் மாநிலம் என்ற நிலையினை அடையக்கூடிய அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த தொலைநோக்குச் சிந்தனையோடும், ஆழ்ந்த அறிவோடும் ஒரு நாளைக்கு 18, 20 மணி நேரம் உழைத்துப் பாடுபடுகிற காரணத்தால், அம்மாவின் இந்த அளப்பரிய தியாகச் சாதனையின் காரணமாகத்தான், இப்படிப்பட்ட சாதனைமிக்க நிதிநிலை அறிக்கை, வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கை, வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் தந்திருக்கிற



நிதிநிலை அறிக்கை, வேளாண்மைக்கு, விவசாயத் துறைக்கு, கிராமப்புறத்துக்கு முக்கியத்துவம் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கை என்று அனைவராலும் பாராட்டக்கூடிய அளவுக்கு கிடைத்திருக்கிறது. இது பெருந்தகை, நமது மாண்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் இந்தச் சிறப்பு சாரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே நான் ஏற்கெனவே சொன்னதுபோல--பல சாதனைகளில் ஒரு முக்கியமான சாதனைதான், a Record Plan Outlay 9100 கோடி ரூபாய் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். தமிழ்நாடு சிலவற்றில் முன்னிலையில் நிற்கிறது என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படி முன்னிலையில் நிற்கின்ற சிலவற்றை மட்டும் கூற விரும்புகிறேன்.

Tamil Nadu enjoys the first place in crop productivity with regard to sugar-cane, groundnut, bajra, cholam. நாட்டிலேயே, கரும்பு உற்பத்தியிலேயும், groundnut-கடலை உற்பத்தியிலேயும், bajra-கம்பு உற்பத்தியிலேயும், சோளம் உற்பத்தியிலேயும், அதனுடைய உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அந்த நிபுணத்துவம், தொழில்நுட்ப விஞ்ஞான மேம்பாடு காரணமாக இந்தியாவிலேயே முன்னிலையை நாம் அடைந்திருக்கிறோம் என்பதனை நான் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி விவசாயத் துறைக்குக் காட்டுகிற முக்கியதுவம் காரணமாக வாழைப் பழ உற்பத்தியில் இந்தியாவிலே தமிழ்நாடு முதல் நிலை என்ற நிலையை தற்போது அடைந்திருக்கிறது என்பதனை நான் கூற விரும்புகிறேன்.

Connectivity-யைப் பொறுத்தவரைக்கும், highest in the country—அதாவது சாலைகள், அதிகப்படியான சாலைகள், இந்தியாவிலேயே, the highest in the country, roads-ஐப் பொறுத்தவரைக்கும், 2990 கோடி ரூபாய் சாலைக்காக ஒதுக்கிய நிதிநிலை அறிக்கை இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்ற சாதனையை அம்மா அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதனை நான் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

அதைப்போலவே, ஆயிரம் பேருக்கு மேல் இருக்கிற ஊர்களுக்கு, 100 per cent அவர்களுக்கு இணைப்புச் சாலைகள், சாலைகளைச் செய்துவிட்டு, இந்தியாவிலேயே சாதனையைப் படைத்திருக்கிற ஒரு மாநிலமும் அம்மாவின் ஆட்சியிலே இந்த ஆட்சிதான் என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, அண்மையிலே ஒரு பரிசைப் பெற்றிருக்கிறோம். இந்திரா காந்தி விருக்ஷ மித்ரா அவார்ட். அம்மா அவர்கள் ஏற்கெனவே சொன்னார்களே, பசுமையைக் காக்க வேண்டும், பசுமையான மரங்களை வெட்டக் கூடாது; afforestation வேண்டும். அதைப்போலவே, waste land பூராவும் develop பண்ணி அங்கேயும் பசுமையைக் கொண்டுவர வேண்டும் என்பதற்கு இந்தியாவிலேயே 3 முக்கிய பரிசுகளை அகில இந்திய அளவிலே பெற்றிருக்கிற பெருமை அம்மாவினுடைய அரசுக்குத்தான் உண்டு என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவேதான் மருத்துவத் துறை. Government — தான் — நம்முடைய அரசு மருத்துவமனைகளுக்கெல்லாம் அரசாங்கம்தான் மருந்தைக் கொடுக்கிறது. ஆனால், அதிலே என்னவென்றால், High quality medicines – மிகவும் தரம் வாய்ந்த மருந்துகளை அரசு மருத்துவமனைகளுக்குத் தருகின்ற பெருமை, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்னிலை என்ற நிலையை, அந்தப் பெருமையை தமிழகம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது அம்மா அவர்கள் தனிப்பட்ட முறையில் எடுத்த முயற்சி. தரக் கட்டுப்பாட்டிற்கு அம்மா அவர்கள் தருகின்ற அந்த முக்கியத்துவத்திற்குச் சான்றுதான் இது என்பதனை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, கல்வித் துறையிலே நிறைய சொல்லலாம். 2003–2004–லே, 100 per cent access to primary schools ஆரம்பப் பள்ளிகளில் 100 சதவீதம் அந்தப் படிக்கின்ற வாய்ப்பைத் தந்திருக்கின்ற, மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் அம்மா அவர்களினுடைய ஆட்சிக்குக் கிடைத்திருக்கிற ஒரு பெரிய வெற்றி என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, mini power pumps–ஐப்பற்றி முதலிலேயே சொன்னார்கள். பெண்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக mini power pumps–ஐக் கொண்டுவந்து, ஏழை மக்களினுடைய பாராட்டைப் பெறக்கூடிய அளவுக்கு இந்த உன்னதத் திட்டத்தை கொண்டு வந்து சாதனை படைத்திருப்பதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதனைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதுபோலவே, Roof Top Rain Water Harvesting – மழை நீரைச் சேகரிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்து, அதை இந்தியாவிலேயே நாம்தான் வெற்றிகரமாக முதன்முதலாக நடைமுறைப்படுத்தியிருக்கிறோம் என்ற சாதனையை அம்மா அவர்களினுடைய முயற்சியால், அம்மா அவர்களுடைய திட்டத்தால், இதைச் சாதனையாக நடைமுறைப்படுத்தியிருக்கிறோம் என்பதனையும் நான் கூறிக்கொள்ள விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் எண்ணற்ற சாதனைகளை நடைமுறைப்படுத்தி, இந்தியாவிலேயே முதல் நிலை மாநிலம் தமிழகம் என்ற நிலையை உருவாக்கக்கூடிய அளவிற்கு நிர்வாகத்தில் செம்மையைக் கடைப்பிடித்திருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, நிதி நிர்வாகத்தில் நேர்மை, தொலைநோக்குச் சிந்தனை, ஆழ்ந்த அறிவு நிறைந்த அணுகுமுறை இவற்றை மேற்கொண்ட காரணத்தால், திவாலாகும் நிலையிலிருந்த தமிழகத்தை புரட்சித் தலைவி அம்மாவைத் தவிர வேறு எவரொருவர் 2001 ஆம் ஆண்டில் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்திருந்தாலும், தமிழகம் திவால் ஆவதை, தமிழகம் நிதிச் சீரழிவில் தத்தளித்து, தடுமாறி திவால் ஆவதை யாராலும் காப்பாற்றியிருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

உள உரம் மிக்க அம்மா, அறிவு நிறைந்த அம்மா, தொலைநோக்குச் சிந்தனை மிக்க அம்மா, ஏழைகளின் மீது அக்கறை உள்ள அம்மா, அம்மாவின் வளர்ச்சித் திட்டங்களின்மீது அக்கறை உள்ள அம்மா, அம்மாவின் சாதனை, தமிழகம் இன்று, முதல் நிலை மாநிலம் என்ற சாதனை, அதற்கு வித்திட்டதே நிதி நிர்வாகம், அந்த நிதி நிர்வாகம் இவ்வளவு செம்மையாக வந்ததற்கு வித்திட்டதே மாண்புமிகு அம்மா அவர்கள் என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை அவை ஏற்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், 'அரசில் முக்கியமான பதவிகள் பல காலியாக உள்ளன' என்று குறிப்பிட்டார். அவர் உள்ளன, நிரப்பப்படாமல் உள்ளன

குறிப்பிட்டவற்றில், திரு. சுகவனேஷ்வர், அதாவது முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள் ஓய்வு பெற்றபோது TIDCO, C.M.D. ஆக இருந்தார் என்று குறிப்பிட்டார். திரு. சுகவனேஷ்வர் அவர்கள் ஓய்வு பெற்றபோது அவர் Chairman, TIIC ஆக இருந்தார். அந்தப் பதவியில் ஏற்கெனவே திரு. ஆர். பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவரை நியமித்து நீண்டகாலம் ஆகிறது. அதன் பிறகு Tamil Nadu Warehousing Corporation, Chairman and Managing Director பதவி காலியாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டார். ஏற்கெனவே திரு. தீபக் ஜெயின் என்ற அதிகாரி அதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிற்பகல் 1–25

மேலும், Commissioner, Agriculture Income Tax என்ற பதவி காலியாக இருப்பதாக இங்கே திரு. ஸ்டாலின் குறிப்பிட்டார். Agriculture Income Tax என்ற வரியையே இரத்து செய்தாகிவிட்டது. ஆகவேதான் இந்தப் பொறுப்பை நிரப்ப அவசியமில்லை என்று அரசு விட்டு விட்டுள்ளது.

School Education, Higher Education ஆகிய இரண்டு பொறுப்புகளையும் நிர்வாக வசதி கருதி ஒரே செயலாளர் இப்போது கையாளுகிறார். ஆகவேதான், தனித்தனியாக யாரையும் நியமிக்கவில்லை. ஆகவே, திரு. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன பல பொறுப்புகளுக்கு ஏற்கெனவே அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். சில பொறுப்புகளை பொறுத்தவரை, நிர்வாகக் காரணங்களுக்காக இரண்டு பொறுப்புகளையும் ஒன்றாக இணைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

இன்னும் சில பொறுப்புகள் அண்மையில்தான், மிக அண்மையில்தான் காலியாகி உள்ளன. அவற்றிற்கும் விரைவிலேயே அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். திரு. ஆற்காடு வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே ஒன்றுமே நடைபெறவில்லை, எல்லாம் இந்த ஆட்சியிலேதான் நடைபெற்றது என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினைக்குள்ளே இப்போது நான் நுழையவில்லை. ஆனால், நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது, 1997–98 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சிக்கு தி.மு.க. ஆட்சியிலே நிதியே ஒதுக்கவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது அந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே



அந்த Demand குறித்த புத்தகம், அதிலே ஊரக வளர்ச்சிக்கு மட்டும் 249 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டது. அது போதாது என்று நகர்ப்புற ஊராட்சி அமைப்புகளில் சுமார் 65 சதவிகித அமைப்புகள் தங்களால் பராமரிப்புச் செலவினத்தைக்கூட சரிகட்ட முடியாத நிலைமை உள்ளது. நிதிகளைப் பகிர்ந்தளிப்பதன்மூலம் பேரூராட்சிகளுக்கு ஆண்டுக்கு ரூபாய் 100 கோடியும், நகராட்சிகளுக்கு ரூபாய் 80 கோடியும், மாநகராட்சிகளுக்கு ரூபாய் 80 கோடியும் மாநில அரசால் அளிக்கப்படும் என்று சொல்லி, அந்த நிதி அளிக்கப்பட்டு மேயராக இருந்தவர்கள், நகராட்சி மன்றத் தலைவராக இருந்தவர்கள் எல்லாம் அந்த நிதியைப் பயன்படுத்தி பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 கோடிக்கு மேல் நீங்கள் கொடுக்க வேண்டியதை கொடுக்காமல் பாக்கி வைத்துவிட்டு சென்று விட்டீர்கள். ஓரளவிற்குத் தந்திருக்கிறீர்கள். ஆனால், பாக்கி வைத்து விட்டு சென்றீர்கள். அதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே விவசாயத்திற்கு நிறைய செய்திருப்பதாகச் சொன்னார்கள். இலவச மின்சாரத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், சுயநிதித் திட்டத்திலே மின் இணைப்பு பெறக்கூடிய விவசாயிகளுக்கு இதுவரையிலே இலவச மின்சாரமே கிடைப்பதில்லை. அவர்களுக்கு வழங்கப்படவும் இல்லை. அதைத் தொடர்ந்து அவர்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா? அதே நோக்திலே விவசாயிகள் கிணறு வெட்டிய பிறகு இங்கே seniority அடிப்படையிலே காத்துக் கொண்டு, 15 வருடம், 20 வருடம் மின் இணைப்புப் பெறாமல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுயநிதித் திட்டத்தினாலே விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசு இரத்து செய்யுமா என்பதையும் இங்கே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் 270 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்ட அத்திக்கடவு–அவிநாசி குடிநீர்த் திட்டமானது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் தனித் தனிப் பிரச்சினைகள். மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாட்டிலே மட்டுமில்ல, ஒட்டுமொத்தமாக இந்தியாவிலேயே இன்றைக்கு நீராதாரம் என்பது குறைந்து கொண்டு வருகிறது. ஆகவே, பசுமைத் திட்டம் என்பது நாட்டிலே செழித்தால்தான் மழை பெய்யும். அதன்மூலமாக நீராதாரத்தை உருவாக்க முடியும் என்கிற பொதுவான கொள்கையில் இன்றைய தினத்திலே எல்லா அரசுகளும்—மத்திய அரசும், மாநில அரசுகளும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. இச்சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு, நல்ல உள்ளத்தோடு இந்த 10,000 சாலைப் பணியாளர்களை ஒரு மறு ஆய்வு செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளுங்கள். நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் முடிவுற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (14-3-2005) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதும் இல்லை—

226636
சென்னை-600 079

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.